


நீமோ தலைவன் கவலையாய் தூரதிஷ்டிக் கண்ணாடியால் பார்க்கிறான்.

OXFORD TAMIL NOVELS

# TWENTY THOUSAND LEAGUES Under the Sea

By JULES VERNE

---

# சமுத்திரத்தின் கீழ் இருபதினாயிரம் யோசனை ஆழம்

ஜூலிஸ் வெர்ன் எழுதியது

---

ஹாடர் அண்டு ஸ்டௌடன் கம்பெனியாருக்காக
ஆக்ஸ்பர்ட் சர்வகலாசாலை பிரெஸாரால்
பிரசுரப்படுத்தியது

பொம்பாயும் மதிராஸும்

1914

Price As. 9] [விலை அணா 9

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

# சமுத்திரத்துக்குள் இருபதினாயிரம் யோசனை ஆழம்.

## அத்தியாயம் 1.

### ஒரு அசைகிற மலை.

சுமார் ஐம்பது வருஷத்துக்கு முன்னே, ஐரோப்பாவில், கடற்கரை யோரங்களிலுள்ள பட்டணங்களிலும், கொஞ்சதூரத்திலுள்ள உள்நாட்டிலும், ஜனங்களுக்கு வெகு கவலையை உண்டாக்கிய சம்பவம் ஒன்று உண்டு. அதைப்பற்றிக் கேட்கக் கேட்க விநோதமாயிருக்கும். முக்கியமாய் வியாபாரிகளும், மாலுமிகளும், கப்பல்களுக்கு சொந்தக்காரர்களும் இந்த விஷயத்தில் திகிலடைந்தார்கள். இந்த பீதி ஐரோப்பாவில் மாத்திரமல்ல, அமெரிக்காவுக்கும் பரவியது. வர வர, அந்தக் கண்டங்களிலுள்ள ராஜாங்கங்களும் வெகு கவலையுடன் பிரஜைகளுக்குண்டான கஷ்டத்தை நீக்க வழி தேடினார்கள்.

வாஸ்தவத்தில், யாத்திரை செய்யும்போது, சமுத்திரத்தில் எல்லார் திர்ஷ்டிக்கும் பூதாகாரமான ஏதோ ஒரு வஸ்து காணப்பட்டுக் கொண்டிருந்தது. அது திமிங்கிலத்தைப்பார்க்கிலும் பெரியதாயும், அதிக வேகமாய் நீந்துவதாயும், நீண்டு பெருத்துமிருந்தது. மினுமினுப்பூச்சியின் பிரகாசத்தைப்போல், அடிக்கடி

அதன் தேகத்திலிருந்து பளிச் பளிச்சென்று வெளிச்சம் தோன்றும். வெவ்வேறிடங்களில் மாலுமிகள் இந்த வஸ்துவைக்கண்டு, அதன் தோற்றத்தைச் செவ்வையாய்க் குறித்து, பின்னர் ஒப்பிட்டுப் பார்த்தபோது, ஏறக்குறைய ஒரே வித ஜீவபிராணியை அவர்களெல்லாரும் கண்டதாக ஏற்பட்டது. ஒன்று நிச்சயம்—இவ்வித கடல் மிருகத்தை இதுவரையில் ஒருவரும் பார்த்ததுமில்லை, அதைப்பற்றிக் கேட்டதுமில்லை.

தாங்கள் உரைப்பதை மற்றவர்கள் நம்புவார்களோ, மாட்டார்களோ என்று சிலர் பயந்து கொண்டு, அது இருநூறு அடி நீளந்தான் இருக்குமென்று சொன்னார்கள்; மனோதைரியம் அதிகமாயிருப்பவர்கள் மூன்றுமைல் நீளமும் ஒருமைல் அகலமுமுள்ளதென்றார்கள்.

அப்பேர்ப்பட்ட ஜீவபிராணி நிஜமாய் இருந்ததென்பதற்கு ஒருவித சந்தேகமுமில்லை. 1866-ம் வரு ஜூலை 20-ம் தேதியில் ஹிக்கின்ஸன் என்னும் நீராவிக்கப்பலிலுள்ளவர்கள் ஆஸ்திரேலியா கண்டத்துக்கு ஐந்து மைல் கிழக்கே இதைக் கண்டு ஆச்சர்யப்பட்டார்கள். பேக்கர் என்னும் கப்பல் தளகர்த்தன் இதை முதல் முதல் கண்டபோது, இது வரையிலும் ஒருவரும் அறியாத சிறுமலையென்று எண்ணி, அதிருக்கும் ஸ்தலத்தை நன்றாய்க் குறித்துக் கொண்டான். அதேயிடத்திலிருந்து எஞ்சினிலிருந்து மேலே புகைகிளம்புவது போல், நூற்றைம்பதடி உயரத்துக்கு ஆகாயத்தில் ஜலம் கிளம்பிக் கீழே கொட்டியது.

அதே வருஷத்தில், அதேமாசத்தில், மூன்று நாளைக்குப் பின், பஸிபிக் சமுத்திரத்திலும் இந்த விநோ

தமான காட்சிகாணப்பட்டது. பதினைந்து நாளைக்குப் பிறகு, இதற்கு ஆறாயிரம் மைல் தூரத்தில் மறுபடியும் இதே விநோதத்தை வேறு மனிதர்கள் கண்டார்கள். இந்தக் கப்பல்களிலிருந்தவர்கள் தூரத்திலிருந்து அதன் நீளத்தைக் கணக்கிட்டதில், அது சுமார் மூந் நூற்றைம்பதடி நீளமிருக்கும் என்று தீர்மானித்தார்கள். மனிதர்களுக்குத் தெரிந்தவரையில், திமிங்கிலங்கள் நூற்றிரண்டடி நீளத்துக்குமேல் இருந்திருக்கிறதாகத் தெரியவில்லை.

ஒரு சமயத்தில், “எ..ரு” என்னும் கப்பலும் இந்தக் கடல்மிருகமும் ஒன்றையொன்று மோதியது. இவ்விதம் ஒன்றின்பின் ஒன்றாக விஷயங்கள் பகிரங்கமாய்த் தெரியவே, படித்தவர் படிக்காதவர், சாஸ்திரஞானமுள்ளவர் இல்லாதவர், சமஸ்த ஜனங்களும் இந்த வேடிக்கை இன்னதென அறிய ஆசைப்பட்டார்கள்.

இங்கிலாந்து, அமெரிக்கா, ஜர்மனி தேசங்களிலுள்ள ஜனங்கள் இந்த சமாசாரத்தை அலக்ஷியம் பண்ணாமல், மென்மேலும் அதன் விஷயத்தை விசாரித்தறியத் துடங்கினார்கள். பெரிய பட்டணங்களில், அதைப்பற்றி எங்கேயும் பேச்சு ஜாஸ்தி; சோற்றுக் கடைகளிலும், காப்பிஹோட்டல்களிலும், அதன்மேல் ஜாவளி கட்டிப்பாட ஆரம்பித்தார்கள்; வர்த்தமான பத்திரிகைகளில் பரிகாசம் பண்ணினார்கள்; நாடகசாலைகளில் தமாஷ்செய்தார்கள். அதன் பேச்சுப் பேசாத இடமில்லை. இதன் சம்பந்தமாக, இதுவரையிலும் கண்டறியாத கேட்டறியாத அனேக பிராணிகளின் படங்களைப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்து, அவைகளைப்

பற்றி வேடிக்கை வேடிக்கையான கதைகளும் சொன்னார்கள்

சாஸ்திரக்ஞான அபிவிர்த்திக்காக ஏற்பட்டிருக்கும் சபையாரும் வெகு உற்சாகமாய் விசாரிகக ஆரம்பித்தார்கள். கல்வியறிவில் தேர்ந்தவர்களாயினும் நுட்பபுத்தி யுடையவர்களாயினும், அவர்களுடைய சிறுபிள்ளைத்தனம் சில சமயங்களில் வெகு ஜாஸ்தியே. இங்கிலாந்தில் ஒரு வெகு பெரிய சபையில், ஒரு புத்திமான் இறந்த மீன் உயிர்மீனைக் காட்டிலும் ஏன் அதிக கனமாயிருக்கிறதென்று ப்ரச்னம் போட்டான். சபையார் வெகுகாலம் யோசனை பண்ணியும், தீர்மானம் ஒன்றும் செய்யமுடியவில்லை. கடைசியாய் ஒருவன் ப்ரச்ன விஷயம் வாஸ்தவந்தானோ—அதாவது. உயிரில்லா மீன் உயிருள்ள மீனைப்பார்க்கிலும் அதிக பளுவுள்ளதென்பது உண்மையோ, என்றுகேட்க, மற்றவர்கள் 'அல்ல' வென்று கண்டு, வெட்கமடைந்தார்கள். இதே விதம் இந்த அபூர்வ பிராணியைப்பற்றி வித்வான்கள் ஒருவரோடொருவர் அதிகமாய் வாய் கலந்தார்கள்; சிற்சில சமயங்களில் கையும் கலந்தார்களாம். ஆறுமாச காலமாய்ப் பத்திரிகைகளில் இந்த யுத்தம் நடந்துவந்தது. குடிவெறியே ஜாஸ்தியான மாலுமிகள் கண்டதாகக் கூறும் ஆச்சரிய பிராணிகளெல்லாம் உண்டென்று நம்பி அவைகளைப்பற்றி விசாரிக்கப்புகுவது பிசகென உரைப்பவர் சிலர். சமுத்திரவிஷயம் அவர்கள் அறிந்த விதம் வேறொருவரும் அவ்வளவு அறிந்தவரில்லையென்றும், நமக்குத்தெரிந்த விஷயமெல்லாம் அவர்களிடத்திலிருந்துதான் நாம் கற்றுக்கொண்டிருக்கிறோ

மென்றும் சொல்லுபவர் சிலர். கடைசியாய், வெகு சாமர்த்திய முள்ள ஒரு பத்திராதிபர், அதிக தமாஷாய் எழுதி, அந்தப் பிராணியைக்கொன்று, யாவரும் சிரித்து வாய் புண்ணாகும்படி செய்துவிட்டார்; அதன் மேல் சாஸ்திரக்ஞர்கள் தலை கிளப்பமுடியவில்லை.

1867ம் வருஷத்தில் கொஞ்சகாலம் இதைப்பற்றி ஒருவரும் அதிகமாய்ப் பிரஸ்தாபப்படுத்தவில்லை. அப்படியிருக்க, திடீரென்று சில விஷயங்கள் தெரிந்து, அபாயத்தினின்றும் விடுவித்துக்கொள்ள என்னவித பிரயத்தனங்கள் செய்யவேணுமென யோஜிக்க வேண்டியதாய்விட்டது. இன்னமும், அதற்குஉயிர் உண்டென ஒருவரும் நினைக்கவில்லை. அது தீவோ, அல்லது மலையோ, கற்பாறையோ ஏதோ ஒன்றாய் இருக்கவேணும்; ஆனால், அதற்கு அசைவுண்டு, அதைத்தகர்க்கவுமுடியாது. அது இன்ன பொருளெனத் தீர்மானிப்பதும் சாத்தியமல்ல—என்றுதான் எல்லாரும் அபிப்பிராயப்பட்டிருந்தார்கள்.

1867 இல், மார்ச்சு மாஸத்தில், "மொரேவியன்" என்னும் கப்பல் ஒரு மலையின்மேல் தாக்கினதாகவும், தாக்கினஸ்தலத்தில் பூகோள சாஸ்திரக்காரர் பரிசுரம் பண்ணியிருக்கும் படங்களிலும் இவ்வித கற்பாறை இல்லையென்றும் தெரியவந்தது.

நீராவியின் பலத்தாலும், காற்றின் ஸாதகத்தாலும், அந்தக்கப்பல் வெகுவேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது. அது வெகு பலமாய்க் கட்டப்படாமலிருந்தால், இந்தத்தாக்கத்தினால் துவாரம்உண்டாகி, சமுத்திரஜலம் சீக்கிரத்தில் உள்புகுந்து, இருநூற்று முப்பத்தேழு

பிரயாணிகளும், மாலுமிகளும் வைவஸ்வத பட்டணம் போய்ச் சேர்ந்திருப்பார்கள். விடியற்காலம் ஐந்து மணிக்கு இந்த அபாயம் நேரிட்டது. கப்பல் உத்தியோகஸ்தர்கள் வெகு ஜாக்கிரதையாய் அந்த ஸ்தலத்தை உற்று கவனித்தார்கள். சமீபத்தில் ஒரு சுழல் தவிர வேறொன்றும் காணப்படவில்லை. கப்பலை நன்றாய்ப்பரிசோதித்துப் பார்த்ததில், அடக்கட்டையின் ஒருபாகம் தெறிபட்டுப் போயிருப்பதாகத் தெரிந்தது.

இந்த சம்பவம் சாதாரணமல்லவாயினும், அதிகமாய் அதைப் பாராட்டாமல் மாலுமிகள் மறந்துபோயிருப்பார்கள். ஆனால், இதேமாதிரி, மூன்று வாரத்திற்குப் பிறகும் நடந்தது. அநேக காரணங்களால் அது அதிக பிரசித்தமாகிவிட்டது.

அங்கிலேயக் கப்பற்காரன் குனர்ட் என்பவன் பெயர் சாதாரணமாய் எங்கும் நன்றாய்த் தெரிந்த பெயரே. லிவர்ப்பூல் பட்டணத்துக்கும் ஹாலிபாக்ஸ் பட்டணத்துக்கும் தபால் கொண்டு போவதற்காக, இந்த பிரசித்த வியாபாரி அநேக பலமான கப்பல்கள் வைத்திருந்தான். இருபத்தாறு வருஷமாய், இவனுடைய கப்பல்களில் ஏறினவர்களுக்கு ஒருவிதமான அபாயமாவது அசௌகர்யமாவது நேரிட்டதேயில்லை.

1867ஞு ஏப்ரில் மாஸத்தில், சமுத்திரம் ஸாத்மீகமாகவும், காற்று மிருதுவாயும் இருந்தது. "ஸ்கோஷியா" என்னும் குனர்டுடைய கப்பல் வெகு வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தது. சாயங்காலம் நாலு மணி; யாத்திரை செய்யும் பிரபுக்களும் பெருமாட்டிகளும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது கட

பலில் ஏதோ வந்து சடுதியில் முட்டினதாகத் தோன்றி னது. முட்டினவஸ்து கூர்மையாக இருந்திருக்கவே ணும். இதை அதிகமாய் ஒருவரும்கவனித்துக் கவலைப் படவில்லை. ஆனால் மேல்தட்டில் உலாவிக்கொண்டிருந்த ஒருவன் "என்ன! உங்களுக்கு ஒன்றும் தெரியவில் லையா? கப்பல் அமிழ்ந்துபோகிறதே!" என்றுகூவினான்.

இதைக் கேட்டவுடன் கப்பலிலுள்ள பிரயாணி கள் நடுங்கினார்கள்; ஆனால், கப்பல் வெகு விமரிசை யாய் கட்டப்பட்டிருந்ததால், அதன் தளகர்த்தன் யாதொரு அபாயமில்லையென்று அவர்களுக்குத் தைரி யம் சொல்லிவிட்டு, கீழே போய்ப் பார்த்தபோது, ஒழுக்கு ஜாஸ்தியா யிருப்பதையும், சமுத்திர ஜலம் அதிகமாய் உள்ளே வந்து கொண்டிருப்பதையும் கண் டான். அதன்மேல் அவன் கப்பல் வேகத்தைக் குறைத்து, சாவதானமாய் லிவர்ப்பூல் துறைமுகம் கொண்டுபோய்ச் சேர்த்தான். கப்பலில் உண்டான அவாரத்தைக் கவனித்துப் பார்த்தபோது, வெகுகடின மான ஆயுதத்தால்தான் அவ்வளவு பெரிய தொண்டி உண்டாயிருக்க வேணுமென்று சாஸ்திரக்ஞாள் அபிப் பிராயப் பட்டார்கள். ஆனால் அவ்வளவு பெரிய ஓட் டையை உண்டாக்கிவிட்டுத் திரும்பி அவ்வாயுதம் எவ் விதம் வெளியே வந்தது என்பது யூகிப்பது வெகுகஷ்ட மாயிருந்தது.

இது முதற்கொண்டு கப்பல்களுக்கு ஏதாவது அபாயம் உண்டாய், அதற்குக் காரணம் இன்னதெனத் தெரியாவிடின், இந்த ராக்ஷசக்கடல்ஜெந்துதான் கார ணம் என்று சொல்வது வழக்கமாகிவிட்டது. வருஷம்

ஒன்றுக்குச் சுமார் மூவாயிரம் கப்பல்கள் சேதமடைவதில், இருநூறு கப்பல்களைப்பற்றி ஒன்றுமே தெரிகிறதில்லை. இந்த இருநூறு கப்பல்களை நாசம்பண்ணி சமுத்திரத்தில் அமிழ்த்துவது இந்தப் பிராணியென்றே பெரும்பாலும் ஜனங்கள் நம்பிவந்தார்கள். இந்த அபிப்பிராயம் பரவப்பரவ, ஒரு கண்டத்திலிருந்து மற்றொரு கண்டத்துக்குப் போவதற்கு மனிதர் பயந்தார்கள். எத்தனை காலம் இப்படிப் பயந்திருக்க முடியும்? பிரம்ம ராக்ஷஸ்மாதிரி, பேரைச் சொன்னாலே திகில் உண்டாக்குவதான இந்தப் பிராணியை உடனே அழிக்க வேணுமென ஜனங்கள் தத்தம் ராஜாங்கத்தாரை வெகுவாய் வேண்டிக் கொண்டார்கள்.

---

## அத்தியாயம் 2.

---

### இரண்டுகக்ஷியும்.

இந்த விஷயங்கள் நடந்துகொண்டிருந்தபோது, நான் அமெரிக்காக் கண்டத்தில் காட்டுச்சீமையில் இயற்கை சாஸ்திர விசாரணைக்காகப் போய்த்திரும்பினேன். பிரெஞ்சு தேசத்து ராஜாங்கத்தார் அந்த வேலையாக என்னை அனுப்பினார்கள். ஆறுமாஸகாலம் காட்டிலிருந்து, பின்னர் மார்ச்சுமாஸக் கடைசியில் நியூ யார்க் என்னும் பிரதான பட்டணத்துக்கு வந்து சேர்ந்தேன். காட்டில் கண்டறிந்த சாமான்கள் அனேகம் கையோடு கொண்டுவந்தேன். சில தாவர்க்கக்கைச் சேர்ந்

தவை; சில தாவரவர்க்க சம்பந்தமானவை; சில ஜீவ பிராணிகளுடைய தேக தத்துவத்தை திர்ஷ்டாந்தப் படுத்தும் பொருள்கள்.

பிரஸ்தாப விஷயம் முழுவதும் எனக்குத் தெரியும். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பிரசுரம் செய்யும் பத்திரிகைகளில் இதைப்பற்றி சவிஸ்தாரமாய்க் கேட்டிருக்கிறேன். நான் நியூயார்க் நகரத்துக்கு வந்தவுடன், கற்றறிந்தோர் அதைப்பற்றி தாராளமாய்ப் பேசுவதைக் கேட்டேன். அது மிதந்து போய்க்கொண்டிருக்கும் தீவு என்றும், தகர்க்க முடியாத கற்பாறை யென்றும் சொல்லுவது பிசகு, என்று எண்ணி ஜனங்கள் அவ்விதம்பேசுவதை ஒழித்தார்கள். அதுபாறையாயிருந்தால், அதை வெகு வேகமாய்த் தள்ளிக்கொண்டுபோக அதற்குள் ஒரு இயந்திரம் இருக்க வேணுமே. அதெப்படி சாத்தியம்? அநேகவிதமாய் அதை விளக்கப்பார்த்து, கடைசியாய் இரண்டு அபிப்பிராயங்கள் தங்கின. சிலர் அது வெகு பெரிய ஜீவபிராணி யென்றார்; சிலர் ஆச்சரியப் படும்படியான, தள்ளுகிற சக்தியோடு கூடிய, சமுத்திரத்துக்குள் ஓடும், கப்பல் என்றார். இந்த இரண்டாவது அபிப்பிராயத்தையும் சீக்கிரத்தில் கைவிட வேண்டியதாகி விட்டது. அவ்வளவு அபார தள்ளும்சக்தியுடைய இயந்திரத்தைக் கண்டு பிடித்தவர் யார்? உலகத்தில் ஒருவருக்கும் தெரியாமல் இரகஸ்யமாய் அந்த இயந்திரத்தை வைத்துக்கொண்டிருப்பதின் கருத்தென்ன?

இவ்வளவு நாசம் பண்ணும் சக்தியுடைய இயந்திரத்தை உண்டாக்க ஏராளமான பணம் வேணும். அவ்

ளவு பணம் செலவழிக்க சக்தியுள்ளவர்கள் யார்?
ராஜாங்கத்தாரே தவிர வேறொருவராலும் அவ்வளவு
செலவை சமாளிக்க முடியாது. ஒரு ராஜாங்கத்தார்
அதை எத்தனித்தால், மற்றவர்களுக்குத் தெரியாமல்
வெகு இரகஸ்யமாய் வைக்க இக்காலத்தில் முடி-
யுமோ? தவிர, எல்லா ராஜாங்கத்தாரும் தங்களுக்கு
அந்த விஷயம் கொஞ்சமும் தெரியாதென்று பரிசுரம்
செய்தார்கள். ஆகையால், அது கடலுக்குள் ஊடுறுத்
துச் செல்லும் ஒருவிதக் கப்பல் என்னும் யூகத்தை
ஜனங்கள் தள்ளிவிட்டார்கள்.

நான் நியூயார்க்குக்கு வந்தவுடனே ஜனங்கள்
என்னுடைய அபிப்பிராயத்தைக் கேட்டார்கள். கொஞ்
சகாலத்துக்கு முன்னமே பிரெஞ்சு பாஷையில் "சமு
த்திரத்தின் பாதாள இரகஸ்யம்" என்று பெயர் கொண்
ட இரண்டு கிரந்தங்கள் நான் எழுதியிருந்தேன். அத
னால் தான், எனக்கு அந்த விஷயம் தெரிந்திருக்கு
மென்று என்னை விசாரித்தார்கள். விஷயம் அசாத்
தியமென்றும், அதைக் கண்டதாய்ச் சொல்லுபவர்
புரட்டென்றும், அதை நம்புகிறவர்கள் மௌட்யா
ளென்றும் நான் சொல்லிப் பார்த்தேன். என்னுடைய
அபிப்பிராயம் பிசகு என்று அநேக ருஜூக்களைக்
கொண்டு ரூபிக்க, நான் விஷயத்தை நன்றாய்க் கவனி
த்து, பின் என் அப்பிராயத்தைத் தெரிவித்தேன்.

"இது சமுத்திரத்தில் வசிக்கும் ஓர் பிராணியாய்
இருக்கவேணும். சமுத்திரத்தில் தாழ்ந்த பள்ளத்தாக்
குகளைப்பற்றி நமக்கு ஒன்றுமே தெரியாது. எந்த
விதத்தினாலும் அடிவரையிலும் போனவர்கள் இல்லை.

வெறிந்த விதத்தாலும் அதை அறிந்தவர்களு மில்லை. அங்கே என்னநடக்கிறது? தரை மட்டத்துக்கு பன்னிரண்டு, பதினைந்து மைலுக்குக்கீழே எந்த வித ஜெந்துக்கள் வசிப்பது ஸாத்தியம்? அப்படியிருக்கும் பிராணிகளின் தேகக்கூறென்ன? இந்தவிஷயத்தில் எல் லாரும் நிரக்ஷரகுக்ஷிதான்.

உலகத்திலுள்ள ஜீவபிராணிகள் எல்லாவற்றையும் நமக்குத்தெரியாதென்றால், சமயத்துக்குத் தகுந்தபடி சில ஜெந்துக்கள் இருப்பதாக ஒப்புக்கொள்ளவேணும். அவைகள் எவ்வளவு பாதாளத்தில் குடியிருப்பனவாயி னும், தரைமட்டத்துக்கு சிற்சிலசமயங்களில் ஏதோ காரணத்தால் அல்லது காரணமில்லாமலும் வருவன வாய் ஒப்புக்கொள்ளவேணும்.

பிரபஞ்சத்திலுள்ள எல்லாப்பிராணிகளையும் நமக் குத்தெரியுமென்றால், அப்போது ராக்ஷஸ உருவமுள்ள மீன் ஒன்று உண்டென்பது கஷ்டமல்ல. ஸாதாரண சமுத் திரக்காண்டாமிருகம் அறுபது அடி நீளம் உள்ளது. இதைப்போல் பத்துமடங்கு நீளம் உள்ள ஜெந்துவின் ஓடும்சக்தியும், நாசம்பண்ணும் சக்தியும் பத்துமடங்கு அதிகமாயிருக்கும் என்று நிதானிப்பது கஷ்டமல்ல. அப்பேற்பட்ட மிருகம் எவ்வித நீராவிக்கப்பலையும் துளைத்துத்துவாரம் செய்யக்கூடியது என்று நம்புவது சுலபம். எல்லாருக்கும் தெரிந்தபடி, “நார்வால்” என்று சொல்லப்படும் மீனின் தேகத்தில் தந்தத்தா லான ஒருகத்தி அமைந்திருக்கிறது. கடினத்திலும், பல த்திலும் அதன் பல் எஃகைக்காட்டிலும் தாழ்ந்ததல்ல. அதனுடைய அகலமும் உயரமும் வெகு ஜாஸ்தியே.

இதைப்பார்க்கிலும் பத்து மடங்கு பெரியதாய், பத்து மடங்கு அதிக சக்தியுள்ள ஆயுதத்தோடு கூடி, மணி ஒன்றுக்கு இருபது மைல் ஓடினால், அந்த சமயத்தில் அப்பேர்ப்பட்ட மிருகம் எவ்வகையான நாசம் உண்டாக்காது?"

இவ்விதம் பத்திரிகைகளுக்கு நான் எழுதியது அநேகம் பேருக்குத் திருப்தியாயிருந்தது. அநேகர் அதை நம்பவுமாரம்பித்தார்கள். அது மானஸீக சிந்தனைக்குத் தாராளமாய் இடம் கொடுத்து, கோடி வருஷங்களுக்கு முன்னே, தரையில் வஸித்த குரங்குகளும் பறவைகளும், மிருகங்களும், ஊர்வனவும், இப்போது நம்புவதற்கும் கஷ்டமான அவ்வளவு அதிக பருமனோடிருந்தன என்பதற்குத் தகுந்த அத்தாக்ஷியிருக்கிறதென்பது எல்லாருக்கும் தெரியுமே. தரையோ மாறிக்கொண்டிருக்கிறது. சமுத்திரம் அப்படியல்ல. ஆகையால் அதில் அநேகயுகங்களாக ராக்ஷஸகணத்தைச் சேர்ந்த மிருகங்கள் இருந்து நாளுக்கு நாள் வளர்ந்து அவைகளுடைய வம்சம் விர்த்தியாகிறது என்று ஏன் நம்பக்கூடாது?

"இது சாஸ்தரீகமாய் இருக்கிறது. இப்படி விஷயங்களை விளக்குவதுதான்சரி. இவர் சொல்வதை அனுசரித்து, மேன்மேலும் விசாரணை செய்தால், எதுவும் தெளிவாய்விடும்" என்று சிலர் அபிப்பிராயப்பட்டார்கள். அவர்கள் சாஸ்திரத்தில் மாத்திரம் ஆசையுள்ளவர்கள். ஜீவகாலக்ஷேபத்தைப்பற்றி அவர்களுக்குக் கவலையே இல்லை. ஆனால் வேறுசிலர் 'இவ்வித மிருகத்தைக் கடலில் வஸிக்க விட்டு நாம் எவ்விதம் உயிர் தப்ப முடி

யும்? கடல் யாத்திரை செய்யாமல் வியாபாரம் எங்ஙனம் நடந்தேறும்? இந்தப்பெரும்பயத்தை ஸதா வைத்துக்கொண்டு பிரயாணம் செய்யமுடியுமோ? என்ன செலவானாலும், எல்லா ராஜாங்கத்தாரும், கப்பல் கூட்டத்தாரும் சேர்ந்து செலவிட்டு இந்த ராக்ஷஸ வம்சத்தை வேரோடு ஊடறுத்தல்வேண்டும்" என்றுசொல்வார்கள்.

உலகத்திலுள்ள மற்ற ஜாதியாரெல்லாம் யோஜனை செய்துகொண்டு, தாமஸித்துக் கொண்டிருக்கும் போது, காரியம் இயற்றுவதே கண்ணாயிருக்கும் அமெரிக்கர்கள் இந்த விஷயத்திலும் தங்கள் ஸாமர்த்தியத்தைக்காட்டினார்கள். நியூயார்க் நகரத்தில் இதற்கு வேண்டியபிரயத்தனங்கள் சர்க்காரே ஆரம்பித்துவிட்டார்கள். வாயுவேகத்துக்கு சமானமான வேகத்தோடுகூடிய 'லிங்கன்' என்னும் ஒரு கப்பல் தயாரானது. "கல்லைக்கண்டால் நாயைக்காணோம், நாயைக்கண்டால் கல்லைக்காணோம்" என்பதுபோல், இவ்வளவு சிரமப்பட்டு கப்பல் தயாராயிருக்க, அந்த மிருகம் வெளியில் வாராமல் ஒளிந்துகொண்டது. இரண்டு மாஸமாய் அதன் செய்தி ஒருவர் காதிலும் விழவில்லை. முன்னும் பின்னும் போய்க்கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான கப்பல்களில் ஒன்று கூட அதை எங்கேயும் பார்க்கவில்லை. தன்னைப் பின்தொடர்வதற்காக அனுப்பும் தந்தி சமாசாரத்தைத்தடுத்து, அதன் விஷயத்தை அறிந்துகொண்டு, அந்தமிருகம் வெளியில் தலை காட்டவில்லையென்று, வேடிக்கையாய்க் கோமாளிப் பத்திரிகைகள் எழுதி, படங்களும் பிரசுரம் செய்தன.

கடலில் வெகுகாலம் யாத்திரை செய்வதற்கு வேண்டிய சாமக்கிரியைகள் சேர்த்து, பூதாகாரமான மிருகத்தைப் பிடிப்பதற்கு வேண்டிய உபகரணங்களை அமைத்து, "லிங்கன்" என்னும் கப்பல் தயாராய் இருந்தது. எந்தத் திக்கில் புறப்பட்டுப் போவதென்பது மாத்திரம் ஒருவருக்கும் தெரியவில்லை. இப்படியிருக்கையில், அமெரிக்காவிலிருந்து சீன தேசத்துக்குப் போய்க் கொண்டிருந்த நீராவிக்கப்பலொன்று அந்த மிருகத்தைத் தென்பசிபிக் சமுத்திரத்தில் கண்டதாய் ஜூலைமாதம் இரண்டாம் தேதியில் எங்கேயும் விளம்பரம்போட, ஜனங்களுக்குத் திகிலும் ஆசையும் அதிகரித்தது. "லிங்கன்" கப்பலுடைய தலைவனை "பாரகட்" என்பவன், கடல் யாத்திரையில் நிபுணன். இருபத்துநாலுமணி நேரத்துக்குள் கப்பல் புறப்படவேணுமென அவனுக்கு உத்தரவுண்டானது. உணவும் மற்ற சாமானும் கப்பலில் ஏற்றப்பட்டன. வேண்டிய அளவுக்கு நிலக்கரி குவிந்தது. உத்தியோகஸ்தரும், வேலைக்காரர்களும் சித்தமாயிருந்தார்கள். நெருப்பு மூட்டி, வெள்ளாவி உண்டாக்கிக்கொண்டு, புறப்பட வேண்டியது தான்பாக்கி. ஜனங்களுடைய கவலை அதிகமாய், ஒரு க்ஷணமும் தாமதிக்க அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இதையெல்லாம்விட, பாரகட் தளகர்த்தனே எப்போது புறப்படலாமென்று துடித்துக்கொண்டிருந்தான். கப்பல் புறப்படுவதற்கு மூன்றுமணிக்குமுன் எனக்கு இந்தக் கடிதம் வந்தது.

"நியூயார்க் பட்டணத்தில் ஐந்தாவது தெரு ஹோடலில் தங்கியிருக்கும் 'ஆரனாக்ஸ்' அவர்களுக்கு

போர்க்கப்பல்களின் பிரதானியான ஹாப்ஸன் எழுதிக் கொள்வது:

'லிங்கன்' என்னும் கப்பல் எதற்காகப் புறப்பட்டுப் போகின்றதோ, அந்த விஷயத்தில் உமக்கு சிரத்தையிருந்து அதில் கூடப்போக ஸம்மதம் உண்டானால், அமெரிக்காவின் ஐக்கியமாகாணத்தார் அதிக சந்தோஷப்படுவார்கள். பிராஞ்சு தேசத்தார் அனுப்பிய பிரதிநிதியாக உம்மை பாவிப்பார்கள். 'பாரகூட்' தலைவன் கப்பலில் உமக்கு வேண்டிய சௌகர்யங்களை ஏற்படுத்துவான்."

---

## அத்தியாயம் 3.

---

### "எஜமான் மனதின்படி"

இந்தக் கடிதம் வருவதற்கு ஒரு க்ஷணத்துக்கு முன்னாலேயும் காண்டா மிருகத்தைத் தேடிப்போக உத்தேசம் எனக்கு இல்லவேயில்லை. ஆனால் கடிதம் வந்தவுடன் எனக்கிருந்த உற்சாகத்தைச் சொல்லி முடியாது. இந்த மிருகத்தைக் கண்டுபிடித்து அதை நாஸம் பண்ணி ஜனங்களுடைய கஷ்டத்தை நிவிர்த்திப்பதுதான் நான் ஜன்மமெடுத்ததற்குப் பலனாகுமென எனக்குத் தோன்றினது. என்ன சிரமப்பட்டாலும் என்னுடைய சுய தேசத்துக்குப் போய், வெகுகாலமாய் சேகரித்து வைத்திருந்த அற்புத சாமான் குவியல்களைப் பார்த்துக் களிக்க வேணுமெனக் கொஞ்சகால

மாய் ஆசையிருந்தது. இந்தக் கடிதம் வந்தவுடன், அந்த ஆவலெல்லாம் பறந்துபோய் விட்டது; சிநேகிதர்களைத் திரும்பிப்பார்க்க வேணுமென்றிருந்த ஆசை எங்கேயோ ஒளித்துவிட்டது. இந்தப் பிரயாணத்தினுண்டாகும் என்று நான் எண்ணியிருந்த அபாயமெல்லாம் மனதிலிருந்து மாயமாய் மங்கிப் போய் விட்டது.

தவிர, காண்டாமிருகம் என்னிடத்தில் தயவாயிருந்தால், அங்குமிங்கும் ஓடாமல், பிரான்சு தேசத்துக்கு என் வழிகாட்டக் கூடாது? ஐரோப்பாவுக்கு சமீபத்தில் பிடிபட ஏன் அது இடங் கொடுக்கக்கூடாது? என, மனோராஜ்யம் பண்ணிக் கொண்டிருந்தேன்.

"கான்ஸேல்!" என்று என் வேலைக்காரனை அழைத்தேன்.

அவன் என்னிடத்தில் அதிக விசுவாசமாயிருந்தான்; அவன் தைரியசாலி; அவன்மேல் எனக்குப்பிரீதி அதிகம்; வேலையில் உற்சாகமுள்ளவன்; தேகத்தைக் கருப்புகட்டியாய் நினைக்கிறவனல்ல. என்னுடன் பழகினதினால் சாஸ்திரவிஷயம் கொஞ்சம் அவனுக்குத் தெரியும். பத்து வருஷமாய் நான் போன விடமெல்லாம் அவன் கூடவந்தவன். அதிக காலம் பிரயாணம் செய்ததாயாவது, தனக்கு சிரமம் அதிகமென்றாவது அவன் ஒருக்காலும் முறையிட்டதில்லை. எந்த தேசத்துக்குப் புறப்பட்டுப் போவதானாலும் அவனுக்கு சம்மதம்தான். இதையெல்லாம் விட, அவன் தேகம் வியாதியற்றது; இருப்புக் கம்பிகளையொத்த சதை நிறைந்

தது. அவனுக்கு வயசு முப்பது; எனக்கு நாற்பது. ஆகையால், வயசுக் கிரமத்தில் ஒருவருக் கொருவர் சிநேக முண்டாவது நியாயம். ஆனால் அவனிடத்தில் ஒரு பிசகு உண்டு. "நீர், நீங்கள், என்று என்னிடத்தில் பேசமாட்டான். "அவ்விடத்தில் என்ன உத்தரவாகிறது" என்பான். எப்போதாவது ஒரு சமயத்தில் பேசுவதாயிருந்தால், வேலைக்காரன் இவ்விதம் பேசுவதைப் பொறுக்கலாம். வருஷக்கணக்காய் சமீபத்திலிருந்து வேலை செய்பவன், இம்மாதிரி அதிக உபசாரத்துடன் பேசுவது, எவ்விதம் மனசுக்குத் திருப்தியாயிருக்கும்?

மறுபடியும் அவனை அழைத்தேன். பதிலில்லை. மூன்றாவது தடவை அவனைக் கூப்பிட்டேன்.

"என்னை எஜமான் அழைத்ததுண்டோ?"

ஆம். நம்முடைய சாமான்களைக் கட்டித் தயாராக்கு. இரண்டு மணி நேரத்தில் புறப்படவேணும்.

" அப்படியே, எஜமான் மனசின்படி."

க்ஷணம்கூட தாமஸம் கூடாது. சீக்கிரம் என் பெட்டியில் வழக்கப்படி சாமானை நிரப்பு.

" எஜமான் சேர்த்திருக்கிற சாமான்களையோ?"

அதைப்பற்றி அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்.

" விலை உயர்ந்த சாமான்களாச்சே! எவ்வளவு பணம்கொட்டினாலும், அவைகள் கிடைக்காத வஸ்துக்களாச்சே?"

ஹோட்டல் காரர்கள் அவைகளை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்வார்கள். தவிர, பிராஞ்சு

தேசத்துக்கு அவைகளை அனுப்பும்படியாய்ச் சொல்லி விட்டுப் போகிறேன்.

“ நாம் பிராஞ்சுக்குப் போகவில்லையோ ?

‘ஆம்—தடையென்ன—கொஞ்சம் சுற்றிப் போகிறோம். இந்தக் காண்டாமிருகத்தைப் பற்றிக் கேழ்விப்பட்டிருப்பாயே. அதைத் தேடிக் கொலைத்துவிடத்தான் புறப்படுகிறோம். “சமுத்திரத்தின் பாதாள இரகஸ்யம்” எழுதின நான் எவ்விதம் இந்தப் பிரயத்தனத்தில் ஒத்தாசை செய்யாமல் போகலாம்? கொஞ்சம் அபாயம் கூட ஒருவேளை இருக்கலாம். எல்லாவற்றையும் பார்க்கிலும் ஒரு விஷயம் வெகு திருப்தி. நம்முடைய கப்பல் தலைவனுக்கு பயம் இன்னதென்றே தெரியாது.

“ எஜமான் போனால், நானும் வருகிறேன்.”

நான் சொல்லவேண்டியது ஒன்றுண்டு. கவனித்துக் கேள். இந்த மாதிரிப் பிரயாணங்களில் திரும்பி வந்து விடுவோமென்று நாம் நிச்சயமாய் சொல்லமுடியாது.

“ எஜமான் மனசின்படியே.”

கால் மணி நேரத்தில், பெட்டிகளில் சாமான்கள் போட்டு, எல்லாம் தயாராய்விட்டது. கான்ஸல் எல்லாம் முடித்துவிட்டான்; மறந்துபோவது அவனுக்கு வழக்கமில்லை.

ஹோட்டலுக்குச் சொந்தக்காரனை வரவழைத்து, கணக்குகளைத் தீர்த்து, என் சாமான்களை பிராஞ்சு தேசத்துக்கு அனுப்புவதற்காக வேண்டிய பணமும் அவனிடத்தில் கொடுத்துவிட்டு, கான்ஸலை யழைத்துக்கொண்டு நான் வண்டியிலேறினேன். அநேக

சந்துகள் தாண்டி, முப்பத்து நாலாவது ரேவ் துறைக்கு வந்து அங்கே படகிலேறி, கடைசியாய் ‘லிங்கன்’ கப்பலண்டை சேர்ந்தோம். சமான்களையெல்லாம் ஜாக்கிரதையாய் கப்பலுக்குக் கொண்டுபோய், கான்ஸலைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு நான் கப்பல் தலைவனைப் பார்க்கப் போனேன். என்ன சிரித்தமுகம்! எவ்வளவு மரியாதையும் உபசாரமும்!

நீங்கள்தான் ஆரநாக்ஸோ?

அப்படியே. நீங்கள் ‘பாரகூட்’ தலைவர்தானே?

ஆம். உங்களுடைய அறை தயாராய் இருக்கிறது.

உடனே எழுந்திருந்து அவரிடத்தில் உத்திரவு வாங்கிக்கொண்டு எனக்காக ஏற்பட்டிருந்த அறைக்குள் போனேன்.

“லிங்கன்” கப்பல் கூடியவரையில் காண்டாமிருகத்தைத் தொடர்வதற்குத் தகுந்தபடி அமைக்கப்பட்டிருந்தது. மணி ஒன்றுக்குச் சுமார் பதினெட்டே கால் மைல் போகக்கூடியது. ஒவ்வொருவித சௌகர்யமும் அதில் ஏற்பட்டிருந்தது. இரண்டொரு நிமிஷத்தில் கப்பல் புறப்பட்டது. ஆகையால், கால்மணிநேரம் கழித்து நான் வந்திருந்தால், இந்த ஆச்சர்யமான பிரயாணத்தில் எனக்கொருவித சம்பந்தமும் இருந்திருக்காது. இந்தப்புஸ்தகம் எழுத எனக்கு விஷயமும் கிடைத்திருக்காது.

“லிங்கன்” வெகு கம்பீரமாய்ப் புறப்பட்டது. பக்கங்களிலிருந்த நூற்றுக்கணக்கான தோணிகளில் ஜனங்களிருந்துகொண்டு சந்தோஷத்துடன் ஆரவாரித்தார்கள். குறைந்தது ஐந்து லக்ஷமனிதர்கள் கரையில்

நின்றுகொண்டு "லிங்கன் காரியம் ஜயமடையவேணும்" என மூன்றுதடவைக் கூவிக் கைதட்டினார்கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள் தங்கள் கைச்சவுக்கங்களை பைகளிலிருந்து வெளியில் எடுத்து, "நீங்கள் போகும் விஷயம் சீக்கிரம்பலிக்கவேணும்" என்று அர்த்தமாக அவைகளை வீசிக்கொண்டு நின்றார்கள். கப்பல் கோட்டைகள் பக்கமாய்ப் போனபோது, கோட்டை மதில்களிலிருந்து பீரங்கி வெடிகள் வெடித்தன. இந்த கௌரதையை அறிந்து பாரகுட் தலைவணையும் அமெரிக்கா கொடியை மூன்று தடவை தாழ்த்தி உயர்த்தினான். கொஞ்சதூரத்துக்குள் ஒருகுறுகிய குடாவின் வழிபோகவேண்டியதாய் இருந்தது. அதன் இருபக்கத்திலும் கூடியிருந்த ஜனங்களைக் கணக்கிட முடியாது. லிங்கனை வாழ்த்துவதற்காகவே அவர்கள் குவிந்திருந்ததால், வேகத்தைக் குறைத்து, அவர்களுக்கெல்லாம் நன்றி பாராட்டி, பாரகுட் வெகு சந்தோஷமாய்க் கப்பலை நடத்தினான். அனேக தோணிகள் தங்களுக்குண்டான ஆனந்தத்தைக் காட்டுவதற்காகவே வெகு தூரம் பின்சென்றன. இராத்திரி எட்டுமணியாவதற்குள் நகரத்தைச் சுற்றியுள்ள தீவுகளெல்லாம் தாண்டி "லிங்கன்," காண்டாமிருகத்தின்மேல் படையெடுத்து, வேகமாய் சமுத்ரத்தில் பிரயாணம் புறப்பட்டது.

# அத்தியாயம். 4

## நெட்லாண்ட்

பாரகூட் கப்பல்யாத்திரை செய்வதில் வெகு சாமர்த்தியசாலி. கப்பலுக்குத்தகுந்த தலைவனும், தலைவனுக்குத் தகுந்த கப்பலும், நன்றாய் இரண்டும் அமைந்தன. அவன் வேறு, கப்பல் வேறல்ல. கப்பலைத் தேகம் என்றால், அவனை அதன் ஜீவனென்னலாம்.

காண்டாமிருகமென்பது சமுத்ரத்தில் உண்டோ இல்லையோவெனத் தன்முன் ஒருவரையும் பேசவிடமாட்டான்; அதைப்பற்றிப் பாரகூட்டுக்கு யாதொரு சந்தேகமுமில்லை. ஒரேதீர்மானம்தான்: அதை அழித்துவிடவேண்டும்; அல்லது அதனால் தன் பிராணன்போகவேண்டும். இப்படிச் சங்கல்பம் பண்ணிக்கொண்டு புறப்பட்டிருக்கிறான் இந்தச் சூரன்.

தலைவனுக்குள்பட்ட உத்தியோகஸ்தர்களுடைய அபிப்ராயமும் அப்படியே. பொழுது விடிந்தவுடன், மாலுமிகள் பாய்மரத்திலேறி சுற்றிப்பார்ப்பார்கள். இன்னமும், பஸிபிக் சமுத்ரத்தில் இந்த மிருகம் இருப்பதாகச் சந்தேகப்பட்டுள்ள ஸ்தலங்கள் அணுகவில்லை.

மிருகத்தைக்காட்டினால் போதும், அதை எவ்வளவு பெரியதாயிருந்தாலும் குத்திக் கப்பலில் இழுத்து, துண்டுதுண்டாக வெட்டிவிடுவோம் என்று மாலுமிகள் ஜம்பமாய்ச்சொன்னார்கள். பெரியவனானாலும், சிறியவனாயிருந்தாலும், உத்தியோகஸ்தனோ சோக்ராபையனோ, யாராயினும் முதல்முதல் மிருகத்தைக்கண்டு தன்னிடத்தில் அறிவித்தால், அவனுக்கு இரண்டா

பிராங்டாலர், அதாவது சுமாராய் ஆறாயிரம் ரூபாய் இனாம்கொடுப்பதாய்த் தலைவன் விளம்பரம் செய்தான். இது அவர்களுடைய உற்சாகத்தை வெகுவாய் விர்த்தி செய்தது.

திமிங்கிலம் பிடிப்பதற்காகப் போகும் கப்பல்களிலேகூட, விங்களில் உள்ளிருக்கும் அத்தனை ஆயுதங்கள் இருக்கா. நீண்ட, பலத்த, கூர்மையான ஈட்டிகளும்; விஷம்தோய்த்த அம்புகளும்; பீரங்கிக் குண்டுகளும், நிறையச்சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. இவ்வாயுதங்களைச்சரியாய் உபயோகிக்க வல்ல மனிதரும் அங்கேயிருந்தார்கள். அவர்களுக்குள் நிகரற்ற சக்தியுடையவன் 'நெட்லாண்ட்' என்பவன். ஈட்டியால் குத்துவதில் அவனுக்கு சமானம் அவனே. அவனிடத்திலிருந்து ஒழிப்பிழைக்கும் மிருகம் அபூர்வ சாமர்த்யமுள்ளதாய்த்தான் இருக்கவேணும்.

நெட்லாண்ட் நாற்பது வயதுள்ளவன். ஆறு அடி உயரம்; அகன்ற மார்பு; அதிக பலசாலி; கடுத்த முகம்; பேசுவது கொஞ்சம். கோபம் ஜாஸ்தி. தூர திருஷ்டிக்கண்ணாடியும் அவனும் ஒரு விஷயத்தில் சமானம். எவ்வளவு தூரமாயிருந்தாலும், பொருள் எவ்வளவு சிறிதாயிருந்தாலும் அதைக்கண்டு பிடிக்கும் சக்தி அவனுக்குண்டு. ஈட்டியை எடுத்தால் அது குறி தப்பாது.

அவனுடைய முன்னோர் பிராஞ்சுதேசத்தைச் சேர்ந்தவர்களானதால், என்னிடத்தில் அவனுக்கு ப்ரீதி உண்டாயிற்று. வர வர, என் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு அவன் பேசவும் ஆரம்பித்தான்; மீன்பிடிப்

பதில் தனக்குள்ள சூரத்தனத்தைப் புகழ்ந்து சந்தோஷிப்பான். சாதாரணமாய்ப் பேசுவது கொஞ்சமாயினும், அவனுடைய துணிகரமான செய்கைகளைப் பற்றிச்சொல்லும்போது, எதையும் மறந்து, அதிகஉற்சாகம் உண்டாகி. காவியங்கள் எழுதும் புராதன கவிகள் போலப்பேசுவான். நாளாக நாளாக, அவனுக்கும் எனக்கும் சிநேகமதிகமானது.

இந்தச்காண்டாமிருகத்தைப்பற்றி 'நெட்லாண்ட்' உடைய அபிப்ராயமென்ன? அவனுக்கு அதில் நம்பிக்கையேயில்லை. கப்பல் முழுவதிலும் அவன் ஒருவனுக்குத்தான் அதில் விசுவாசமில்லை.

ஜூலைமீ 30 தேதி சாயங்காலம், அதாவது நாங்கள்புறப்பட்டு மூன்றுவாரம் ஆனபோது, தென் அமெரிக்காவில் 'படகோனியா' தேசக்கடற்கரையி லிருந்து முப்பது மைல்தூரம் சமுத்ரத்தில் போய்க்கொண்டிருந்தோம். இன்னும் எட்டுநாளைக்குள் 'பஸிபிக்' சமுத்ரத்துக்கு வந்துசேருவோம். நெட்லாண்டும் நானும் கடலின் பாதாள பாகங்களைப்பற்றியும் மற்றவிஷயங்களைப்பற்றியும் பேசிக்கொண்டிருந்தோம்.

நான்: ஏன், இந்தக் காண்டாமிருகம் இல்லையென்று சொல்லுகிறாய்? அதை நம்பாமலிருப்பதற்கு ஏதாவது காரணமுண்டோ?

நெட்: (என்னைக் கொஞ்சம் உற்றுப்பார்த்து, சற்று கண்ணை மூடிக்கொண்டு, அப்புறம்) ஒருவேளை காரணமிருந்தாலோ?

நான்: திமிங்கிலம் பிடிப்பதில் சூரன் நீ; யாராவது இந்த வித மிருகம் இருக்குமென்று எண்ணினால்,

நியாயமாய் நீதான் எண்ணவேண்டும். சாஸ்திரிகளெல்லாம் அப்படித்தானே புதுவிஷயங்கள் கண்டுபிடிக்கிறார்கள். யுக்தியால், இப்பேர்ப்பட்ட வஸ்து இருக்குமென்று முதலில் நினைக்கிறார்கள். பின், அது இந்த இடத்தில் இன்னமாதிரியாய் இருக்கலாமென்று மனோராஜ்யம் பண்ணுகிறார்கள். அப்புறம் தங்கள் யுக்தி சரியாவென்று பரிசோதித்துப் பார்க்கிறார்கள். ஆகலால், இம்மாதிரி மிருகம் இருக்கலாமென்று தோன்றவேண்டியது, அந்த சாஸ்திரத்தில் நிபுணனான உனக்கல்லவா?

நேட்: சற்று இரும். நூற்றுக்கணக்காய்த் திமிங்கிலங்களை வேட்டையாடியிருக்கிறேன்; ஏராளமானவைகளைக் குத்தியிருக்கிறேன்; அநேக மீன்களைக் கொன்றிருக்கிறேன். அவைகளுக்கு என்னபலமிருந்தும், இரும்புக்கப்பல்களின் பக்கங்களை ஊடறுத்துச் செல்ல சக்தியுள்ள வால்களையும் கொம்புகளையும் நான் பார்த்ததில்லை.

நான்: திமிங்கிலங்களின் பற்களால் கப்பல்களில் துவாரம் உண்டாவது சாதாரணமல்லவா?

நேட்: நிஜம்; மரக்கப்பலாயிருந்தால் ஒருவேளை அப்படியிருக்கும். அதுவும் என் அனுபோகத்தில் வந்ததில்லை. வாஸ்தவமாய், உமக்கு நம்பிக்கையுண்டா; அல்லது வாக்குவாதத்துக்காகப் பேசுகிறீரா?

நான்: தர்க்கசாஸ்திரம் ஒன்றுண்டே. அதை உபயோகித்தால் இவ்வித நம்பிக்கைக்கு இடம் கொடுக்-

கும். திமிங்கிலங்களை யொத்த கடல் மிருகங்களுக்கு, தங்களைக் காப்பாற்றிக்கொள்ள அதிபலமான கொம்புகள் இருக்குமென்று நாம் ஏன் யூகிக்கக்கூடாது?

நெட் தலையை அசைத்தான்.

நான்: அப்பேர்ப்பட்ட மிருகமிருந்து, கடலின் தாழ்ந்த பாகங்களில்தரைமட்டத்துக்கு சில மைல்கீழே வஸித்தால், அதனுடைய தேகம் நமக்குத் தெரிந்திருக்கிறஜீவஜெந்துக்களுடைய உடலைப் பார்க்க அனேக மடங்கு பெரியதாகத் தானே இருக்கவேணும்.

நெட்: ஏன்?

நான்: ஜலமட்டத்தின் கீழ்வெகு ஆழத்தில், தண்ணீர் அதிகமாய் அழுத்தும். அந்த பாரத்தைத் தாங்கிக்கொண்டு இருப்பதற்கு தேகத்தில் பலம் ஜாஸ்தியாய் வேணும். இது எல்லாருக்கும் தெரிந்த சாஸ்திரம் தானே.

சமுத்ரத்தில், 32 அடி கீழே நீ இருந்தால், அங்கே 17,568 கைலோக்ராம் அழுத்தம் உன்மேல் உரைக்கும்; 320 அடியானால், அதைக்காட்டிலும் பத்துமடங்கு பாரம் உண்டாகும்; 3200 அடியானால், அதிலும் நூறு மடங்காகும். இவ்விதம், ஆழம் ஜாஸ்தி ஆக ஆக, பாரம் ஜாஸ்தியாகும். தேகத்துக்குள் அதை எதிர்க்கத்தக்க சக்தியில்லாமற் போனால், உடம்பு தட்டையாய் அப்பளாம் மாதிரி ஆய்விடும்.

நெட்: ஐயோ, தேவா! அப்படியா? நீர் சொல்லுவதில் எனக்கு ஒரு விஷயம் நன்றாய்த் தெரிகிறது.

பெரிய ஜெந்துக்கள் கடலின் பாதாளத்தில் வஸித்தால், அவைகள் வெகு வெகு பலசாலிகளாய் இருக்கவேணும்.

நான்: அவ்வித மிருகங்கள் இல்லையென்று சொன்னால், "ஸ்கோஷியா" கப்பலுக்கு உண்டான ஆபத்துக்குக் காரணமென்ன?

நெட்: ஒரு வேளை—

நான்: சரி, சொல் பார்க்கலாம்.

நெட்: அதெல்லாம் பொய்.

இதற்குப் பதில் இந்த சமயத்தில் சொல்ல எனக்கு சம்மதமில்லை. வேறொன்றும் பதில் சொல்லத் தெரியாமல், "ஸ்கோஷியா" யக்குண்டான ஆபத்து நிஜமென்று தெரிந்திருந்தும், பிடிவாதத்தினால் ஏதோசொன்னான். "ஸ்கோஷியா" வில் பெரிய துவாரம் உண்டானது; தானாய் உண்டாயிருக்கக முடியாது; கற்பாறைகளாலும், சமுத்ர மட்டத்தின் கீழுள்ள இயந்திரங்களாலும் உண்டாகக்கூடிய தொண்டி அல்ல அது; ஆகையால், ஏதோ ஒரு ஜீவபிராணியால்தான் உண்டாயிருக்கவேணும்.

அதைப்பற்றி என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால்: அதற்கு முதுகெலும்புண்டு; குட்டிகள் தாயிடத்தில் பால்குடிக்கும் ஜாதி; மீன் வகுப்பு; திமிங்கிலத்தின் தாழ்வகுப்பு. மற்றையவிசேஷங்கள் அதைப்பற்றி அறிய வேணுமானால், அதன் தேகத்தைக் கீறிப்பார்க்கவேண்டும். கீறிப்பார்க்க அதைப்பிடிக்கவேண்டும்; பிடிப்பதற்கு ஈட்டிகுத்துகிறவன் வேணும்; அதாவது, நெட்லாண்ட் அவசியம்.

## அத்தியாயம் 5.

'லிங்கன்' கப்பல் கொஞ்சகாலம் யாத்திரை செய்து கொண்டே போயிற்று. விசேஷமொன்றுமில்லை. ஆனாலும் ஒரு சம்பவத்தினால் 'நெட்லாண்ட்' உடைய அபார சாமர்த்தியமும், அவனை எவ்வளவு அதிகமாய் நம்பியிருக்கலாமென்றும் தெரியவந்தது.

ஜூன்மாஸம், 30ம் தேதி திமிங்கிலவேட்டையாடுவதில் அமர்ந்திருந்த தோணியாட்களைவிசாரித்ததில், காண்டாமிருக வாஸனையே அவர்கள் காணவில்லையென்றார்கள். ஆனால் "மன்றோ" என்னும் தோணியின் தலைவன், லிங்கன் கப்பலில் நெட்லண்ட் இருப்பதாகக் கேள்விப்பட்டு, தான் பின்தொடர்ந்து கொண்டிருந்த பெரிய ஒரு திமிங்கிலத்தைப் பிடிப்பதில் அவனை ஒத்தாசை செய்யும்படிக்கேட்டான். 'லிங்கன்' தலைவனும், அவனுடைய சாமர்த்தியத்தைப்பார்ப்பதற்காக, 'மன்றோ' தலைவன் வேண்டுகைக்குச் சம்மதித்தான். 'நெட்லண்ட்' சிறிய தோணியில் குதித்து இருகையிலும் இரண்டு ஈட்டி பிடித்து, வலது கையால் ஒருதிமிங்கிலத்தையும் இடது கையால் இன்னமொரு திமிங்கிலத்தையும் குத்திக் கொன்றுவிட்டான்.

'லிங்கன்' கப்பல் அமெரிக்காவின் தென்கிழக்குக் கடற்கரையோரமாய் வெகுவேகமாகப் போனது. ஜூலை மாஸம் ஏழாம் தேதி பஸிபிக் சமுத்ரத்தில் யாத்திரைசெய்தோம். மாலுமிகள் ஒருவருக்கொருவர், "கண் கொட்டாமல் நாம் ஜாக்கிரதையாய்ப்பார்க்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு அப்படியே இருந்தார்கள்.

கண்ணைத் திறந்து உற்றுப் பார்ப்பவர்களும், தூர திர்ஷ்டிக் கண்ணாடியைக் கையில் பிடித்துக்கொண்டு பார்க்கிறவர்களுமாய், இரண்டாயிரம் டாலர்வெகுமானத்தை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு, எல்லாரும் வெகு உஷாராய் இருந்தார்கள். சிலரிடத்தில் இராத்திரியிலும் பார்க்கக்கூடிய கண்ணாடியிருக்க, அவர்கள் இனும் சம்பாதித்து விடலாமென்று அதிக நம்பிக்கையாயிருந்தார்கள்.

பணத்தில் ஆசையில்லாமல் போனாலும், அவர்களைப்பார்க்கிலும் என்னுடைய கவனம் குறைச்சலல்ல. சாப்பிடுவதிலும், உறங்குவதிலும் அதிக கால விரயம் செய்யாமல், வெயிலையும் காற்றையும் சற்றும் கவனியாமல், ஸதா நான் மேல் தட்டிலேயே இருந்தேன். எப்போதாவது ஒரு திமிங்கிலம் தன்னுடைய கறுத்த முதுகை ஜல மட்டத்துக்கு மேல் தூக்கினால், உத்தியோகஸ்தர்களும் வேலைக்காரர்களும் கீழிருந்தும் மேலிருந்தும், மூச்சுவாங்க, ஓடி வந்து, கண் கொட்டாமல் அந்த ஸ்தலத்தைப் பார்ப்பார்கள். நானும் அதேவிதம் பார்த்துக்கொண்டிருப்பேன். என்னுடைய வேலைக்காரன் கான்ஸெல்: "தயவுசெய்து கண்ணை அவ்வளவு விரிக்காமலிருந்தால், இன்னும் நன்றாய்ப்பார்க்கலாம்" என்று தமாஷாய்ப் பேசினான். கப்பல் சரியான வழியை விட்டு இந்தத்திமிங்கிலத்தைத் தேடிப்போக, அதுவும் சடுதியில் மறைந்துவிட்டது.

ஐரோப்பாவில் ஜனவரிமாஸம் எப்படியோ, அமெரிக்காவில் ஜூலை மாஸம் அப்படி. கடல் எங்கும் வெகு அமெரிக்கையாயிருந்தது.

இன்னமும் நெட்லாண்டுக்கு கொஞ்சமும் நம்பிக்கை பிறக்கவில்லை. பன்னிரண்டு மணிநேரத்தில் எட்டு மணிநேரம் அவன் படிப்பான், அல்லது தூங்குவான். எங்களுடைய கவலை லவலேசமும் அவனுக்குக் கிடையாது. எத்தனையோ தடவை அவனிடத்தில் காண்டாமிருக விஷயத்தைப்பற்றிப் பேசிப்பார்த்தேன்.

அப்பேர்ப்பட்ட மிருகம் ஒன்று இருந்தாலும், மனோவேகமாய் நீந்தும் சக்தியுள்ளதானதால், அது நம்முடைய கண்ணில் படுவதற்கு நியாயமில்லையென்று அவன் சொல்வான். அவன் சொல்வதும் வாஸ்தவம்தான்.

இருட்டில் குருட்டாட்டமாய்ப் போகிறோமென்பதற்குத் தடையில்லை. ஆனாலும் என்னதான் செய்கிறது? ஜெயிப்போம் என்பதற்கு நம்பிக்கை அதிகமில்லை. என்றாலும், ஒருவருக்கும் தைரியம் குறையவில்லை. மாலுமிகள் இந்த மிருகம் காணப்படும் காலத்தைப் பற்றி ஒருவரோடொருவர் பந்தயம் போட்டுக்கொண்டார்கள்.

ஜூலைமாஸம் 27ம் தேதி, பஸிபிக் சமுத்ரமத்தியிலிருந்தோம். சீன சமுத்ரத்தை நோக்கி யாத்திரை செய்துகொண்டுபோய், காண்டாமிருகத்தினுடைய லீலைகள் கடைசியாய் எந்த க்ஷேத்திரத்தில் நடத்தேதோ அங்கே வந்து சேர்ந்தோம். கப்பலில் ஒருவரும் இப்போது தூங்குகிறதில்லை. சாப்பிடுவதில்கூட ஒருவருக்கும் ஆசையில்லை. பாலைவனத்தில், நீரில்லாத விடத்தில் நீர் போன்ற தோற்றம் காணப்படுவதுபோல், 'இதோ காண்டாமிருகம்', 'அதோகாண்டாமிருகம்'

என்று மாலுமிகள் சொல்ல, கப்பல் கூட்டத்தாரெல்லாம் அவரவர்கள் வேலையைவிட்டு கண் பூத்துப்போகப் பார்ப்பார்கள்.

மூன்று மாஸ காலமாய், 'லிங்கன்' கப்பல் தென் பஸிபிக் சமுத்ரத்தில் யாத்திரை செய்தது. எங்கே யாவது ஒரு திமிங்கிலம் கண்ணுக்குத் தெரிந்தால், கப்பல் அங்கு திரும்பி, திடீரென்று நின்று, பின் திரும்பி, நீராவி யந்திரம் சிதைவுறும். இந்தமாதிரி அமெரிக்கா பக்கத்திலுள்ள ஜப்பான் தேசத்து கடற் கரை யோரமெல்லாம் தேடித்திரிந்தாய்விட்டது. கண்டவிடமெல்லாம் ஜலப்பரப்பே தவிர, வேறொன்றும் கண்ணுக்குப் புலப்படவில்லை.

எல்லாருக்கும் அதிருப்தி உண்டாகி விட்டது. காண்டாமிருகம் விஷயத்தில் நம்பிக்கையும் குறைந்து போனது. கப்பலிலுள்ளவர்களுடைய மனதை சரியாய்ப் பரிசோதித்தால், பத்தில் மூன்று பங்கு வெட்கமும், ஏழுபங்கு கோபமுமா யிருந்தது. அவர்கள் தங்கள் பைத்தியக்காரத்தனத்துக்காக வருத்தப்பட்டார்கள். ஒருவருஷகாலமாய் காண்டா மிருகம் உண்டென்று ஸ்தாபிக்க அவர்கள் உபயோகித்த காரணமெல்லாம் இப்போது பஞ்சாய்ப்பறந்து போயிற்று. வெகுகாலமாய்ச் சரியாய்த் தூங்காமல், சாப்பிடாமல் இருந்ததற்காகவெட்கி, நல்ல தூங்குமூஞ்சிகளாயும், சாப்பாட்டிராமன்களாயுமானார்கள்.

இந்த மாதிரி ஒரு பிரயோஜனமு மில்லாமல எவ்வளவு காலம் யாத்திரை செய்கிறது? 'லிங்கன்' உத்தியோகஸ்தர்கள் தங்களாலானமட்டும் வேலைசெய்தார்

கள். பொறுமையிலும், தீர்மானமாய் நடப்பதிலும் அவர்களுக்கு சமானமே கிடையாது. ஆகையால், காண்டாமிருகம் அகப்படவில்லையென்றால் அது அவர்களுடைய குற்றமல்ல. இனி அவர்கள் செய்யவேண்டியது ஒரே ஒரு காரியம்தான். சுய தேசத்துக்குத் திரும்புவது தவிர வேறே அவர்களுக்கு வேலையில்லை.

கப்பலின் உத்தியோகஸ்தர்கள் இதைப்பற்றி தலைவனிடத்தில் போய் சொல்லிக் கொண்டார்கள். பாரகூட் அதைக்காதில் போட்டுக் கொள்ளாதவன் போலிருந்தான். மாலுமிகள் கொஞ்சம் கொஞ்சமாய் தங்களுடைய அதிருப்தியை வெளியிட்டு, வேலையில் அசிரத்தையாயும் இருந்தார்கள். மேலும் மேலும் யாத்திரை செய்வதில் யாதொரு பயனில்லையெனத் திரும்பத்திரும்பச்சொன்னார்கள். தலைவன், அவர்கள் சொல்வதும் நியாயம் என்று நினைத்து இன்னும் மூன்றே மூன்றுநாள்மாத்திரம் பார்த்து, அதற்குள் ஒன்றும் சம்பவிக்காத பக்ஷத்தில் திரும்பிவிடுவதாகச் சொன்னான். இது நவம்பர்மாசம் இரண்டாம் தேதி நடந்தது. மாலுமிகளுக்கு முன்போலவே தைரியமும் உற்சாகமும் உண்டானது. தூரதிர்ஷ்டிக் கண்ணாடிகளை வைத்துக்கொண்டு உற்றுப்பார்க்கிறவர்களும், கண்கொட்டாமல் நாலுபக்கமும் உஷாராய் இருப்பவர்களுமாய், எல்லாரும் வெகு சுறுசுறுப்பாயிருந்தார்கள். இதுதான் காண்டாமிருகத்தைக் கடைசித் தடவையாய் சண்டைக்கு அழைப்பது போலிருந்தது. "மீசைமுளைத்த ஆண்பிள்ளையானால், ஒளிந்திருப்பதைவிட்டு, வெளியில்வா" எனச்சொல்வது போலிருந்தது.

இரண்டு நாள் கழிந்தது. 'இது அசட்டுக்கப்பல். இதற்குத்தீங்கு செய்வது சுலபம். வெளியில் புறப்பட்டு நம்முடைய கையை இதனிடத்தில் கொஞ்சம் காட்டலாம்' எனும் உற்சாகம் காண்டாமிருகத்துக்கு உண்டாக்குவதுபோல, லிங்கன் கப்பல் மெதுவாய்ப் போய்க்கொண்டிருந்தது. சமுத்திரத்தில் கொழுப்பு ஏராளமாய் விட்டெறிந்தார்கள்; அதைத் தின்னவாவது காண்டா மிருகம் வெளியே வராதா? நவம்பர் மாஸம் நாலாம் தேதி சாயங்காலமும் ஆனது. மற்று நாள் மத்தியானத்துக்குள் ஒன்றும் நடவாமற்போனால், அமெரிக்காவுக்குத் திரும்பிப்போக உத்தரவாகவேண்டியதுதான். ஜப்பான் இருநூறுமைல் தூரத்துக்குள் இருந்தது.

இராத்திரியாகி, எங்கும் இருட்டாய் இருந்தது. மேகங்கள் சந்திரனை மறைத்துக் கொண்டன. கடல் அமரிக்கையாய்க் தானிருந்தது. நான் கப்பலில் முன் வந்து பார்த்துக் கொண்டிருந்தேன். என்னுடைய வேலைக்காரன் கான்ஸல் எனக்குப்பின் நின்றுகொண்டு உற்றுப்பார்த்தான். இதுவரையிலும் அவன் அவ்வளவு கவனமாயிருந்ததை நான் பார்த்ததேயில்லை.

நான்: இரண்டாயிரம் டாலர் சம்பாதிக்க இதுதான் சமயம், கான்ஸல். இது தப்பினால், அப்புறம் ஒன்றும் கிடையாது.

கான்ஸல்: சுவாமி, இந்த வெகுமானத்தைப் பற்றிநான் ஸ்வப்பனத்தில் கூட நினைத்ததில்லை. இதற்கு லக்ஷம் டாலர் கொடுத்தாலும் சர்க்கார் ஏழையாகமாட்டார்கள்.

நான்: நீ சொல்வது நிஜம்தான். எவ்வளவு காலம் வீணாய்ப்போய்விட்டது! என்ன கவலை, சிரமம், விரதா காலக்ஷேபம்! ஆறுமாஸத்துக்கு முன்னால் பிரான்ஸூக்குப்போய்ச் சேர்ந்திருக்கலாம்.

இப்படி நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். கான்ஸெல் பேச்சு முடியவும் இல்லை. எங்கேயும் நிஸ்சப்தமாயிருந்தது. அப்போது திடீரென்று நெட்லண்ட் கூவினான். "அதோ இருக்கிறான் பயல்! இத்தனை நாள் ஒளிந்துகொண்டிருந்து இப்போது பஸ்திக்கு வந்து விட்டான்" என்று நெட்லண்ட் கத்தினான்.

---

## அத்தியாயம் 6

### "முழுவேகம்"

இதைக் கேட்டவுன், கப்பலில் இருந்த எல்லாரும் நெட்லாண்ட் அண்டையோடினார்கள். கப்பலை நிறுத்த உத்தரவானது. இருட்டு அதிகமாகி கண்ணுக்கு ஒன்றும் தெரியவில்லை. நெட்லாண்ட் எதைப்பார்த்தானென்பதும் எவ்விதம் பார்த்தானென்பதும் ஆச்சர்யமாயிருந்தது. அவன் தூரத்திலொரு பொருளைக் காட்டினான்; உடனே எங்களுக்கெல்லாம் அது தெரிந்தது.

அந்தத் திக்கில், சமுத்திரத்தின் ஜலமட்டத்தின் கீழே வெகு பிரகாசமாயிருந்தது. காண்டாமிருகத்தின் ஜ்வாலையென்பதற்குச் சந்தேகமில்லை. கடலில் சாதாரணமாய்க்காணப்படும் "பாஸ்பரஸ்" வெளிச்சமல்ல. இந்த மிருகத்தைக்கண்டதாகச்சொல்லும் கப்பல்தலை

வர்கள் விஸ்தரிக்கிற பிரகாசமே. ஜலத்தின் கீழ் அதன் வடிவம் கோழிமுட்டை மாதிரியிருந்தது. அதன் மத்தியிலிருந்த பிரகாசம் கண்ணைப்பிடுங்கிக்கொண்டு போகக்கூடியதாயிருந்தது.

நான்:—அதோ பார். கேவலம் சமுத்திரத்தில் எங்கேயும் காணப்படும் மினுமினுப்பூச்சிப் பிரகாசம் அல்ல. அது அசைகிறதே! அடடா, முன்னுக்குப் போகிறதே! இப்போழுது திரும்புகிறது தெரியவில்லையா? ஓஹோஹோ, நம்மை நோக்கியே வருகிறது!

எல்லாரும் ஒரேயடியாய்க் கத்தினார்கள்.

பாரகூட்:—பேசாதேயுங்கள். கப்பலைத்திருப்பு.

இந்த உத்தரவின்படி, கப்பல் மிருகத்தைவிட்டு தூரப்போக ஆரம்பித்தது. ஆனால் அது பலிக்கவில்லை. இந்த அற்புதமான மிருகம்; "லிங்கன்" கப்பலை விட இரண்டத்தனை வேகமாய்த்தொடர ஆரம்பித்தது.

கப்பலில் பேச்சு மூச்சில்லை. காண்டாமிருகம் கிட்டவந்துகொண்டிருந்தது; கப்பலைச்சுற்றி நீந்தியது. நாலுபக்கமும் அதன் பிரகாசம் பரவியது. திடீரென்று என்னமோ யோசனை பண்ணிக்கொண்டு, காண்டாமிருகம் எங்களைவிட்டு இரண்டுமைல் தூரம் போய்விட்டது. பழையபடி திரும்பிவிட்டதே! கப்பலை விழுங்கவருவதுபோல் சீறிக்கொண்டு வருகிறது! கப்பலுக்கு இருபதடி தூரத்தில் வந்து நின்று சடுதியில் அதன் பிரகாசத்தை அணைத்துவிட்டது. இரண்டொரு நிமிஷத்துக்குள் எப்படியோ கப்பலின் மற்றொரு பக்

கத்தண்டை காணப்பட்டது. அதன் அத்யாச்சர்ய மான வேகத்துடன் கப்பலை மாத்திரம் அப்போது தாக்கியிருந்தால், எங்களுடைய கதி என்னமாய்த்தான் ஆகியிருக்குமோ ’?

இவ்வளவுக்கெல்லாம், கப்பல் என்ன செய்துகொண்டிருந்தது? வெகு ஜிரப்பாய்க் காண்டாமிருகத்தை பிடிப்பதென்று சங்கல்பம் பண்ணிக்கொண்டு, இத்தனை வீரசூரர்களெல்லாம் இத்தனை மாஸமாய் யாத்திரை செய்து, கடைசியில் மிருகத்தைக் கண்டவுடன் பயந்து நடுங்கிக்கொண்டு, கோழைத்தனமாய்ப் புறங்காட்டி ஓடுவதென்ன நியாயம்? காண்டாமிருகத்தை நாங்கள் தொடர்வதிற்குப்பதிலாக, அது எங்களைத் துரத்துகிறது! பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்துவிட்டது.

நான்:—பாரகூட், இதென்ன? நாம்வந்த காரியமென்ன! நாம் நடக்கிற மாதிரி யென்ன? நம்முடைய நடத்தைக்கு என்ன சால்ஜாப்புசொல்லுகிறது?

பாரகூட்:—நான் ஸ்வப்பனத்தில் கூட இவ்வித மிருகத்துடன் போராடவேண்டியதாயிருக்குமென்று நினைக்கவில்லை. இந்த இருட்டில் அதோடு யுத்தம் செய்ய ஆரம்பித்தால், கப்பலுக்கு என்ன சேதம் வந்துவிடுமோ? அதை எந்த விதம் தாக்குகிறதென்று தெரியவில்லை; அது நம்மைத் தாக்கினல் எப்படி நம்மைக்காப்பாற்றிக் கொள்ளுகிறதென்றும் தெரியவில்லை. இவ்வித சங்கடம் உண்டாகுமென்று நான்நினைக்கவேயில்லை. பொழுதுவிடியட்டும்; பிறகு பார்க்கலாம்.

நான்:—மிருகத்தினுடைய பருமனைப்பற்றி ஏதாவது சந்தேகமுண்டோ?

பாரகூட்:—அது பூதாகாரமான காண்டாமிருகம்; தவிர, அதன் தேகத்தில் மின்னல் சம்பந்தமுண்டு.

நான்:—டார்ப்பீடோ தோணியைக் கண்டால் நமக்கு எவ்வளவு பயமோ அதைமாதிரிதான் இதைக் கண்டாலும்.

பாரகூட்:—வாஸ்தவம். தாக்குகிற சக்தி அதற்கு இருந்தால், நம்முடைய கப்பல் பொடிப்பொடியாய்ப் போய்விடும். அதற்காகத்தான் பயந்து கொண்டு உஷாராயிருக்கிறேன்.

இராமுழுவதும் கப்பல்வேலைக்காரர்கள் மேல் தட்டிலேயே இருந்தார்கள். ஒருவருக்கும் தூங்க தைர்யம் வரவில்லை. கப்பல் வேகமாய் ஓடத்தொடங்கினால், மிருகம் அதைப்பார்க்கிலும் வேகமாய் ஓடியது. ஆகலால், கப்பல் வேகத்தைத் தலைவன் குறைத்தான். காண்டாமிருகமும் அலைகள்மேல் படுத்துக்கொண்டு ஊஞ்சலாடுவதுபோல் இருந்தது. ஒன்று மாத்திரம் நிச்சயம்; ண்டையை விடுவதில் அதற்குச் சம்மதமில்லை.

பாதிராத்திரியில் அது ஒளித்துக்கொண்டது. சரியாய்ச் சொல்லவேணுமானால், அதன் உடம்பில் இருந்த பிரகாசத்தை அணைத்து விட்டது. அது எங்கே போயிருக்குமென்று நாங்கள் வீணுப் மனோராஜ்யம் பண்ணிக்கொண்டிருந்தோம். ஒரு மணி அடிக்க ஏழு நிமிஷமிருந்தது. அப்போது இடி முழக்கத்தின் சப்தம்

போல, காது செவிடாகும்படியான ஆரவாரம் செய்து கொண்டு, அது திரும்பவும் கப்பலை நோக்கி ஓடிவந்தது. நான், கப்பல் தலைவன், நெட்லண்ட், ஆக மூன்று பேரும் வெகு ஜாக்கிரதையாயிருந்தோம்.

பாரகூட்:—நெட்லண்ட், திமிங்கிலங்கள் ஜலத்தைக் கொப்புளிக்கிற சப்தம் கேட்டிருக்கிறாயா?

நெட்லண்ட்:—கேட்டிருக்கிறேன். ஆனால் என் ஜன்மத்திலும் இரண்டாயிரம் டாலர் சம்பாதித்துக் கொடுத்த இவ்வித காண்டாமிருகம் நான் கண்டதேயில்லை.

பாரகூட்:—அந்தத் தொகை உன்னது தான், சந்தேகமில்லை. இப்போது கேட்கிற சப்தம் திமிங்கிலங்கள் ஜலத்தைக் கொப்புளிக்கிற சப்தம் மாதிரிதானோ? வேறேயா?

நெட்லண்ட்:—ஜாதி ஒன்றுதான், ஆனால் இந்த சப்தம் எங்கே, அந்த சப்தம் எங்கே? என்னமாயிருந்தாலும் நாளைக்குக்காலையில் அதுடன் இரண்டொரு வார்த்தை நாம் பேசலாம்.

நான்:—நீ சொல்வதை அது கேட்டால் தானே?

நெட்லண்ட்:—என் ஈட்டியின் நீளத்தின் நாலு மடங்கு தூரத்துக்குள் மாத்திரம் அது வரட்டும், நான் சொல்வதைக் கேட்க வைக்கிறேன்.

பாரகூட்:—அதுடன் நீ உறவு கொண்டாடுவதானால் ஒரு தோணி உனக்குக் கொடுக்கவேணுமே.

நெட்லண்ட்:—சந்தேகமில்லாமல்.

பாரகூட்:—தோணியை வலிக்கும் என்னாள்களுக்குப் பிராண அபாயமும் உண்டாகுமே?

நெட்லண்ட்:—நிஜம். என் பிராணனையும் அதுடன் சேர்த்துக்கொள்ளும்.

இரண்டுமணி அடிக்கிற சமயத்தில் கப்பலுக்கு ஐந்துமைல் தூரத்தில் ஜ்வாலை திரும்பக்காணப்பட்டது. காற்று, அலை இரண்டினுடைய சப்தத்தை கீழே தள்ளி விட்டு, மிருகத்தின் வால் ஜலத்தில் அடித்துக்கொள்ளும் சப்தமும், அது மூச்சுவிடும் சப்தமும் மேலே கிளம்பி ஐந்து மைல் தூரத்திலும் கிணீர் என்று கேட்டது.

பொழுது எப்போது விடியுமென்று எல்லாரும் நிமிஷங்களைக் கணக்குப்பண்ணிக்கொண்டிருந்தார்கள். பெரிய திமிங்கிலங்களைப்பிடிப்பதற்காக உபயோகப்படும் வலைகள், கனமான ஈட்டியை ஒரு மைல் தூரம் வீச சக்தியுள்ள பீரங்கி, சீக்கிரம் மரணத்தை உண்டாக்கும் குண்டுகள் நிறைந்த துப்பாக்கிகள்—இவைகளெல்லாம் தயாராயின. நெட்லண்டுக்கு ஈட்டியேபோதும்; வல்லவனுக்குப் புல் ஆயுதம்; ஈட்டியை வைத்துக்கொண்டு அவன் "அச்வமேதயாகம்" செய்து விடுவன்.

ஆறுமணி அடித்து சூர்யோதயம் ஆயினது. சூர்யனைக்கண்ட பனிபோல, காண்டாமிருகத்துடைய வெளிச்சமும் அணைந்துபோய்விட்டது. ஏழுமணி ஆய் சூர்யவெளிச்சம் பிரகாசமாயிருந்தது; ஆனால், திடீரென்று மூடுபனி கிளம்பி எதையும் மறைத்துவிட்டது. எந்தப்பக்கம் பார்த்தாலும் ஒன்றும் தெரியவில்லை. கப்பலிலிருந்த ஒவ்வொருவருக்கும் கோபமும் அதிருப்தியும் உண்டானது. ஆனால் என்ன செய்யலாம்?

எட்டு மணிக்குப் பனி பிரிந்துபோய், வெளிச்சம்

நன்றாய்த் தெரிந்தது. திடீரென்று நெட்லாண்டுடைய கூக்குரல் கேட்டது. "இதோ இருக்கிறதே மிருகம் திரும்பிப்பாருங்கள்" என்று கத்தினான். கப்பலுக்கு ஒன்றரை மைல் தூரத்தில், ஒரு நீண்டகறுத்த தேகம் ஜலமட்டத்துக்கு ஒரு கஜத்துக்குமேல் தலையைத் தூக்கினது. அதன் வால் வெகு துரிதமாய் அசைந்து கொண்டு தண்ணியில் அடித்துக் கொண்டிருந்தது.

தலைவன் உத்திரவு கொடுக்க வில்லையே யென்று எல்லாரும் ஆவலாயிருந்தார்கள். பாரகூட் காண்டா மிருகத்தைச்சரியாய் கவனித்துப்பார்த்து, இஞ்சினீரை யழைத்துத் தகுந்த அளவுக்குத் தண்ணீரை ஆவி ஆக்கி வைத்திருக்கிறதோவென்று கேட்டான்; அப்படியிருப்பதையறிந்து வெகுவேகமாய் மிருகத்தை எதிர்த்துப் போக உத்தரவிட்டான். லிங்கன் கப்பலும் சீறிக்கொண்டு மிருகத்தண்டை அணுக, அது ஜலத்துக்குள் முழுகி தப்பிக்கொள்வது அகௌரதையென்று நினைத்து, பின்னுமேல போய்க்கொண்டிருந்தது. இம்மாதிரி கப்பல் மிருகத்தின் கிட்டே வந்துகொண்டிருந்தது. அதன் நீளம் இருநூற்றெண்பது அடிதான் இருக்குமென்று நான் கணக்குப்பண்ணினேன். அதன் தேகத்தினளவு இவ்வளவென்று சுலபமாய்க் கண்டு பிடிக்க முடியவில்லை. இப்படி அதை நான் கவனித்துக் கொண்டிருக்கும்போது நாற்பது கஜமுயரத்துக்கு அதன் ஸ்வாச குழாயிலிருந்து ஜலம்மேலே கிளம்பியது. ஆகவே, அது இன்ன விதமாய் மூச்சுவிடுகிறதென்று கண்டுகொண்டேன்.

முக்கால் மணிநேரம் காண்டாமிருகம் பின்செல்ல, லிங்கன் கப்பல் அதைத்தொடர்ந்தது. கப்பலுக்கும் மிருகத்துக்கும் ஆரம்பத்தில் எவ்வளவு தூரம் இருந்ததோ, அதே தூரந்தான் இப்போதும் இருந்தது.

பாரகூட்டுக்குக் கோபமுண்டாய், நெட்லண்டையழைத்து: "இன்னமும் தோணியொன்று இறக்கி அதை எதிர்க்க வேணுமென்கிறாயா?" என்று கேட்டான்.

நெட்லண்ட்: (என் மனசை) மாற்றி விட்டேன், அதில் பிரயோஜன மில்லை. காண்டாமிருகத்துக்கு நம்முடைய கையில் அகப்படவேணுமென மனசு இருந்தால்தான், நாம் அதைப் பிடிக்க முடியும்.

பாரகூட்: அப்போது நாம் என்னசெய்யலாம்?

நெட்லண்ட்: நம்மால் எவ்வளவு வேகமாய்ப் போக முடியுமோ, அவ்வளவு வேகமாயும் போகலாம். ஈட்டியைவைத்துக்கொண்டுத் தயாராய் இருக்கிறேன். சரியான தூரத்தில் அது இருந்தால் அதைக் குத்திப்பார்க்கிறேன். பாரகூட் கப்பலோட்டியை அழைத்து இன்னும் வேகமாய்ப்போகச்சொன்னான். மணியொன்றுக்கு பதினெட்டரை மைல் லிங்கன் போனது. அந்தப்பாழான மிருகமும் அதேமாதிரி போயிற்று. ஒன்றரை மணிநேரம் கப்பலிப்படிப் போயும், ஒரு அடிகூடக்கிட்டப்போகவில்லை. இது அவமானம்தான். கப்பலிலிருப்பவர்கள் மிருகத்

தைச் சபித்தார்கள். அது அந்த சாபத்தையெல் லாம் பொருட்டாய் நினைக்கவில்லை.

பாரகூட்:—இதற்குமேல் வேகமாய்ப்போக முடியாதா?

கப்பலோட்டி:— வெகு வேகமாய்த்தான் போகிறோம்.

பாரகூட்:— இன்னும் வேகமாய்ப்போ.

நான்:— கான்ஸெல், நாம் எங்கே போய்ச் சேரு வோம் தெரியுமா?

கான்ஸேல்:—எங்கேயானாலும், எனக்குச் சம்மதம் தான். வேகம் அதிகமானது. பாய்மரங்கள் அசைய ஆரம்பித்தன. புகை ஏராளமானபடியால் குழாய் வெடித்துவிடுமோஎன்றும் பயமுண்டு.

பாரகூட்:— இப்போது எவ்வளவு வேகம்?

கப்பலோட்டி:—மணியொன்றுக்குப் பத்தொன்பதே கால் மைல்.

பாரகூட்:— இன்னும் வேகம் வேணும்.

இதென்ன ஓட்டம்! நெட்லண்ட் தயாராய் ஈட்டியை வைத்துக்கொண்டுநின்றான். அடிக்கடிக் கப்பல் கிட்டவருவதற்கு மிருகம் இடம் கொடுத்தது.

நெட்லண்ட்: கிட்டப் போய்க்கொண்டிருக்கி றோம். கிட்டப்போய்க் கொண்டிருக்கிறோம்.

இப்படிச்சொல்லிக்கொண்டு ஈட்டியை எறிகிற சமயத்தில் காண்டாமிருகம் சிரித்துக்கொண்டு மணிக்கு முப்பது மைல் வீதம் ஓடஆரம்பித்தது. சில சமயங் களில் நாங்கள் வெகு வேகமாய்ப்போய்க் கொண்டிருக் கும்போதும் எங்களைப் பரிகாசம்பண்ணுவதுபோல் கப் பலைச்சுற்றி வந்து விளையாடிக்கொண்டு ஓடும். ஆகவே,

காலை எட்டுமணிக்கு என்ன ஸ்திதியிலிருந்தோமோ, அதே ஸ்திதியில் தான் மத்தியானத்திலும் இருந்தோம்.

பாரகூட் வெட்கமடைந்து இப்படி ஓடிக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை, பீரங்கியை எடுத்துக்கொண்டு சுட்டுப்பார்க்கலாம். சுடு; அதே விதம் சுடு. பீரங்கிக்குண்டு மிருகத்தைத்தாண்டிக்கொண்டு அதன் மேல் படாமல் அரைமைல் தூரம் அப்பால் போய் விழுந்தது.

பாரகூட்:—அடுத்தடவை இன்னும் ஜாக்கிரதையாய்க் குறிப்புப் பாருங்கள். யாரொருவன் பீரங்கிக் குண்டை மிருகத்துள் புதைக்கிறானோ, அவனுக்கு ஐந்து டாலர் இனும்.

ஒரு கிழவன், பீரங்கி யுத்தத்தில் நிபுணன், குறிபார்ப்பதில் சதுரன், வெகு முறைப்பாய் வந்து சுட்டான். குண்டு மிருகத்தின் மேல் பட்டு, இரண்டு மைல் தூரம் போய்க் கடலில் விழுந்தது.

நீரன், வெகு கோபமுண்டு: "இவ்வித மீன்களுக்கெல்லாம் மேல் தோல் ஆறு அங்குலம் கனமுள்ள எஃகுத்தகடுபோல் இருக்கிறது.

கப்பலோட, மிருகமோட, ஒப்பில்லாமல் வெகு நேரமாகிக்கொண்டிருந்தது. மிருகத்துக்குக் களைப்பே இல்லையெனத் தோன்றினது. நவம்பர் மாசம் ஆறாம் தேதியான அன்றைக்கு முன்னூறு மைலுக்குக்குறையாமல் யாத்திரை செய்தோம்.

இராத்திரியானது. இருட்டு எங்கும் பரவி ஒரு பக்கத்திலும் ஒன்றும் தெரியவில்லை.

"நம்முடைய பிரயத்தனம் எல்லாம் இவ்வளவு தான். இனி என்ன பிரயோஜனம்! மிருகம் இனிமேல் கண்ணில் படப்போகிறதில்லை" என்று நான் எண்ணினேன்.

இராத்திரி பத்துமணிக்கு, மூன்று மைல் தூரத்துக்கப்பால் மிருகத்தின் தேகத்திலிருந்து ஜ்வாலை கிளம்பினது. முந்தின ராத்திரியில் எப்படியோ அதே விதம் வெகு பிரகாசமாயிருந்தது. ஆனால் மிருகம் அசைவற்றிருந்தது. நாள் முழுவதும் ஓடி உழைத்து, அதிகக் களைப்படைந்து, அலைகள் மேல் படுத்து ஊஞ்சலாடுவது போல் அசைந்துகொண்டு, தூங்குவதாகத் தோன்றியது. காற்றுள்ளபோது தூற்றிக்கொள்ளும் சுபாவமல்லவா பாரகூட்டுடைய சுபாவம்? சப்தமில்லாமல் வேகமாய் மிருகத்தை நோக்கிப் போகவேணுமென மாலுமிக்கு உத்தரவிட்டான். நெட்லண்டும் தன்னுடைய இடத்தில் தயாராய் இருந்தான். கப்பலில் எல்லாரும் வெகு ஆவலாயிருந்தார்கள். 'கப்சிப்' என்று ஒருவரும் மூச்சுவிடவில்லை. எங்களிடத்துக்கும் வெளிச்சத்துக்கும் நூறடி தூரம் தானிருக்கும். இரண்டு நிமிஷத்தில் தூரம் இருபது தப்படி தானிருந்தது. நெட்லண்ட் ஈட்டியைப் பிடித்துக்கொண்டு கையை வீசினான். ஈட்டிபோகிற சப்தம் எல்லாருக்கும் கேட்டது. தூங்கிக்கொண்டிருந்த மிருகத்தை அது தாக்கினது. கிணீர் என்ற சப்தம் எங்கேயும்கேட்டது. தக்ஷணமே

ஜோதி அணைந்தது. அப்போதே யானையின் தும்பிக்கையிலிருந்து ஜலம் கொட்டுவது போல் ஏராளமான தண்ணீரை அது கப்பலின் மேல்தட்டில் கொப்புளித்தது. மனிதர்கள் உருண்டு கீழேவிழுந்தார்கள். இடிவிழுந்தது போல் கப்பலசைந்தது. நான் கைப்பிடிப்பலகையின்மேல் விழுந்து, எழுந்திருக்கமுயலுவதற்கு முன்னால், கடலில் விழுந்து விட்டேன்!

---

## அத்தியாயம் 7

### "புதுமாதிரியான திமிங்கிலம்"

இருபது அடி கீழே நான் அமிழ்ந்து போனேன். ஆனால் எனக்கு நன்றாய் நீந்தத்தெரியும்; இதனால் பயம் உண்டாகவில்லை. இரண்டட்டில் மேலே வந்து விட்டேன்.

கப்பல் எங்கே இருக்கிறது? நான் விழுந்தது கப்பலில் இருக்கிறவர்களுக்குத் தெரியுமோ? என்னை இரக்ஷிக்க பாரகூட் ஒரு தோணி அனுப்புகிறானோ? எனக்குப் பிழைக்க ஏது வுண்டா? என்று இவ்விதமாய் நான் யோசனை பண்ணினேன்.

இருட்டு அதிகமாயிருந்தது. கிழக்கே, ஏதோ ஒரு கறுத்த பிண்டம் மறைகிற சமயமாயிருந்தது. அதனுடைய தீபங்களும் மறைந்துபோய்க்கொண்டிருந்தன. சந்தேகமில்லாமல் அது தான் கப்பல். எனக்கு வந்துவிட்டது மோசம்!

நம்பிக்கை யென்பதேபோய், ஒத்தாசை வேணும், ஒத்தாசைவேணும், என்று கத்திக்கொண்டு, கப்

பலேநோக்கி நீந்திக்கொண்டு போனேன். என்னுடைய உடுப்புகளே சாதாரணமாய்க் கனமானவை; தண்ணீரில் ஊறினவுடன், என்னை அசைய விடவில்லை. இனி பிழைக்கிறதேது? நெஞ்சடைத்துக்கொண்டிருக்கிறது. "விட்டவாருங்கள்" என்று கத்தினேன். இதற்குமேல் நான் பேசவில்லை. வாயில் ஜலம் நிறைந்தது; என்னுல் சமாளிக்க முடியவில்லை; தண்ணீருக்குள் அமுங்கிப்போனேன்.

திடீரென்று, வெகுபலசாலியொருவன் என்னுடைய வஸ்திரங்களைப்பிடித்து இழுத்து ஜலமட்டத்துக்கு கொண்டுவந்தான்; அவன் குரலும் கேட்டது. "பயவாய் என்முதுகின் மேல் சாய்ந்துகொண்டால், எனக்கு நீந்திப்போவது சுலபமாயிருக்கும்" என்று சொன்னது யாராயிருக்கலாம்? என்னுடைய உண்மையான வேலைக்காரனும் சிநேகனுமான கான்ஸெல்தான்.

நான்:— நீதானு?

கான்ஸெல்:— நான்தான்; என்ன உத்தரவு கொடுக்கிறீர்கள்?

நான்:— என்னைப்போல்நீயும் அதிர்ச்சியினுல் ஜலத்தில் விழுந்துவிட்டாயா?

கான்ஸெல்:— இல்லவேயில்லை; என் எஜமானன் கடலுக்குள் போனுல், எனக்குக் கப்பலில் என்ன வேலை?

நான்:— கப்பல் சேதியென்ன?

கான்ஸெல்:— அதை நம்பவேண்டாம்.

நான்:— என்ன?

கான்ஸேல்:— நான் கடலுக்குள் குதித்தபோது, ஒரு மாலுமி "திருகாணியும் சுக்கானும் முறிந்து போய் விட்டன" என்று கத்தினன்.

நான்:— முறிந்தா போய்விட்டது?

கான்ஸேல்:— ஆமாம். அந்த மிருகத்தின் பல் பட்டு இவ்வளவு சேதமுண்டானது.

நான் வெகுதுரிதமாய் நீந்தினேன்; என்னுடைய வஸ்திரங்கள் சிரமப்படுத்தின. இதைக் கான்ஸெல் அறிந்து, கத்தியை எடுத்துக்கொண்டு என்னுடைய முதுகின் மேலிருந்த சொக்காயைக்கீறி, அதைக் கழற்றிவிட்டான். அதன்மேல், நீந்துவது சிரமமாயில்லை. இரண்டு பேரும் ஒருவன் பக்கத்தில் ஒருவனிருந்து கொண்டு நீந்திப்போனேம்.

எங்களுடைய ஸ்திதி வெகு பயங்கரமாயிருந்தது. நாங்கள் கடலில் விழுந்தது கப்பலிலிருப்பவர்களுக்குத் தெரிந்திருக்காது; தெரிந்தாலும், திரும்பிவருவதற்கு அதற்குச் சக்தியுமில்லை. எங்களுக்குவிமோசனம்உண்டாகிறதாயிருந்தால், கப்பலின் தோணிகளில் ஒன்றுதா வந்து உதவவேணும். அந்த உதவி கிடைக்கிறதற்குத் தலையை ஜலத்துக்கு மேலே தூக்கிக்கொண்டேயிருக்க வேணும்.

இந்தச் சமயத்தில் எங்களுக்குள் ஒருயுக்தி செய்தோம். இரண்டுபேரும் பலத்தையெல்லாம் உபயோகித்து நீந்தினல், இரண்டுபேரும் சீக்கிரத்தில் களைத்துப் போகவேண்டியதாயிருக்கும். ஆகையால், ஒருவன் கைகளைக்கட்டிக்கொண்டு, கால்களைவிரித்துக்கொண்டு மல்

லாந்து தண்ணீரின்மேல் மிதந்து இன்னமொருவன் அவனைப்பத்துநிமிஷம் தள்ளிக்கொண்டுபோகிறது. மாற்றிமாற்றி, இந்தவிதம் போய்க்கொண்டிருந்தோம்.

மிருகமும் கப்பலும் ஒன்றோடொன்று மோதிக்கொண்டது இராத்திரி பதினொருமணிக்கு. சூர்யோதயம் வரையில் நீந்தினால், எட்டுமணி நீந்தவேணும். சமுத்ரத்தில் கொந்தளிப்பே யில்லை. அது எங்களுக்கொரு சாதகம்.

என்றாலும் இராத்திரி ஒருமணிக்கு எனக்குக் களைப்பாயிருந்தது. கான்ஸெல் கிட்ட இருந்து அதிக ஒத்தாசைசெய்தான். அவனுக்கும் சீக்கிரத்தில் மூச்சு வாங்கினது. எத்தனை நாழி இப்படி சமாளிக்கமுடியும்?

நான்:— கான்ஸெல், என்னை விட்டுவிடு. நீயாவது பிழைத்துக்கொள். இரண்டுபேரும் மடிவதில் என்ன பிரயோஜனம்?

கான்ஸேல்:— தங்களை விட்டுவிடுகிறதா? மரிக்க வேண்டியதானால், முதலில் போகவேண்டியவன் நானே.

இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது சந்திர வெளிச்சம் தெரிந்தது. ஐந்துமைல் தூரத்தில் கப்பல் போய்க்கொண்டிருந்தது. தோணிவாசனையேயில்லை.

ஒத்தாசை வேணுமென்று நானும் கத்தினேன். கான்ஸெலும் கூவினான்.

நான்:—கான்ஸெல், காதிலே ஏதோ ஒருசப்தம் எனக்குக்கேட்டது. உனக்கும் அதுகேட்டதோ ?

மறுபடியும் கான்ஸெல் ஒத்தாசைக்காகக் கூவி ஞன்.

இப்போது மனுஷ்யக்குரல் கேட்டது. அதற்குச் சந்தேகமேயில்லை. கான்ஸெலுக்கு சக்தியெல்லாம் போய்விட்டது. என்னுடைய தோள்மேல் சாய்ந்து கொண்டு, கொஞ்சம் ஜலமட்டத்துக்குமேலே தலையை நிமிர்த்து, உடனே அதிக சோர்வுடன் கீழே விழுந் தான்.

நான்:— என்ன தெரிந்தது ?

கான்ஸெல்:— பேசிக்களைப்படையவேண்டாம். நமக் குள்ள சக்தியை இன்னம் சற்று நேரம் வைத் துக்கொண்டிருக்க வேணும்.

கான்ஸெல் எதைப்பார்த்தான்? மிருகத்தையா பார்த்தான்? ஐயோ, அது எங்களை விழுங்கி விடவா? ஆனால், மனிதக்குரலல்லவா கேட்டது.

கான்ஸெல் என்னைத் தள்ளிக்கொண்டு முன் போல் நீந்த ஆரம்பித்தான். இடையிடையில் தலையைத் தூக்கிக்கொண்டு, கத்துவான். இதற்குப் பதில்குரலும் கேட்டது.

எனக்குச் சக்தியேயில்லை; காது கேட்கவில்லை; கைகளுக்குத் தண்ணியில் தப்புக்கொட்ட பலமில்லை; வாய் நிறைய உப்பு ஜலம் நிறைந்து, அதைக் கொப்ப ளித்துவிடத் திராணியில்லை.

இந்த சமயத்தில் கட்டியாய் ஏதோ ஒன்று என் மேல் இடித்தது. அதைப் பிடித்துக்கொள்ளவே, அது

மேலே என்னை இழுத்து, ஜல மட்டத்துக்கு வந்தவுடன் நான் மயங்கிப்போனேன். வெகு சீக்கிரத்தில் எனக்கு பிரக்ஞை வந்து, கண்ணைத் திறந்தேன். 'கான்ஸெல்' என்று முளறினேன். 'என்னை அழைத்தீர்களா?". கண்ணைத்திறந்து பார்த்தேன். சந்திர வெளிச்சத்தால் கான்ஸெல் பக்கத்தில் இன்னொரு மனித உருவம் இருந்தது தெரிந்தது.

"நெட்லாண்டா?"

"அவன்தான்."

"என்னைப்போலவே, அதிர்ச்சியினால் நீயும் கடலில் விழுந்து விட்டாயோ?"

"ஆம்; ஆனால் உம்மைப்பார்க்கிலும் நான் அதிக அதிர்ஷ்டசாலி; மிதந்துகொண்டிருந்த ஒரு தீவின் மேல் விழுந்தேன்.

நான்:—தீவா?

நெட்:— ஆம். நம்முடைய சிநேகிதன், பூதாகாரமான காண்டாமிருகத்தின் மேல்.

நான்:—எனக்கு நீ சொல்லுகிறது புரியவில்லை.

நெட்:—என்னுடைய ஈட்டி அந்தப்பிராணிக்கு ஒரு சேதமும் உண்டாக்காமல் எதனால் மழுங்கிப் போனதென்று எனக்குத்தெரிந்தது. அந்தத் திமிங்கிலத்தின் மேல்தோல் இரும்புத்தகடுகளினாலாயிருக்கிறது.

இதைக்கேட்டவுடன் எனக்கு ஆச்சர்யமுண்டாய், எதன்மேல்இருந்தோ அதை உதைத்தேன். அது வெகு கடினமாயிருந்தது. ராக்ஷச உருவமுள்ள கடல் ஜெந்துக்கள் மாதிரியாகவே அது இல்லை.

பிரளய காலத்துக்கு முன்னே இருந்ததாகத் தெரிகிற சில ஜெந்துக்களைப்போல, எலும்பினாலான தோலோ? இதன் தோல்? ஆமைகளைப்போலும், முதலைகளைப்போலும், ஜலத்திலும் தரையிலும் வசிக்கக்கூடிய பிராணிபோலிருக்கிறது. நாங்கள் உட்கார்ந்திருந்த இடம் வழவழப்பாயிருந்தது. தட்டினால், வெங்கலத்தைப்போல, கிணீர் என்றசப்தம் உண்டானது. அனேக இரும்புத் தகடுகளைச் சேர்த்து ஆணி போட்டு இறுக்கி இருப்பதாகத் தோன்றினது. ஜலத்துக்குள் ஊடுருவிப்போகும் ஒரு விதத்தோணி—பார்வைக்கும், நாம் நிதானிக்கக்கூடிய அளவிலும், இரும்பினால் செய்யப்பட்ட பிரம்மாண்டமான மீன்— இதுதான் நெட்லாண்டுடைய அபிப்ராயம். எனக்கும் கான்ஸெலுக்கும் ஒன்றும் புரியவில்லை.

நான்:—வேகமாய்ப் போவதற்கு அதன் தேகத்தில் ஒரு இயந்திரமும் அமைக்கப் பட்டிருக்கிறது. அதைச் சரியானதிக்குகளில் திருப்பவும் மாலுமிகள் இருக்கவேணும்.

நெட்:—மூன்றுமணி நேரம் அதன்மேல் இருந்திருக்கிறேன். அதற்குப் பிராணன் இருப்பதாகவே தெரியவில்லை.

நான்:—இந்தத்தோணி அசையவேயில்லையா?

நெட்:—அலைகளில் முன்னும் பின்னும் ஊஞ்சலாடிக் கொண்டிருக்கிறது. அதற்கு மேல் அசைவேயில்லை.

இப்படிச்சொல்லிக்கொண்டிருக்கும்போதே அது

அசைய ஆரம்பித்தது. நாங்கள் உடனே வெகு வேகமாய் அதன் உயர்ந்த பாகத்தில் ஏறிக்கொண்டோம். அது ஜலமட்டத்துக்கு ஒரு கெஜம் உயர்ந்திருந்தது.

நெட்:—அலைகள் மேல் இது எங்கே சவாரிசெய்தாலும் எனக்கு ஆக்ஷேபனையில்லை. ஜலத்துக்குள் முழுக அதற்கு யோஜனை தோன்றினல் அப்போது நமக்கு சனி திசைதான்.

இதற்குள் மனிதர்கள் எங்கேயாவது இருந்தால், அவர்களைப்பார்த்து சிநேகம் பண்ணவேண்டாமா? இந்த உத்தேசத்தோடு எங்கேயும் பார்த்தேன்; ஆணி அடித்து முடுக்கி இருக்கிறதே தவிர, துவாரம் எவ்விடத்திலுமில்லை.

சந்திராஸ்தமனமும் ஆய்விட்டது; எங்கும் காடாந்தகாரமாயிருந்தது. சூர்யோதயமானல்தான் இந்த மிருகத்தின் செய்தியை விசாரிக்கலாம்.

இந்தத்தோணியை ஓட்டும் மானுஷிக்கு சுவாசம் விட ஆகாயம் வேண்டாமா? அதையும் உள்ளே யிருந்துகொண்டு செய்துகொள்ள அவனுக்கு சக்தியுண்டோ? அந்த சக்தியில்லாமற்போனல் அடிக்கடி வெளியே அவன் வரவேண்டியதுதானே. வெளியே வருவதற்கு எங்கேயாவது வழியிருக்கவேணும்; இது நிச்சயம்.

பாரகூட், எங்களை வந்து இரக்ஷிப்பான் என்கிற ஆசை போய்விட்டது. நாங்கள் மேற்கே மணியொன்றுக்கு பன்னிரண்டுமைல் வீதம் வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறோம். திருகு சரியாய்த் திருகிக்கொண்

டிருந்தது. அப்போது ஜலம் தாரைதாரையாய் வெகு வெளிச்சத்துடன் உயரக்கிளம்பிக்குதித்துக்கீழேவிழுந்தது. இராத்திரி நாலுமணி ஆக, வேகம் அதிகரித்தது. நாலுபக்கத்திலும் அலைகள் மும்முரமாய் மோதியதால், இந்த வேகத்தால் எங்களுக்கு மயக்கமும் உண்டானது. இதற்குள் ஒரு இரும்புவளையம் முதுகின்மேல் அடித்திருப்பதை நெட் கண்டுபிடித்தான். உடனே எல்லாரும் அதைப் பிடித்துக்கொண்டு சாவதானமாயிருந்தோம்.

பொழுதும் விடிந்தது. இராத்திரி முழுவதும் நடந்த விஷயங்களை நினைத்துப்பார்த்தால் பயங்கரமாயிருக்கிறது. ஆனால், அலைகள் அடிப்பதும் காற்று வீசுவதும் நின்றபோதெல்லாம், அடங்கின சங்கீதம் எங்கேயோ கேட்டதாக ஞாபகமிருக்கிறது.

சூர்யோதயமானது. கொஞ்ச நேரம் எங்கேயும் மூடுபனியிருந்து, அதுவும் மறைந்து போயிற்று. இனி நாமிருக்கு மிடத்தைக் கவனித்துப்பார்க்கலாமென்று சந்தோஷிக்கிற க்ஷணமே, கொஞ்சம் கொஞ்சமாய்க் கீழே அமுங்கிப்போகிறதாய்த் தெரிந்தது.

நெட்லண்டு அதிக கோபத்துடன் காலால் உதைத்தான். "தயைதாக்ஷிணியமில்லாத பாதகர்களா, கதவைத் திறவுங்கள். நாங்கள் மூன்றுபேரும் மடிந்து போகிறதா" என்று அவன் கத்தினன். திருகாணி திருகிக் கொண்டு தோணி போய்க்கொண்டிருக்கும்போது நெட்லண்டு குரல் யாருக்குக்கேட்கும்? அதிர்ஷ்டவசமாய் அமுங்குவது நின்றது. சடுதியில் தோணிக்குள் பல

மான இரும்புக் கம்பிகளை நீக்குகிற சப்தம் கேட்டது; ஒரு தகடு கிளம்பினது; ஒரு மனிதன் வெளியேவந்து, விநோதமாய்க் கூவி விட்டு, உடனேமறைந்துபோனுன். கொஞ்சநேரத்துக்குப் பிறகு ஏழு எட்டு மனிதர்கள்—வெகு பலசாலிகள்—முகத்தை மூடிக்கொண்டு, வெளியே வந்து எங்களைப் பிடித்து உள்ளே இழுத்துக்கொண்டு போனுர்கள்.

---

## அத்தியாயம் 8

என் தேகம் முழுவதும் நடுங்கினது. யார் எங்களை இப்படி உள்ளே இழுத்துக்கொண்டு போனுர்கள்? கடற் கொள்ளைக்காரர்களோ?

மேல்தட்டு மூடினவுடன், உள்ளே வெகு இருட்டாய் இருந்தது. இரும்பு ஏணியில் என் கால் வைத்திருப்பதாக எனக்குத் தோன்றினது. நெட்லாண்டும் கான்ஸெலும் கெட்டியாய் ஒருவனை ஒருவன் பிடித்துக் கொண்டு என்னைப் பின்தொடர்ந்தார்கள். ஏணியின் கீழே ஒரு கதவு திறந்து, உடனே அறைந்து சாத்தினது. மூன்றுபேரும் தனியாய் இருந்தோம். எங்கே பார்த்தாலும் இருட்டு.

நெட்லண்டுக்குக் கோபம் மிகுந்து, "இந்தக் காட்டாள்கள் யார்? நர மாம்ஸ பக்ஷணம் செய்கிறவர்களோ? இருக்கட்டும்; என்னிடத்தில் வருவதற்கு முன்னே, நான் இன்னுனென்றும் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். என்னுடைய கத்தி அதிர்ஷ்டவசமாய்என்னிட

த்திலிருக்கிறது. இந்தத் திருட்டுப் பயல் எவனாவது என்கிட்ட வந்தால்—"

நான்:—அவ்வளவு கோபம் வேண்டாம். கோபிப்பதில் என்ன பிரயோஜனம்? நாம் எங்கே இருக்கிறோ மென்பதைக் கவனித்துப் பார்த்தால் உபயோகமாயிருக்கும்.

நான் கையை விரித்துக்கொண்டு குருட்டாட்டமாய்ப்போனேன். ஐந்து அடி போனவுடன், இரும்புத் தகடுகள் அடித்த ஒரு சுவரைத் தடவிப்பார்த்தேன். திரும்பினபோது, ஒரு மரமேஜைமேல் தடுக்கிவிழுந்தேன். அதற்கு ஸமீபத்தில் சில ஆசனங்கள் இருந்தன. தரையின்மேல் பாய் பரப்பியிருந்தது. சுவரில் கதவு ஜன்னல் ஒன்றும் தெரியவில்லை. எதிர்த் திசையை நோக்கிப் போய்க்கொண்டிருந்த கான்ஸெல் திரும்பிவந்தான். இந்த அரை இருபது அடி நீளமும் பத்தடி அகலமும் என்று தோன்றினது. உயரம் இவ்வளவென்று தெரியவில்லை.

இப்படி அரைமணி நேரம் ஆனபிறகு, வெகு பிரகாசமான வெளிச்சம் காணப்பட்டது. இதென்ன ஆச்சர்யம்? வெளிச்சம் தாங்கமுடியாமல், கண்களை மூடிக்கொண்டேன். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு கண்ணைத் திறந்து பார்க்க, அந்த அறையின் ஒரு மூலையில் விளக்கு வைத்திருந்தது.

நேட்லண்ட்:—இந்த வெளிச்சம் நல்லதுதான். யாராவது வந்தால் நமக்குத் தெரியும்.

அந்த அறையின் மத்தியில் ஒரு மேஜையும்

ஐந்து முக்காலிகளும் இருந்தன. கதவு இருந்த இடமே தெரியவில்லை. ஒருவிதமான சப்தமும் காதில் கேட்கவில்லை. இந்தக்கப்பல் சமுத்திரத்துக்குள் போய்க் கொண்டிருந்ததோ அல்லது ஜலமட்டத்தின் மேல் யாத்திரை செய்துகொண்டிருந்ததோ ஒன்றும் தெரியாது.

கொஞ்சநாழிகைக்குப்பிறகு கதவைத்திறந்துகொண்டு இரண்டு மனிதர்கள் வந்தார்கள். ஒருவன் குட்டை, ஆனால் வெகு பலசாலி; அகன்ற தோள்; புத்திசாலித்தனத்தைக் குறிக்கும் முகம்; கறுத்த மயிரும் தாடியும்; பிரெஞ்சுக் காரர்களுடைய சுறுசுறுப்பான சுபாவம். இரண்டாவது மனிதனை உற்றுப்பார்த்தால், பின்வரும் குணங்கள் அவனிடத்திலிருப்பாய்த் தெரியவரும். தன்னுடைய சக்தியில் நம்பிக்கை ஜாஸ்தி; அடக்கம் அதிகம்; பரபரப்பு இல்லை; புருவங்களை நெறிப்பான்; தைர்யசாலி; ஆண்மை மிருதி. இது தவிர, தான் என்கிற அகங்காரம் உண்டு; உயர்ந்தவிஷயங்களைச் சிந்திப்பவன்; கபடமற்றவன்.

இந்த இரண்டாவது மனுஷ்யனைக் கண்டவுடன் எனக்கு ஆறுதலுண்டாயிற்று. முப்பத்தைந்து முதல் ஐம்பது வரையில் அவனுக்கு வயசு சொல்லலாம். அவன் நெட்டை; பரந்தமுகம்; நேரானமூக்கு; சரியாய் அமைந்தவாய்; அழகிய பற்கள், நீண்டமெலிதான பலமுள்ள கைகள். இவனைப்பார்க்கப் பார்க்க எனக்குச் சந்தோஷமுண்டாயிற்று.

நெட்லண்டைக் காட்டிலும் கூர்மையான பார்வை

யுள்ளவன். அந்தக்கப்பலுக்கு இவன் தான் தளகர்த்த னென்று தோன்றியது. ஒருவார்த்தையும் பேசாமல், எங்களை வெகு கவனமாய் இவன் பார்த்தான். பிறகு எனக்குப்புரியாத ஏதோ பாஷையில் தன் பக்கத்தி லிருந்தவனுடன் பேசினான். அவனும் அதேவிதம் பதில் சொன்னான். பழையபடி எங்களைப்பார்த்துத் தானே எங்களை விசாரித்தான். நான் பிரெஞ்சு பாஷை யில் பேசினேன்; இது அவனுக்குக்கொஞ்சமும் தெரிய வில்லை. இனி என்ன செய்வதென்பது தெரியவில்லை.

கான்ஸெலுடைய யுக்தியை அனுசரித்து, எங்க ளுடைய அனுபவங்களை விவரித்துச்சொல்லப் புகுந் தேன்; எங்களுடைய பெயரையும் அந்தஸ்தையும் தெளிவாய்ச்சொன்னேன். வெகு கவனமாய்க்கேட்டும், நான் சொன்னதைச் சற்றேனும் அறிந்தவனாய்த் தோன்றவில்லை.

நெட்லண்டுக்கு இங்கிலீஷ் தெரியுமாதலால் அதில் அவனைப்பேசச் சொன்னேன். என்னைப்போல் சாந்தமாய்ப்பேசாமல், வெகு கோபத்துடன், தரையை உதைத்து, உரக்கக்கத்தினான். எங்களை இம்மாதிரி காவலில் அடைத்தது அக்கிரமமென்று அவன் கடுமை யாய்ச்சொன்னான். இதுவும் கப்பல் தளகர்த்தனுக்குப் புரிய வில்லை.

கான்ஸெல் ஜெர்மன் பாஷையில் பேசப்பார்த் தான். அதிலும் ஒரு பிரயோஜன முண்டாகவில்லை.

ஆகவே, எங்களுக்குத்தெரிந்த பாஷையில் ஒன் றும் அவர்களுக்குத் தெரியவில்லை. இரண்டுபேரும்

உடனே எழுந்து தங்களுடைய அறைக்குள் போய் முன்போலக் கதவைச்சாத்திக்கொண்டார்கள்.

நெட்லண்ட்:—இது அயோக்கியத்தனம்! இந்தப்பயல்களிடத்தில் என்ன பாஷை பேசியும் பிரயோஜனமில்லை. மரியாதைக்காகவாவது ஒரு வார்த்தையும் பதில் பேசவில்லை. சுத்தப்போக்கிரிகள்!

என்று இந்த விதமாய் வெகு கோபத்துடன் பதறிப் பதறிப்பேசினான்.

நான்:—கோபித்துக்கொள்வதில் என்ன லாபம்? கொஞ்சம் சாந்தமாயிரு.

நெட்:—இந்த இரும்புக்கூண்டில், வாயை மூடிக்கொண்டிருந்து, பட்டினியாய் இறந்துபோகிறதா?

கான்ஸெல்:—இன்னும் கொஞ்சம் பொறுத்துப்பார்க்கலாம்.

நான்:—உங்களைப்போல எனக்கு அவ்வளவு பயம் தோன்றவில்லை. இந்தக்கப்பலிலிருப்பவர்களைப் பற்றி என் மனதில் கெட்ட அபிப்பிராயம் உண்டாகவில்லை.

நெட்:—அவர்களைப்பற்றி எனக்கு அபிப்பிராயம் உண்டாகிவிட்டது. அவர்கள் ஓச்சாப்பயல்கள்.

நான்:—அப்படியே இருக்கட்டும். அவர்கள் எந்த ஊர்?

நெட்:—ஓச்சா ஊர்.

நான்:—நீ சொல்லுகிற ஊர் எந்தப்படத்திலும் நான் பார்த்ததில்லையே. அவர்கள் வடக்குத்தியான்கள் அல்ல; தெற்கே பிறந்து வளர்ந்தவர்கள்

போலிருக்கிறது. எந்ததேசம் என்று ஒன்றும் புரியவில்லை.

கான்ஸேல்:—நமக்கு அனேக பாஷைகள் தெரிந்திருந்தால் இந்தக் கஷ்டம் வந்திருக்காது. ஏன் உலகம்முழுவதும் ஒரே பாஷையாய் இருக்கக் கூடாது? அப்போது எவ்வளவு சௌகர்யமாயிருக்கும்!

நெட்:—இவர்கள் ஸ்வயமாய் ஒரு பாஷை உண்டாக்கிக் கொண்டு பேசுகிறார்கள். இந்தத் துஷ்டர்கள் முன் எத்தனை பாஷை நமக்குத் தெரிந்திருந்தாலும் உபயோகமில்லை. எந்த ஊரிலானாலும், வாயைத்திறந்தால் கொஞ்சமாவது புரியாதா? நாம் சொல்லுவதெல்லாம் இந்தப்பாதகர்களுக்குத்தெரியும். அவர்கள் பேசுகிற பாஷை மனிதனாலுண்டானதல்ல. பிசாசோ, ராக்ஷசனோ அதை உண்டாக்கினது என்பதற்கு எனக்குச் சந்தேகமில்லை.

இப்படி நாங்கள் பேசிக்கொண்டிருந்த போதே, கதவு திறந்து, ஒரு வேலைக்காரன் எங்களுக்குக் கப்பலில் வசிப்பதற்குத் தகுந்த உடுப்புகள் கொண்டுவந்து கொடுத்தான். நானும் என்னுடைய சினேகிதர்களும் அவைகளை உடனே உடுத்திக்கொண்டோம். இதற்குள், அதேமனிதன்—செவிடோ ஊமையோ இன்னதென்று தெரியவில்லை—நாங்கள் மூன்று பேரும் சாப்பிடுவதற்காக, மேஜையையும் தயார் பண்ணினான்.

இதைப்பார்த்தவுடன் கான்ஸெலுக்குச் சந்தோஷமுண்டானது.

நெட்லண்ட்:—வேடிக்கைதான்! நல்ல தீனி நமக்குக் கிடைக்கப்போகிறது! ஆமை, கடல்நாய், சுறா மீன்—இந்த விருந்துதான் அகப்படும். வீணாய் ஆசைப் படவேண்டாம்.

இலெக்ட்ரிக் வெளிச்சம் வெகு பிரகாசமாயிருந்தது. சாப்பிடக் கொண்டுவந்து வைத்த பாத்திரங்கள் வெள்ளியினாலானவை. ஜலம் வெகு சுத்தமாயிருந்தது; சாப்பாடெல்லாம் வெகு பரிஷ்காரமாய் சமையல் செய்திருந்தது. ருசியான பதார்த்தங்களும், காரமான உணவுகளும், எல்லாம் வெகு உவப்பாய் இருந்தது.

எங்களுடைய பசி ஜாஸ்தியாயிருந்ததால், நாங்கள் உபசாரத்துக்குக் காத்தவில்லை. தவிர, எங்களைப் பட்டினிபோட்டுக் கொன்றுவிடவேணுமென்கிற எண்ணம் கொஞ்சமும் கப்பல் தலைவனுக்கு இல்லை என்பதுதெளிவாய்த் தெரிந்தது. இதனால் உண்டான திர்ப்திக்கு அளவில்லை. பதினைந்து மணிநேரம் ஒன்றும்சாப்பிடாத எங்களுக்கு வயிர் நிறைய உணவு கிடைத்தவுடன், அயர்ந்த தூக்கம் வந்துவிட்டது.

கான்ஸேல்:—நான் நன்றாய்த் தூங்குவேன் தடையில்லை.

நெட்லண்ட்:—எனக்குத் தூக்கமே வந்துவிட்டது.

இவர்கள் இரண்டுபேரும் தரையில் படுத்து குறட்டை விட்டுக்கொண்டுத் தூங்கினார்கள். நான் அவ்வளவு அவசரப்படவில்லை.

"எங்கே இருக்கிறோம்? யாருடைய அதிகாரத்

துக்குள்பட்டிருக்கிறோம்?" என்று நான் யோஜித்துக் கொண்டிருந்தேன். இந்தக் கப்பல் சமுத்ரத்தில் உள்ளே போய்க்கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றினது. அமுக்குப்பிசாசு மார்பில் ஏறிக்கொண்டு அமுக்குவதாகவும் தோன்றியது. கொஞ்சநேரம் இப்படியெல்லாம் அவஸ்தைப் பட்டுவிட்டு நானும் தூங்கிப் போனேன்.

---

## அத்தியாயம் 9

### நெட்லண்டுடைய கோபம்

எத்தனை நாழி நாங்கள் தூங்கினோமென்பது எனக்குத் தெரியாது. ஆனால் விழித்துக் கொண்டவுடன், அதிக களைப்பாறி வெகு தெம்பாயிருந்தது. நான்தான் முதலில் விழித்துக்கொண்டேன். நாங்கள் இருந்த அறையைக் கவனமாய்ப் பார்த்தேன். வெளியில் தப்பிஓட வழியில்லை; அது எங்களுடைய காவற்கூடமென்பதற்குச் சந்தேகமில்லை. நாங்கள் தூங்கிக்கொண்டிருந்த போது, மேஜைமேலிருந்த சாப்பாட்டுப் பாத்திரங்களையெல்லாம் யாரோ எடுத்துவிட்டார்கள். இக்கூட்டில் எத்தனைநாள் வசித்திருக்க வேணுமோ, அது ஈச்வரனுக்குத்தான் தெரியும்.

அறை பெரியதாயிருந்தாலும், நல்லகாற்று வெளியிலிருந்து வந்து உலாவாததினால் எனக்கு வெகு சிரமமாயிருந்தது; மூச்சு விடுவதுகூட கஷ்டமாயிருந்தது. கப்பலுக்குள் இருப்பவர் எல்லாருக்கும் இப்படித்தானே இருக்கவேணும். தலைவன் பெரிய மனுஷ்யனா

கத் தோன்றியதே. அவன் எப்படி சகித்திருப்பான்? இரசவாதத்தினுல், கப்பலுக்குள் இருக்கும் அசுத்த வாயுவை சுத்தம்பண்ணி உபயோகித்துக் கொள்ளுகிறுனே? அப்படி இரசவாத அப்பியாசம் செய்வதற்கும் சாமான்கள் வேணுமே, அவைகள் எவ்விதம் அவனுக்குக் கிடைக்கும்? அல்லது, சமயா சமயங்களில் வெளியில்வந்து, இருபத்துநாலு மணிநேரத்துக்கு வேண்டிய சுத்த வாயுவை உட்கொண்டு போய்விடுகிறுனே?

இப்படி விசாரம் செய்துகொண்டு இருக்கையில், என்ன செய்யலாமென்று தவித்துக்கொண்டிருக்கும் போது, திடீரென்று வெகு சுத்தமானவாயுவு உள்ளே புகுந்து எனக்குத் தைரியம் உண்டாக்கினது. அது சமுத்திரக் காற்றென்பதற்கு சந்தேகமில்லை. சுத்தமான வாயுவை உட்கொள்ள திமிங்கிலங்கள் அடிக்கடி ஜலமட்டத்துக்கு வருவதுபோல், இந்தக் கப்பலும் மேலேகிளம்பி வந்ததாகத் தெரியவந்தது. கெட்டியாய் அடைபட்டிருந்த கதவுக்குமேலே ஒருதுவாரம் இருந்தது. அந்ததுவாரத்தின் வழியாய்த் தான் சமுத்ரக் காற்று உள்ளே வந்தது. அந்தக் காற்று உள்ளே வரவும், நெட்லண்டும் கான்ஸெலும் ஒன்றுய் விழித்துக் கொண்டார்கள்.

கான்ஸேல்:—எஜமான் நன்றுய்த் தூங்கினீர்களா?

நான்:—நான் வெகு அயர்ந்து நித்திரைபோனேன். நீங்களோ?

நெட்லண்ட்:—எனக்குத் தூக்கம் வெகு ஸ்வாரஸ்ய

மாய் இருந்தது. சமுத்ரக்காற்று வாசனை தெரிகிறதே, அது எப்படி? நம்முடைய லிங்கன் கப்பல் இதற்குச் சமீபத்திலிருக்கையில் ஏதோ சப்தம் கேட்டதே, அதனுடைய அர்த்தம் இப்போது தெளிவாகிறது. அதிருக்கட்டும், இப்போதென்ன இராத்திரி சாப்பாட்டுச் சமயமோ?

நான்:—காலை சாப்பாட்டுச் சமயம்.

நெட்:—அப்படியானல், இருபத்து நாலுமணியா தூங்கினேம்?

நான்:—எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது.

நெட்:—எது எப்படியிருந்தாலும், இப்போது சாப்பாடுவந்தால் சந்தோஷமாயிருக்கும். இரண்டு வேளைச் சாப்பாடும் வந்தால், சாப்பிடுகிறதற்கு நான் சித்தமாயிருக்கிறேன்.

நான்:—நான் சொல்வதைக் கவனி, நம்மை பட்டினி போட இவர்களுக்கு எண்ணமில்லை. அப்படியிருந்தால் ஏன் நேற்றைக்கு நமக்கு சம்பிரமமாய்ச் சாப்பாடு போட்டார்கள்.

நெட்:—கொஞ்சம் கொழுப்பு உண்டாக்குகிறதற்காக சாதாரணமாய் ஆடுகள், கோழிகள், வாத்துகளுக்கு நல்லதீனிபோட்டு, கொழுக்கவைத்து, பிற்பாடு அவைகளை மனிதர் என்ன செய்கிறார்கள், மறந்துபோய் விட்டதா?

நான்:—இந்த வார்த்தை சரியல்ல. அதை நான் ஒப்புக்

கொள்ள மாட்டேன். அவர்கள் நர மாம்ஸ பக்ஷிணிகள் அல்ல.

நேட்:—எனக்குப் பசி ஜாஸ்தியாயிருக்கிறது. சாப்பாடோ ஒன்றும் வரக்காணுமே?

நான்:—ஒரு தேசத்தில் சாப்பிடுகிற வேளையில் மற்றொரு தேசத்தில் சாப்பிடுகிறார்களா? ஒருவன் சாயங்காலம் நாலுமணிக்குச் சாப்பிடுகிறான், இன்னமொருவன் எட்டுமணிக்கு உண்கிறான். ஆகவே, இந்தக்கப்பலில் ஏற்படுத்தியிருக்கும் சாப்பாட்டுவேளை இன்னும் வரவில்லையென்று தோன்றுகிறது.

நேட்:—கப்பலிலிருப்பவர்கள் வெகு நல்லவர்களென்று சொல்லுகிறீரே, அவர்கள் நம்மை எவ்வளவு காலம் இங்கே காவலில் வைத்திருப்பார்கள் என்று உமக்குத் தோன்றுகிறது?

நான்:—அந்த விஷயத்தில் எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஆனாலும், இந்தக்கப்பல் விஷயம் வெகு இரகஸ்யம். அந்த இரகஸ்யத்தை இரகஸ்யமாகவே வைக்கவேணுமென்று கப்பல்காரர்கள் நினைத்தால், நமக்கு அபாயமுண்டென்று பயப்படுகிறேன். அதிக இரகஸ்யமென்று அவர்கள் நினைக்காத பக்ஷத்தில், கடலோரம் கண்டவுடன் நம்மை இறக்கி விடுவார்களென்று எனக்குத் தோன்றுகிறது.

நேட்:—இப்படிப் பேசுவதில் என்னலாபம்? நாமென்ன

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,

ஆடுகளா? ஏதாவது செய்து தப்பப்பார்க்க வேணும்.

நான்:—தரையிலுள்ள சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடுவதே கஷ்டம்; கடலின் மத்தியில் கப்பலில் அடைபட்டவர்கள் தப்பி ஓடுவது அசாத்தியம்.

நெட்:—ஓடிப்பிழைப்பது கஷ்டமாயிருந்தால், எந்த விதம் நாமிங்கே யிருப்பது என்பதை தீர ஆலோசிக்கவேணும். காவல்காரர்களை ஜெயித்து, காப்பான்களை நீக்கி, கதவைத் திறந்து கொண்டாலோ?

கான்ஸெல்:—நிஜமாய்த்தான் இப்படி யோஜனை பண்ணுகிறாயா?

நெட்:—அதற்குச் சந்தேகமில்லை.

கான்ஸெல்:—முடியாத விஷயம்.

நெட்:—சமயம் வரலாம். இந்தக்கப்பலில் இருபது பேருக்குமேல் இராமலிருந்தால், அவர்கள் நமக்கு எப்படி சமானமாவார்கள்? இரண்டு பிரெஞ்சுக்காரர்களும் ஒரு கனேடியனும் சேர்ந்தால் என்ன தான் செய்ய முடியாது?

நான்:—சந்தர்ப்பத்துக்குத் தகுந்ததுபோல் நடந்துகொள்ளலாம். அதுவரையில் பதஷ்டம் வேண்டாம்.

நெட்:—வாயால் ஒன்றும் பேசிவிடமாட்டேன்; அது சத்தியம். ஜாடையினாலும் என் மனஸைத்

தெரிவிக்கவில்லை. சரியான வேளைகளில் சாப்பாடு வராமலிருந்தாலும் நான் வாயை மூடிக்கொள்கிறேன். இந்த விஷயத்தில் பேச்சுத் தவறமாட்டேன்.

நான்:—இவ்வளவு உறுதியாய் நீ சொல்வது எனக்கு சந்தோஷம்.

இவ்வளவு வாக்குக்கொடுத்தும், நெட்லண்ட் தனக்குள்ளே என்னமோ பேசிக்கொண்டான். அவன் கை ஜாடையையும் கால் ஜாடையையும் பார்த்தால், சண்டைக்குத் தயாராவதுபோல் தோன்றியது. தரையிலிருந்து எழுந்திருந்து, கூட்டுக்குள் அடைபட்ட புலிபோல் முன்னும்பின்னும் நடந்தான். ஒரு சமயத்தில் சுவரைக் கையால் இடிப்பான்; இன்னமொருசமயத்தில் காலால் உதைப்பான்; கொஞ்சம் நாழியாக* கோபம் தணிந்து பசிமேலிட்டது. நெட்லண்டுக்கு பசி ஜாஸ்தியாக முன்போலக்கோபம் வந்துவிட்டது. இந்த சமயத்தில் கப்பல்காரர்கள் யாராவதுவந்தால் அவன் என்ன செய்துவிடுவானோ என்று எனக்குப் பயமாயிருந்தது. இன்னும் இரண்டுமணி ஆகியும் ஒருவரும் சாப்பாடு கொண்டுவரவில்லை. நெட்டுக்குக் கோபம் காலாக்னிபோல் பொங்கியது. கத்திப்பார்த்தான்—ஒன்றும் பிரயோஜனப்படவில்லை.

எனக்கும் துக்கம் அதிகரித்தது; நம்பிக்கை குறைந்தது; தைரியம் தளர்ந்தது. வெகு சிரேஷ்டனென்று நான் நினைத்திருந்த தலைவனெங்கே? அவனுடைய குளிர்ந்த முகமும், பெருந்தன்மையான பார்வை

நான்:—வேணுமென்று நாங்கள் அப்படிச் செய்ய வில்லை.

கப்பல் தலைவன்:—நீங்கள் உத்தேசிக்காமலேயா செய் தீர்கள்? சபாஷ்! இவ்வளவுகாலம் 'லிங்கன்' கப்பல் யோஜிக்காமலா என்னைப் பின் தொடர்ந்து வந்தது? யோஜிக்காமலா நீங்கள் அந்தக் கப்பலில்ஏறினீர்கள்? யோஜிக்காமலா என் கப்பலைப்பிளக்க நீங்கள் குண்டுபோட்டு சுட்டீர் கள்? யோஜிக்காமலா நெட்லண்ட் ஈட்டியைக் கொண்டு என் படகைக் குத்தினான்?

அதிக கோபாக்கிராந்தனாய், கோபத்தையும் அடக்கினவனாய், அவன் இம்மாதிரிபேசியதற்கு நானும் கபடமற்று பதில் உரைத்தேன்:

"ஐரோப்பாவிலும் அமேரிக்காவிலும் ஜனங்கள் உம்மைப்பற்றி என்ன பேசினார்கள் என்பது உமக்குத் தெரியாது. அனேக கப்பல்களோடு உம்முடைய கப்பல் மோதியதால் இரண்டு கண்டங்களிலும் உம்மைக் கவனிக்க புறப்பட்டார்களென்றும் நீர் அறிந்தவரல்ல. உம்முடைய இரகஸ்யத்தை அறியமாட்டாமல், எத்தனை விதமாய் யுக்திகள் உம்மைப்பற்றி ஏற்பட்டிருக்கின்றன வென்பதை இப்போது சொல்ல எத்தனிக்க மாட்டேன். உம்மை ஒருபெரிய அபூர்வமான காண்டா மிருகமென்று நினைத்து 'லிங்கன்'கப்பல் தொடர்ந்ததே யொழிய வேறல்ல. அப்பேர்ப்பட்ட மிருகம் கடலில் இருந்தால், அதிக சேதம் கப்பல்களுக்கும் மானுஷிகளுக்கும் உண்டாகுமென்பதை நீர் ஒத்துக்கொள்ள வேண்

டியதுதானே. அதற்காகவேதான் உம்மைத் தொடர்ந்து வந்தோம். இது சத்தியம்."

கப்பல்தலைவன்:—(கொஞ்சம்பெருமூச்சுவிட்டு) "காண்டாமிருகமேயல்ல, சமுத்திரத்துக்குள் செல்லும் கப்பல் என்று உங்களுக்கு நிச்சயமாய்த் தெரிந்திருந்தால் பின் தொடராமலிருந் திருப்பீர்களா? சத்தியமாய்ச்சொல்லும்."

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுவது கஷ்டமாயிருந்தது. பாரகூட் தலைவன், காண்டாமிருகமானாலும் கப்பலானாலும் ஒன்றுதான், விட்டிருக்க மாட்டான். எதுவானாலும், ஜலத்துக்குள் அழுத்திவிட்டுப் போவதுதான் தன்னுடைய கடமையென்று நினைத்திருப்பான்.

கப்பல் தலைவன்:—பார்த்தீரா? உமக்கே தெரிகிறதே. உங்களை சத்துருக்கள் என்று ஏன் நான் நினைக்கக்கூடாது?

நான் பதில் சொல்லவில்லை.

கப்பல் தலைவன்:—நான் வெகுநேரம் யோஜனை பண்ணினேன். உங்களிடத்தில் பிரியமாயிருப்பதற்கு எனக்கு ஒரு காரணமும் தோன்றவில்லை. இந்த இடத்திலேயே உங்களை விட்டு விட்டுப் போய்விட்டால், எதற்காக உங்களைத் திரும்பி வந்து நான் பார்க்கவேணும்? கப்பலை சமுத்திரத்துக்குள் அமிழ்த்தி நீங்களிருப்பதையே மறந்து போய் விடலாமே. இப்படி நான் செய்தால் பிசகாமோ?

உங்களுடைய தலையெழுத்து உங்களை இந்தக் கப்பலில் கொண்டுவந்து விட்டபடியால், இங்கேயே இருங்கள். சுயயிச்சையாய் இருங்கள். ஆனால் ஒரேயொரு நிபந்தனை மாத்திரமுண்டு. சில நாள்களில், சில மணி நேரங்கள் உங்களை அடைத்துவைக்க வேண்டி வரும். பலவந்தப் படுத்த வேண்டாமல் நீங்களே அதற்கு உடன் பட்டால் எனக்குத் திருப்தியாயிருக்கும். இந்தக் கப்பலில் உள்ள இரகஸ்யங்கள் உங்களுக்குத் தெரிய விடமாட்டேன். மனஸில் ஒளிக்காமல் பேசியிருக்கிறேன். உங்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லுங்கள்.

நான்:—சம்மதம். ஆனால், இந்தக் கப்பலில் எங்கள் மனசின்படி யிருக்கலாமல்லவா?

தலைவன்:—ஆம்.

நான்:—கப்பலில் எங்களுக்கு முழு சுவாதீன முண்டு என்றால் என்ன அர்த்தம்?

தலைவன்:—எங்கேயும் போகலாம், எதையும் பார்க்கலாம். எனக்கும் என்னுடைய சிநேகிதர்களுக்கும் என்ன சுவாதீனமுண்டோ அது உங்களுக்கு முண்டு.

நான்:—அது காட்டில் வசிக்கும் மிருகத்துக்கு சமான மானவன் அநுபவிக்கும் சுவாதீனம். நாகரீகமுள்ளவனுக்கு இருக்கிற சுவாதீனமல்ல.

தலைவன்:—சரியாய்ப் பார்த்தால் நான் நாகரீகமுள்ளவர்கள் கோஷ்டியில் சேர்ந்தவனல்லவே. உல

கத்தையெல்லாம் வெறுத்துத்தானே இங்கே வந்திருக்கிறேன். எனக்கு சட்டமென்பதே யில்லை. என்னைச் சட்டத்துக்குள்படுத்தாதே யுங்கள்.

இப்படிப் பேசியபோது அவன் முகம் வெகு கடுகடுத்ததாயிருந்தது. அவனுடைய கண்களைக் கவனித்தால் கோபமும் இகழ்ச்சியும் கலந்திருப்பதாய்த் தோன்றியது. இந்த மனுஷ்யனுடைய பூர்வாச்ரமம் வெகு பயங்கரமானதாய் இருந்திருக்க வேணும்.

நான்:—நீர் எங்களுக்குக்கொடுக்கிற சுவாதீனம் கைதிகளுக்குச் சிறைச்சாலையில் கொடுக்கிற சுவாதீனமாயிருக்கிறது. சிறைச்சாலைக்குள் சுய இச்சையாய்ப் போய்த்திரிய இடம் கொடுப்பது போலிருக்கிறது. இது எங்களுக்குப்போதாது.

தலைவன்:—அதுபோதும், அதற்குமேல் உங்களுக்குக் கிடைக்காது.

நான்:—என்ன? எங்களுடைய உறவினர், சிநேகிதர், ஒருவரையும் இனிப்பார்க்கிறதில்லையா?

தலைவன்:—அவர்களையெல்லாம் விட்டுவிட்டு காலக்ஷேபம் பண்ணுவது அசாத்தியமென்று நீங்கள் நினைக்கிறீர்கள். எனக்கு அது ஒரு பெரிய விஷயமாய்த் தோன்றவில்லை.

நெட்:—எது எப்படியிருந்தாலும், நான் தப்பி ஓடப் பிரயத்தனப்பட மாட்டேனென்று சத்தியம் பண்ணிக் கொடுக்கமாட்டேன்.

தலைவன்:—உன்னை நான் கேட்கவில்லை; நாங்கள் பேசும்போது நீ தலையிடாதே.

நான்:—நீர் கேட்பது வெகு குரூரம்; உம்முடைய கையில் நாங்கள் அகப்பட்டுக்கொண்டதால், கண்டபடியெல்லாம் எங்களை வருத்தலாமோ?

தலைவன்:—நீங்கள் யுத்தத்தில் பிடிபட்ட கைதிகள். வாயைத்திறந்தேனானால் உங்களையெல்லாம் சமுத்திரத்தில் விட்டெறிந்துவிட இங்கே மனிதர்கள் இருக்கிறார்கள். அப்படியிருக்க உங்களை எவ்வளவோ உபசாரமாய் நடத்துகிறேன். நீங்கள் என்னைத்தாக்கினீர்கள். நானிருப்பது ஒருவருக்கும் தெரியக்கூடாது. அப்பேர்ப்பட்ட இரகஸ்யத்தை இங்கேவந்து அறிந்துகொண்டு விட்டீர்கள். அப்படியிருக்க உங்களைத் தரையில் இறக்கிவிடுவது எனக்குநல்லதா? என்னைக் காப்பாற்றிக்கொள்வதற்காக, உங்களை இங்கே வைத்துக் காப்பாற்றுகிறேன்.

நான்:—நீர் சொல்வதின் அர்த்தம்—உயிரோடு நாங்கள் இருக்கவேண்டுமானால் இந்த நிபந்தனைக்குள்படவேணும்; இல்லாமற்போனால் இறந்துபோகத் தயாராயிருக்கவேணும்.

தலைவன்:—என்னுடைய அபிப்பிராயத்தை சரியாய்ச் சொல்லிவிட்டீர்.

நான்:—சிநேகிதர்களே, இந்தக்கப்பல்தலைவருக்கு நாம் எப்படி அடங்கினவர்கள்? ஆகையால், அவர் கேட்பதற்குப்பதில்சொல்ல நான் தயாராயில்லை

தலைவன்:—நீர் சொல்வது நிஜம். நான் சொல்ல வேண்டியதை முழுவதும் சொல்லிவிடுகிறேன். ஆரநாக்ஸ், உம்முடைய விஷயம் முழுவதும் எனக்குத்தெரியும். என்னோடு இருப்பதில் உமக்கு யாதொரு நஷ்டமுமில்லை. என்னுடைய புஸ்தகசாலையில் நீர் எழுதின புஸ்தகமும் இருக்கிறது. நான் அதை அடிக்கடி வாசித்திருக்கிறேன். இந்தப் பூமியில் அறிந்து கொள்ளக்கூடிய வரையில் நீர் எழுதிய சாஸ்திரம் சரிதான். உமக்கு எல்லாம் தெரியாது. என்னுடன் இந்தக்கப்பலிலிருந்தால் அனேக விஷயம் கற்றுக்கொள்வீர். இங்கே வந்ததற்காக ஒருநாளும் வருத்தப்படமாட்டீர்; ஆச்சரியம் நிறைந்த இடங்களிலே யாத்திரை செய்யப்போகிறேன்; பார்த்துப்பார்த்து மகிழ்வீர். சமுத்திரத்துக்குள் இருக்கும் உலகம் உமக்குத் தெரியவே தெரியாது. சமுத்திரத்தின் பாதாளத்தில் எத்தனை தடவையோ நான் யாத்திரை செய்திருக்கிறேன். நீர் என்னுடைய தோழனுயிரும். இன்றை முதற்கொண்டு வேறொருமனிதன் பார்த்தறியாத அற்புதங்களைப்பார்ப்பீர். எனக்குத்தெரிந்த ஆச்சர்யங்கள் உமக்கும் புலப்படும்படியாய் செய்கிறேன்.

எனக்கு எந்த விஷயத்தில் ஆசை ஜாஸ்தியோ, அந்த விஷயத்தில் இந்தத்தலைவன் ஆசையைக் காட்டு

கிறான். சுவாதீனம் போனாலென்ன? அதற்குப்பதில் எத்தனை மடங்கோ எனக்கு இவனோடிருப்பதில் இலாபம் உண்டாகிறது. என்றாலும்,

நான்:—மனுஷ்யப் பூண்டைக்கண்டாலே உமக்குச் சத்ருத்வம் உண்டாகிறது. ஆனாலும் நீர் மனுஷ்யனல்லவா? கொஞ்சம் யோஜித்துப்பாரும். நாங்கள் திசை தப்பி வந்தவர்கள். உம்முடைய கப்பலில் எங்களைப்பிரீதியாய் நடத்தியிருக்கிறீர்; அதை நாங்கள் மறந்து விடவில்லை. என் விஷயத்தில் மாத்திரம் நீர் சொல்வதெல்லாம் சரி. சுவாதீனம் என்பதைவிட, உம்முடன் சேர்ந்திருப்பது அதிக சந்தோஷகரமாயிருக்கும் என்பதற்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை.

இதைசசொன்னவுடன், என்னை கட்டிக்கொண்டு அதிக சிநேகம் அவன் பாராட்டுவனென்று எண்ணினேன. அப்படி ஒன்றும் செய்யாமல் புறப்பட்டுப போவதற்காக எழுந்திருந்தான்.

நான்:—இன்னும் ஒரே ஒரு கேழ்வி கேட்க விரும்புகிறேன. உம்முடைய பெயரென்ன? என்ன பெயர் சொல்லி உம்மை நான் அழைக்கிறது?

தலைவன்:—"நீமோ கப்பல் தலைவன்" என்று நீர் அழையும்; "நாடிலஸ்" என்னும் என் கப்பலில் நீரும் உம்முடைய சிநேகிதர்களும் பிரயாணிகளென்று நான் பாவிப்பேன்.

நீமோ தலைவன் உக்கிராணக்காரனையழைத்து, ஒருவருக்கும் தெரியாத விநோதமான பாஷையில் அவ

னுடன் பேசி, கான்ஸெல், நெட்லண்ட் இருவரையும் நோக்கி: "உங்களுடைய அறையில் உங்களுக்குச் சாப்பாடு தயாராயிருக்கிறது. தயவாய் அந்த மனுஷ்யனோடு போங்கள்" என்றான்.

அவர்கள் இருவரும் அப்படியே செய்தார்கள்.

நீமோ தலைவன்:—ஆரநாக்ஸ், நம்முடைய போஜனமும் தயாராய் இருக்கிறது; என்னுடன் நீர் கூட வாரும்.

எழுந்திருந்து நான் அவனுடன் போனேன். கதவைத்தாண்டினவுடன், இலெக்ட்ரிக் வெளிச்சம் நிறைந்த ஒரு தாழ்வாரம் இருந்தது. அதன் வழியாய் கொஞ்சதூரம் போனவுடன், இன்னமொரு கதவு திறந்தது.

அதைத்தாண்டினவுடன் நாங்கள் *சாப்பிடும் அறைக்குள் போனோம். அதில் அழகாய் அமைத்திருந்த சாமான்களைப்பார்த்துக் கொண்டிருந்தாலே எனக்குப்போதும்; மேஜைமேல் வைத்திருந்த பாத்திரங்களின் விலை கணக்கிடமுடியாது.

இருவரும் சாப்பிட உட்கார்ந்தோம். தின்பண்டங்கள் இதுவரையிலும் நான் சாப்பிடாதவைகளாயிருந்தாலும், வாய்க்கு வெகு ருசியாய் இருந்தன. நீமோ என்னைப் பார்த்துக்கொண்டிருந்தான். நான் அவனை ஒன்றும் கேட்கவில்லை, ஆனால் என் எண்ணங்களை அவன் அறிந்துகொண்டு நான் கேட்கவேணுமென்று வெகு ஆவலாயிருந்த கேள்விகளுக்குத் தானாய் பதில் சொன்னான்.

நீமோ:—இந்தச் சாப்பாடுகளெல்லாம் இதுவரையில் நீர் சாப்பிட்டவைகளல்ல; அதற்காக பயப்பட வேண்டாம், சாப்பிடும். உடம்புக்கு வெகு புஷ்டிகொடுக்கும். அனேக வருஷங்களாகத் தரையில் உண்டாகும்சாமான்களை சாப்பிடுவதை ஒழித்துவிட்டேன்; அதனால் தேகத்தில் இளைப்பு இருக்கிறதா; புத்திமயங்கிப்போயிருக்கிறதா? என்னுடனிருப்பவர்களும் வெகுபலசாலிகள். நான்சாப்பிடுவதையே அவர்கள் சாப்பிடுகிறார்கள்.

நான்:—இதெல்லாம் சமுத்திரத்தில் உண்டாகிறதா?

நீமோ:—ஆம். எனக்கு வேண்டியதெல்லாம் சமுத்திரத்திலேயே உண்டாகிறது. கடலுக்குள் அடர்த்தியான காடுண்டு; அங்கே அடிக்கடி நான் வேட்டையாடி எனக்கு வேண்டியதை சேகரித்துக் கொள்ளுகிறேன். எனக்கு வேண்டிய ஆடுமாடுகள் பயமில்லாமல் கடலின் கீழுள்ள புல்லை மேய்கின்றன. தரையில் உழுது பயிரிடுவது போல் சமுத்திரத்துக்குள்ளும் நான் உழுது பயிரிடும் நிலம் உண்டு. எனக்கு சிரமமில்லாமலே தானியங்கள் பயிராகின்றன. மிகுந்தஆச்சரியத்துடன் நீமோவைப்பார்த்து, நான் பதில் சொன்னேன்;

நான்:—வெகுசிரேஷ்டமானமீன் உமதுவலையில் அகப்படும் என்பது எனக்குத்தெரிகிறது. கடலுக்குள் இருக்கும் காடுகளில் நீர்வேட்டையாடுவது எப்

படி யென்பது மாத்திரம் எனக்குத் தெரிய வில்லை. தவிர, நீர் மாம்ஸம் சாப்பிடுவது வெகு கொஞ்சமாயிருப்பதும் எனக்கு ஆச்சர்ய மாய் இருக்கிறது.

நீமோ:—தரையில் வஸிக்கும் ஜீவப்பிராணிகளுடைய மாம்ஸம் நான் சாப்பிடுகிறதேயில்லை. என்னு டைய பரிசாரகன் வெகு சூரன். அவன் வித் தையில் அவனுக்குச் சமானமேயில்லை. திமிங்கில த்தின் பாலைக்கறந்து அதிலிருந்து நல்லவெண் ணெ யெடுப்பான். ஜலத்துக்குள் வளரும் கரும் பிலிருந்து சர்க்கரை யுண்டாக்குவான். இப் போது நீர் சாப்பிடுகிற பழம் தரையில் கிடைக் கும் பழத்தைப்பார்க்கத் தாழ்ந்ததா?

பின்னும் கேளும். நான் உடுத்தும் வஸ்திரங்க ளும் இந்த சமுத்ரத்தில் உண்டாகும் சாமான்களால் செய்யப்பட்டன. மேஜைமேலிருக்கும் வாசனைத்திர வியங்களெல்லாம் கடலில் வளரும் செடிகளிலிருந்து செய்தவை. உம்முடைய படுக்கை ஜலத்துக்குள படரும் மெதுவான பாசியே; இங்கே கடிதாசி புஸ்தகங் கள் எழுதுகிற பேனு திமிங்கிலத்தின் சப்பட்டையி லுள்ள இறகு; எழுதும் மசி கட்டில் மீனிலிருந்து உண்டாகிறது.

நான்:—நீமோ, உமக்கு கடல்மேல் ஆசை அதிக மாய் இருக்கிறது.

நீமோ:—என் ஆசைக்கு நிஜமாய் அளவில்லைதான். இந்தப்பூமியில் பத்தில் ஏழுபாகம் கடலல்லவா? கடற்காற்று பரிசுத்தமாயும் தேகத்துக்கு

சௌக்யம் உண்டாக்குவதாயும் இருப்பதல்லவா ? கேவலம்மிருகங்களைப்போல் வஸிக்காமல், புத்திசாலித்தனமாய் காலக்ஷேபம் பண்ணி சாஸ்திரவிசாரம் செய்ய வேணுமானால், சமுத்திரத்துக்குள் குடியிருந்தால்தான் நல்லது. கடலுக்குள் தாதுவர்க்கம், தாபரவர்க்கம், ஜீவவர்க்கம் எல்லாம் ஏராளமாயுண்டு. சமுத்திரத்திலேயிருந்துதான் தரையுண்டானது; ஒருவேளை தரையெல்லாம் முன்போலவே கடலுக்குள் சங்கமமாகிவிடும். தனியாயிருந்து தியானம் பண்ணவேண்டுமானால், கடலே தகுந்த ஸ்தலம். கொடுங்கோல் மன்னர்களுக்கு ஏற்பட்ட இடம் அல்ல சமுத்திரம். கடலின் துஷ்டத்தனமெல்லாம் ஜலமட்டத்தின் மேலும் முப்பதடி கீழும்தான். கேழ்வி முறையில்லாமல்கப்பல்களைக்கவிழ்க்கிறதும், ஜனங்களை விழுங்குகிறதும் இவ்விதமான விஷமமெல்லாம் மேலே தான். முப்பதடிக்குக் கீழ் அதன் கொட்டம் அடங்கிப்போகிறது, சக்தி அழிந்து போகிறது, ஜெரப்பு மங்கிப்போகிறது. சமுத்திரத்துக்குள்வஸித்தாலல்லவா ஸ்வாதீனம்; மற்றஇடங்களிலெல்லாம் அதன் வாஸனைதான்; உள்ளே போனால் ஒருவித எஜமானனும் இல்லை; நானே ராஜா.

இப்படி மெய்ம்மறந்து, வெகு உற்சாகமாய்,சமுத்திரத்தின் பிரதாபத்தைப் பற்றி உபந்நியாஸம் பண்ணிக் கொண்டிருக்கும்போது திடீரென்று பேச்சை நிறுத்திக்கொண்டான்.

என்ன காரணம்? ஒருவருடனும் அதிகமாய்ப் பேசாதவன் “ பேசிவிட்டோமே” யென்று வருத்தப்

பட்டானு? அச்சிப்னிடத்தில் அதிக இரகஸ்யங்களைச் சொல்லிவிட்டானு? எதினுலேயோ, இடத்தை விட்டு எழுந்திருந்து முன்னும் பின்னும் நடந்தான். சற்றுநேர த்துக்குப்பின் சாந்தமாய், "ஆரநாக்ஸ், கப்பல் முழுவ தும பார்க்க மனதிருந்தால், அழைத்துக்கொண்டு போய்க்காட்ட சித்தமாயிருக்கிறேன்" என்று சொன் ஞன்.

---

## அத்தியாயம் 11.

### "நாடிலஸ் கப்பல்."

நீமோ நாற்காலியிலிருந் தெழுந்திருந்தான். நான் அவனேடு கூடப்போனேன். அந்த அறையின் கோடி யில் இருந்த இரட்டைக் கதவைத் தாண்டிக்கொண்டு, நாங்கள் பேசிக்கொண்டிருந்த அறையைப்போல அவ் வளவு பெரிதான இன்னமொரு அறைக்குள் பிரவேசித் தோம்.

புஸ்தகங்கள் வைத்திருக்குமிடம் (சாஸ்வதிமால்) பெரியது. அலமாரிகளெல்லாம் உயர்ந்தவையாயுங்கறுங் காலியினுல் செய்தனவாயுமிருந்தன. உள்ளெல்லாம் பித் தளைத்தகடு அடித்திருந்தது. புஸ்தகங்களுடைய அட் டையும்பித்தளையினுலேயேசெய்திருந்தது. அந்த மண் டபத்தின் ஒரு கோடியில் நல்ல ஸோபாக்கள் போட்டி ருந்தன. எழுதுவதற்கும்வாசிப்பதற்கும்சௌகர்யமாய் சாய்வு மேஜைகளிருந்தன. மத்தியிலிருந்த பெரிய மேஜையில் கணக்கில்லாத சிறுபுஸ்தகங்களும் புராதன சமாசாரப்பத்திரிகைகளும் குவிந்திருந்தன. நாலு உரு

ண்டை விளக்குகளிலிருந்து இலெக்ட்ரிக் வெளிச்சம் கும் பரவியது; வெகு விமரிசையாய் அமைந்திருந்த இந்த அறையைப்பார்த்து என் கண் பூரித்துப்போயிற்று.

நீமோ ஒரு ஸோபாவில் சாய்ந்து கொண்டான். நான் இன்னொரு ஸோபாவில் உட்கார்ந்துகொண்டு: "இத்தனை உயர்ந்த அபூர்வ புஸ்தகங்கள் ஒரு பெரிய அரசனுடைய அரண்மனையிலிருந்தால், அதற்குப் பெருமையாய் இருக்கும். சமுத்திரத்தின்கீழ் மனுஷ்யாளுக்குத் தெரியாத ஏதோ ஒரு கப்பலில் இவைகள் இருப்பது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது" என்றேன்.

நீமோ:—நிஜமாய் ஏகாந்தம் வேணுமானால், இதுதான் தகுந்தஸ்தலம். விநோத காக்ஷிசாலை(Museum ம்யூஸீயம்) யில் இவ்வித சாந்தமும் நிச்சப்தமும் கிடைக்குமா?

நான்:—ஒருக்காலும் கிடைக்காது. இதைய பார்த்துவிட்டு, அதைப்பார்த்தால், சந்திரனைப்பார்த்துப் பின் மினுமினுப்பூச்சியைப் பார்ப்பது போலாகும். இங்கே குறைந்தது ஆறாயிரம் ஏழாயிரம் கிரந்தங்கள் இருக்குமென்று நினைக்கிறேன்.

நீமோ:—பன்னிரண்டாயிரம். இந்தப் புஸ்தகங்களால் தான் தரைக்கும் எனக்கும் சம்பந்தம் உண்டாகிறது. இந்தப் புஸ்தகங்களை நீர் உபயோகியும்.

அலமாரிகளிடத்தில்போய் புஸ்தகங்களைப் பார்த்தேன். பிரகிருதி சாஸ்திர சம்பந்தமாயும், காவ்யங்களைப்பற்றியும், தர்மசாஸ்திரத்தைப்பற்றியும் அனேக

கிரந்தங்கள் நானு பாஷைகளிலும் இருந்தன. ஒரு விநோதமான விஷயமென்னவென்றால், புஸ்தகங்களைப் பாஷைக் கிரமமாக அடுக்கி யிருக்கவில்லை. அதனால் நீமோவுக்கு எல்லாபாஷையும் ஒன்றுதான் என்பது தெளிவாகிறது. அவன் கைக்கு எந்த பாஷையில் எழுதிய புஸ்தகம் அகப்பட்டாலும் அதை எடுத்து கிரமமில்லாமல் வாசிப்பான்.

தற்காலத்திலும், பூர்வகாலத்திலும் வெகு சிறந்த வித்வான்கள் எழுதிய அபூர்வ கிரந்தங்களெல்லாம் இந்த சாஸ்வதி மாலில் இருந்தன. இதென்ன ஆச்சரியம்! எந்த தேசத்திலும், எந்தபாஷையிலும் எழுதிய உத்க்ருஷ்டமான பாடல்களும், கதைகளும், சாஸ்திரங்களும், சரித்திரங்களும் இங்கே காணலாம். ராஜாங்க தர்மத்தைப்பற்றிய நூல்கள் மாத்திரம் இங்கேயில்லை. வானசாஸ்திரத்தைப்பற்றிய ஒரு புஸ்தகம் முதல் முதல் 1865-ம் வருஷத்தில்தான் பதிப்பிக்கப் பட்டது. அந்தப் புஸ்தகம் இங்கே யிருப்பதால், இந்தப் பாதாளசமுத்திர சாஸ்வதிமால் உண்டாகி, மூன்று வருஷம்தான் ஆகியிருக்கவேணும். இதைப் பார்க்கிலும் நூதனமான கிரந்தம் அங்கே யிருந்தால், எவ்வளவுகாலம் நீமோ தலைவன் சமுத்திரவாஸம் செய்துகொண்டிருந்திருக்கிறனென்பது நிர்ணயிக்கலாம்.

நான்:—இந்தப் புஸ்தகசாலையண்டை கொண்டுவந்து, இந்த அற்புதங்களைக் காட்டி, உபயோகிக்கிறதற்கும் எனக்கு அனுமதி கொடுத்தது உம்முடைய பெரிய மனசைக் காட்டுகிறது. இங்கே

பிரகிருதி சாஸ்திர விஷயங்கள் வெகுவாய் அறிந்துகொள்ளலாமென்று நம்புகிறேன்.

நாங்கள் நுழைந்த கதவுக்கு நேர் எதிரேயிருந்த இன்னமொரு கதவை நீமோ திறக்க அதன் வழியாய் வெகு பிரகாசமாய் வெளிச்சம் தெரிந்துகொண்டிருந்த ஒரு பெரிய மண்டபத்துக்குள் போனோம். அது முப்பதடி நீளமும், பதினெட்டடி அகலமும், பதினைந்தடி உயரமும் உள்ளது. இந்த இடத்தில் வெகு விநோதமான பொருள்கள் சேகரித்து வைத்திருந்தன. சுபாவத்தில் கிடைக்கும் சிலாக்கிய வஸ்துக்களும், மனுஷ்ய சாமர்த்தியத்தினால் இயங்கும் அற்புதப் பொருள்களும் ஏராளமாய் இங்கே சேர்ந்திருந்தன. சர்வ சிலாக்யமான சித்திரபடங்கள் முப்பதுக்குக் குறையாமல் சுவர்களில் மாட்டித் தொங்கிக்கொண்டிருந்தன. அவைகளை ஒவ்வொன்றாய்ப் பார்த்து ஆனந்தித்தேன். கண்குளிர நோக்கி மகிழ்ந்தேன். என் மனசுக்குண்டான சந்துஷ்டியை வாயால் சொல்லிமுடியாது.

நீமோ:—சாமான்கள் ஒரு ஏற்பாடும் இல்லாமல் கண்டது கண்டபடி போட்டு இருந்தும், உம்மை அழைத்துக் காட்டிய மௌட்யத்தனத்துக்காக க்ஷமிக்க வேணும்.

நான்:—உம்மைப்போல அபாரசக்தியுள்ள மனிதனை நான் பார்த்ததே யில்லை. சித்திரப்படங்களில் வெகு சிரேஷ்டமானவைகளெல்லாம் இங்கே யிருக்கின்றன. சங்கீதத்தில் வெகு நிபுணரானவர்களுடைய கிரந்தங்களெல்லாம் இங்கே குவிந்திருக்கின்றன.

யோகநித்திரையில் இருப்பவன்போல் ஒருமேஜை மேல் சாய்ந்துகொண்டு, நீமோ நின்றான். அவன் முகத்தைக் கவனித்து ஆச்சரியமடைந்தேன். வெகு மரியாதையாய் நான் அவனைக் கூப்பிட, இருவரும் அங்கேயிருந்த பாக்கிசாமான்களைப் பரிசோதித்தோம். அனேகவிதமான மீன்களும், கிளிஞ்சல்களும் நிறைந்திருந்தன. ஸ்வர்ணத்தை வாரிக் கொட்டினாலும் இவ்வித ஆச்சரியமான பொருள்கள் எங்கேயும் கிடைக்கா.

பின்னர், முத்துகள் கொட்டியிருக்கும் இடத்தை நீமோ காட்டினான். அவைகளுடைய அழகே அழகு. சிவந்த கடலில் சேகரித்த ரோஜா நிறமான முத்துகளும், மஞ்சள்முத்தும், ஊதாமுத்தும், கறுத்த முத்தும் அங்கே ஜ்வொலித்தன. சில முத்துகள் புறாவின் முட்டையைக்காட்டிலும் பெரியவையாயிருந்தன. டாவர்னியர் என்னும் பிராணி பாரசீக தேசத்தரசனுக்கு முப்பதுலக்ஷம் பவுனுக்கு விற்ற அந்த முத்தைப் பார்க்கிலும் பெரியவை இங்கே இருந்தன. மஸ்காத் நகரத்து அரசனிடத்திலிருக்கும் உலகத்திலேயே நிகரில்லாததென்று சொல்லும் முத்தைப்பார்க்கிலும் சிரேஷ்டமான முத்து இங்கே உண்டு.

நீமோ:—இந்தக் கிளிஞ்சல்களைப் பார்த்து நீர் களிக்கிறீரே. அவைகளெல்லாம் நானே என் கையாலேயே சேகரித்தேன். ஒரு சமுத்திரம் பாக்கியில்லாமல் எதையும் தேடி இவைகளைச் சேகரித்தேன்.

நான்:—இவ்வளவு ஐச்வரியத்துக்கு நடுவில் இருந்து

கொண்டிருப்பதிலுள்ள ஆனந்தம் எவ்வளவு என்று எனக்குத்தெரியும். ஐரோப்பா கண்டம் முழுவதிலும் இவ்வித விநோதகாட்சி நான் கண்டதில்லை. இதையெல்லாம் பார்த்து ஆச்சரியப் பட்டுக்கொண்டிருந்தால், உம்முடைய கப்பலைப்பார்த்து நான் என்ன செய்கிறது? உம்முடைய இரகஸ்யங்களை அறிய ஆசைப்பட வில்லை. ஆனாலும், இந்தக் கப்பலுடைய வேகமும், அதை நடத்தும் இயந்திரமும், அதற்கு உயிருண்டாகும் சக்தியும், இதெல்லாம் எனக்கு அற்புதமாயிருக்கிறது. சுவர்களில் அநேக ஆயுதங்கள் தொங்குகின்றனவே. அவைகள் இன்னவை, எதற்காக, என்று ஒன்றும் தெரியவில்லையே. இதைப் பற்றி ஏதாவது எனக்கு சொல்லலாமோ?

நீமோ:—இவைகளைப்பற்றி பிற்பாடு சொல்லுகிறேன். உமக்காக ஏற்படுத்தியிருக்கிற அறையைக்காட்டுகிறேன். அது சௌகர்யமாக இருக்குமா என்று பாரும். ஏதாவது குறைச்சலிருந்தால் தக்ஷணமே சரிப்படுத்துகிறேன்.

என்னை யழைத்துக்கொண்டு நீமோ கப்பலுடைய "இடைப்பண்டை" கொண்டுபோனான். எனக்காக அமைத்திருந்த அறையில் ஒரு கட்டிலும், உடுப்புகள் வைக்கும் பெட்டியும், மற்ற சாமான்களும் நிறைந்திருந்தன. எனக்கு வெகு சந்தோஷமாயிருந்தது.

நீமோ:—உம்முடைய அறைக்கு அடுத்தது என்னு

டைய அறை. இரண்டுக்கும் நடுவில் ஒரு கத விருக்கிறது.

இதற்கப்புறம் நீமோவுடைய அறைக்குள் போனேன். வெளிச்சம் மங்கலாய், தபசிகள் இருப்பிட மாதிரி இருந்தது. ஒரு இரும்புக் கட்டிலும், அவசிய மான சில சாமான்களும் அங்கே இருந்தன.

ஒரு நாற்காலியைக் காட்டி "உட்காரும்" என்று நீமோ உபசரித்தான். நான் உட்காரவே, அவன் பேச ஆரம்பித்தான்.

---

## அத்தியாயம் 12.

### " முழுவதும் மின்னல் சக்தியால் "

நீமோ:—சுவர்களில் அதோ தொங்குகிற *கருவிகள் இந்தக்கப்பலை நடத்துவதற்காகவேண்டியவை. நடுச்சமுத்திரத்திலும், நான் எங்கேஇருக்கிறே னென்பதும் எந்தத்திக்கில் போய்க்கொண்டி ருக்கிறேனென்பதும் இவைகளால் நான் அறி ந்து கொள்வேன். சாதாரணக் கப்பல்களிலுள்ள கருவிகளும் இதோ இருக்கின்றன; அவைக ளைப்பற்றி உமக்குச் சொல்லவேண்டியதில்லை. இவைகள் இரவிலும் பகலிலும் உபயோகிக்கக் கூடிய தூரதிர்ஷ்டிக் கண்ணாடிகள். நாடிலஸ் ஜலமட்டத்துக்கு வரும்போது இது உபயோ கப்படும்.

இது "மனுமீடர்:" இதை ஜலத்தில்வைத்தால்

எவ்வளவு ஆழத்தில் கப்பல் இருக்கிறதென்பதைக் கண்டு பிடிக்கலாம்.

இந்த "ஈயக்குண்டுகள்" ஜலத்துக்குள்ளிருக்கும் போது சீதோஷ்ண ஸ்திதி இப்படியென்று காட்டும்.

இது மின்னல்சக்தி. இது எனக்கு வெளிச்சம் கொடுக்கிறது; குளிர்காய வைக்கிறது; என் கப்பலுக்கு அது தான் பிராணன்.

நான்:—மின்னல் சக்தி இன்னதென்று எனக்குத் தெரியும். அதனுடைய ஒத்தாசையினுல் மாத்திரம் உம்முடைய கப்பல் இவ்வளவு வேகமாய்ப்போக முடியாதே.

நீமோ:—இங்கே இருக்கிற மின்னல்சக்தி சாதாரணமாய் உலகத்தில் உபயோகப்படுத்துகிற சக்தி போன்றதல்ல. இதற்குமேல் உமக்கு நான் சொல்லமுடியாது.

நான்:—உம்முடைய இரகஸ்யத்தைச் சொல்லவேணுமென்று நான் கேட்கிறது பிசகு; அப்படிக் கேட்கமாட்டேன். நீர் சொல்வது மேலும் மேலும் ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. ஒரு கேழ்விகேட்கிறேன்; மனசிருந்தால் அதற்குப் பதில் சொல்லும். துத்திநாகம் முதலான சாமான்கள் உபயோகிக்கிறீரே; அவைகள் தேய்ந்து போகிறதில்லையா? அவைகள் வேணுமென்றுல் என்ன செய்வீர்?

நீமோ:—உம்முடைய கேழ்விக்கு பதில் சொல்லுகிறேன். நான் முன்சொன்னபடியே, தரையில்

தாவரவர்க்கங்களின் "சுரங்கங்கள் இருப்பது போலவே சமுத்திரத்திலும் இருக்கின்றன. பொன், வெள்ளி, இரும்பு எல்லாம் கடலில் கிடைக்கும். என்னுடைய மின்னல் சக்தி முழுவதும் சமுத்திரத்திலிருந்தே கிரகிக்கிறேன்.

நான்:—சமுத்திரத்திலிருந்தா? என்ன ஆச்சரியம்! ஆச்சரியம்! இது கலியுகம்தான் தடையில்லை.

நீமோ:—கடல்நீரை ஆயிரபாகம் போட்டால், நூற்றுக்குத் தொண்ணூற்றாறரை ஜலம்; 21 பாகம் "ஸோடியம்" சம்பந்தமான பொருள்; இன்னும் மற்ற சாமான்களுமுண்டு.

"ஸோடியம் க்ளோரைட்" அதிகமாயிருப்பதால், ஜலத்திலிருந்து இந்த ஸோடியத்தைப் பிரித்து விடுகிறேன்.

நான்:—ஆ! ஆ! ஸோடியத்தையா?

நீமோ:—ஆம். கரியினுடைய உஷ்ணத்தால் அதைப் பிரித்துவிடுகிறேன். கரி சமுத்திரத்தில் கிடைக்குமா என்று நீர் யோசனை பண்ணுகிறது தெரிகிறது. கொஞ்சம் பொறுமையாயிரும். நான் கரி கிரகிப்பதைப் பாரும். இதை நன்றாய் ஞாபகம் வைத்துக்கொள்ளும்; எனக்கு வேண்டியதெல்லாம் சமுத்திரத்திலிருந்தே வருகிறது.

நான்:—நீர் உட்கொள்ளும் காற்றோ?

நீமோ:—வெகு எளிதாய் அதை உண்டாக்கிக்கொள்ளுவேன். ஏன் அந்த சிரமம்? வேணுமென்கிற

போது மேலே போவதால், சுவாசத்துக்கு வேண்டிய காற்று சுலபமாய்க் கிடைக்கிறது. தவிர, வேண்டிய காற்றை உள்ளே நிரப்பி வைத்துக்கொள்ள இந்த மின்னல் சக்தி உப யோகப்படுகிறது.

மணி நேரத்தைக் கொஞ்சமும் பிசகாமல் காட்டு கிற இந்தக்கடிகாரமும் மின்னலால் ஓடுகிறது. இட்டலி தேசத்துக் கடிகாரங்கள்போல் இருபத்து நாலுமணி நேரம் காட்டியிருக்கிறேன். எனக்கு இரவும் பகலும் எல்லாம் ஒன்றுதான். சந்திரனும் கிடையாது, சூர் யனும் கிடையாது. இப்போது காலை பத்து மணி.

நான்:—என் கடிகாரத்திலும் அப்படித்தான் இருக்கி றது.

நீமோ:—மின்னலை இன்னமொருவிதத்தில் உபயோகப் படுத்துகிறேன், பாரும். அதோ தொங்கிக் கொண்டிருக்கிற தட்டு, கப்பல் எவ்வளவு வேக மாய்ப்போகிற தென்பதைக் காட்டுகிறது. இப் போது மணி ஒன்றுக்குப் பதினைந்து மைல் போகிறோம்.

நான்:—வெகு ஆச்சர்யம். இனி காற்று, அலை, ஆவி ஒன்றின் ஒத்தாசையும் வேண்டாம்.
இந்த எணி எதற்காக?

நீமோ:—அதன் வழி ஏறிப்போனல் தோணியண்டை கொண்டுபோய்விடும். மீன் பிடிப்பதற்காக வும், விளையாட்டாய் ஜல மட்டத்துக்கு மேல் போய் வருவதற்காகவும் அதை உபயோகிக்கி

ரேும். ஒரு கதவைத் திறந்தால் வெளியே போகவேண்டியவர்கள் தோணிக்குள் போகலாம். ஒரு திருகு திருகினால் தோணி ஜல மட்டத்துக்குப் போய்விடும். அதற்கும் கப்பலுக்கும் ஒரு இலெக்ட்ரிக் கம்பி கோர்க்கப்பட்டிருக்கிறது. எப்போது அதில் போன பின் திரும்பிவிட வேணுமென்று நினைக்கிறேனோ உடனே அந்தக்கம்பியை நான் கப்பலிலிருந்து முடுக்கினால் திரும்பவேணுமென்று அதிலிருப்பவர்களுக்குத் தெரிந்து, அவர்கள் வந்துவிடுவார்கள். முன்போலவே திருகை வேறொரு மாதிரியாய்த் திருகினால் அது கீழே முன்னிருந்த இடத்திற்குப் போய்ச்சேரும். பின் கொக்கிகளையும் தாப்பாள்களையும் போட்டுத் தோணியைக் கெட்டியாய்க் கப்பலோடு பூணைத்துவிடுவோம்.

நான்:—நீமோ கப்பல் தலைவரே, உலகத்தில் ஒன்பது ஆச்சரியம் உண்டென்கிறார்களே. அந்த ஒன்பதையும் ஒன்றாய்ச் சேர்த்தால் இந்த உம்முடைய கப்பலின் ஆச்சரியத்துக்கு சமானமாகாது.

படிக்கட்டைத் தாண்டிக்கொண்டு ஒரு பெரிய கூடத்துக்கு வந்தோம். அங்கே யிருந்து கான்ஸெலும் நெட்லண்டும் அப்போதுதான் விருந்து சாப்பாடு சாப்பிட்டுவிட்டு வெளியே போனார்கள்.

அதையும் தாண்டி, சமையல் அறைக்குள் போ

ேனும். சமையல்முழுவதும் மின்னல் சக்தியினால்தான் அங்கே ஆகிறது. அடுத்த அறை ஸ்நாநம் பண்ணுமிடம்; இங்கே குளிர்ந்த ஜலமும் வெந்நீரும் எப்போதும் கிடைக்கும்; அதற்கடுத்த அறை கப்பல்வேலைக்காரர்கள் வஸிக்குமிடம்; கதவு சாத்தியிருந்ததால், உள்ளே போக முடியவில்லை; அதனால் எத்தனை வேலைக்காரர்கள் இருந்தார்கள் என்றறிய முடியாமற் போயிற்று. அதைத் தெரிந்துகொள்ள வெகு ஆவலாயிருந்தேன்.

நீமோ பெரிய "எஞ்சினீயர்" என்பதற்குச் சந்தேகமில்லை. "எஞ்சின்" அறை இரண்டு பாகமாயிருந்தது. ஒன்றில் மின்னல் சக்தி உண்டாகிக் கொண்டிருக்கும் ஏற்பாடுகள் இருந்தன; மற்றொன்றில் திருகை முடுக்கும் ஏற்பாடுகள் காணப் பட்டன. அதற்குள் போனவுடன் வெகு விநோதமான ஒரு வாசனை உண்டானது. இதை நான் கவனித்ததைக் கண்டு,

நீமோ:—"ஸோடியம்" உபயோகிப்பதில் தப்பி வெளியே வரும் ஆவியின் வாசனை; அது வெகு துர்கந்தமல்ல. ஆனாலும், ஒவ்வொருநாளும் கப்பலை சுத்தம் செய்து, புதுக்காற்று வரும்படி செய்து விடுகிறோம்.

இதற்குப்பின், எஞ்சினைக் கவனித்துப்பார்த்தேன். வேணுமானால், ஒரு மணிக்கு ஐம்பது மைல் நடத்தும் சக்தி அதற்குண்டு. இதில் எனக்குப் புரியாத சில இரகஸ்யங்கள் இருந்தன. அவைகளைப்பற்றி விசாரிக்கக் கொஞ்சம் சங்கோஜமா யிருந்தது.

கப்பல் முழுவதும் பார்த்து, ஆனந்தத்தில் அமிழ்ந்தவனாய்,

நான்:—இந்தக்கப்பலில் எதுவும்அற்புதமாயிருக்கிறது. 'லிங்கன்' கப்பலுக்கு முன் 'நாடிலஸ்' போவதைக் கவனித்திருக்கிறேன். அதன் வேகம் எவ்வளவென்று எனக்குத் தெரியும். வலது பக்கம், இடதுபக்கம் திரும்பவேணும்; மேலேயும் கீழேயும் போகவேணும். கீழேபோகும் போது ஜலத்தினுடைய பாரத்தைத் தாங்க சக்தி வேணும். வேணுமானால், பாதாளத்துக்கும் ஜல மட்டத்துக்கும் நடுவில் கப்பலை நிறுத்தசக்திவேணும். இதெல்லாம்எப்படி? இந்தக் கேழ்விகளெல்லாம் கேட்கலாமோ, என்னமோ? கேட்பது பிசகானால், க்ஷமிக்கவேணும்.

தலைவன்:—ஒருக்காலும் பிசகில்லை. இந்தக்கப்பலைவிட்டு நீர் வெளியே போகிறதாயிருந்தால் பிசகாகும். மண்டபத்துக்குப் போகலாம் வாரும். அது நாம் வசிக்குமிடம்; அங்கேபோய்,உமக்கிருக்கிற சந்தேகங்களை யெல்லாம் நிவர்த்தி செய்கிறேன்.

---

## அத்தியாயம் 13.

நான் கேட்ட கேழ்விகளுக்கெல்லாம் சிறு குழந்தைக்கும் புரியும்படியாய் நீமோ பதில் சொன்னார். லிங்கன் கப்பலிலிருந்து பார்த்தபோது காண்டாமிருகமென்று நினைத்திருந்த நாடிலஸ் உடைய பக்கங்களில்

தெரிந்த ஜோதி என்னவிதம் உண்டானதென்றும் அறிந்தேன்.

நான்:—நாடிலஸும் ஸ்கோஷியா கப்பலும் ஒன்றோடொன்று மோதினவே. அது தற்செயலாய் நடந்ததா?

நீமோ:—அப்படியே. அந்த சமயத்தில் நான் ஜலத்தில் இரண்டு கெஜம் கீழே போய்க்கொண்டிருந்தேன். ஸ்கோஷியாவுக்கு அதிக சேதம் உண்டாகாதபடி பார்த்துக் கொண்டேன்.

நான்:—உம்முடைய கப்பலும் லிங்கன் கப்பலும் மோதிக்கொண்டதெப்படி?

நீமோ:—'லிங்கன்' கப்பல் வெகு நேர்த்தியானது. நான் என்ன செய்யலாம்? எனக்கு வெகு வருத்தமாயிருந்தது அந்தக்கப்பல் என்னைத்தாக்கிற்று. நான் என்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டாமா? அதுதான் செய்தேன். அதற்குச் சேதம் உண்டாகவில்லை. அடுத்த துறைமுகத்தில் அதைப் பழுதுபார்த்துவிடலாம்.

நான்:—உம்முடைய கப்பல் வெகு அற்புதமான கப்பல். அதற்குச் சந்தேகமேயில்லை.

நீமோ:—ஆம், என்னுடைய குழந்தை மாதிரியே, எனக்கு அதன் மேல் ஆசை. என்னுடைய கப்பலுக்கு ஒருவித பயமுமில்லை. மற்றக் கப்பல்களுக்கு சமுத்திரத்தின் கீழே போவது முழு நாசம். இந்தக்கப்பலுக்குக்கீழே போவது சாதா

ரணமான காரியம். கடல் கொந்தளித்தால் நாங்கள் கீழே போய்விடுவோம். காற்று அடித்துக்கொண்டு போவதற்குப் பாய் மரம் இல்லை. ஜலம் கொதிக்கும் அண்டா அதிக உஷ்ணத்தினால் வெடித்துப்போவது இங்கேயில்லை; அக்னிபட்டு கப்பல் எரிந்துபோமோ என்கிற பயமில்லை. நிலக்கரி இல்லாமற் போமோ என்கிற கவலையில்லை. கப்பல்களோடு மோதி அழிவுறுமோ என்று நடுங்கவேண்டாம்; ஏனென்றால் உடனே கீழே போய்விடுவோம். புயல்கள் என்ன செய்யுமோ என்று சிந்திக்கவேண்டாம்; ஏனென்றால் ஜலத்துக்கு கீழே அந்த உபாதி கிடையாது.

இவ்வளவு உற்சாகமாய்ப் பேசும்போது, நீமோவுடைய கண்களின் பிரகாசமும், கையினுடைய ஆட்டமும், ஆச்சரியகரமாயிருந்தது.

நான்:—உமக்கு "எஞ்சினீயர்" வேலையும் தெரியுமோ?

நீமோ:—லண்டனிலும், பாரிஸிலும், நியூயார்க்கிலும் அந்த சாஸ்திரம் வாசித்தேன்.

நான்:—இரகஸ்யமாய் இவ்விதக் கப்பல் செய்ய உமக்கு எப்படி சரிப்பட்டது?

நீமோ:—கப்பல் முழுவதும் ஒரே யிடத்தில் செய்யப்படவில்லை. ஒவ்வொருபாகம் ஒவ்வொரு இடத்தில் செய்யப்பட்டது. லண்டனிலும், லிவர்ப்பூலிலும், கிளாஸ்கோவிலும், பாரிஸிலும், ப்ரச்சியாவிலும், ஸ்வீடனிலும், நியூயார்க்கிலும்

செய்யப்பட்டன. மாதிரி காட்டிக்கொடுத்தது நான்; சாமான்கள் அங்கங்கே செய்து எனக்கு வந்துசேர்ந்தன. என்னுடைய மேல் விலாசமும் ஒவ்வொருவருக்கு வேறு மாதிரியாய்க் கொடுத்தேன்.

நான்:—பாகங்களை எல்லாம் சேர்த்து ஒரு இடத்திலே தானே கோர்த்திருக்கவேணும்?

நீமோ:—நடுசமுத்திரத்தில் ஒரு தீவில் என்னுடைய வேலையெல்லாம் செய்தேன். அங்கேதான், என்னுடைய தொழிலாளிகளும் நானுமாய் வேலையை முடித்தோம். முடித்தவுடன், நாங்கள் வேலைசெய்தோமென்பதே ஒருவருக்கும் தெரியாமலிருக்கும்படியாய் அங்கே எல்லாவற்றையும் நெருப்பினால் கொளுத்திவிட்டோம். சக்தியிருந்தால் தீவையும்கூட அழித்திருப்பேன்.

நான்:—கப்பலுடைய விலை வெகு அதிகமாய் இருந்திருக்கவேணுமே?

நீமோ:—இரும்புக்கப்பல் ஒன்றுக்கு டன் ஒன்று 1155 பிராங்குகாசு ஆனால், நாடிலஸ் கப்பலின் ஒரு டன்னுக்கு 1500 பிராங்கு காசு விலை ஆகும். முழுக் கப்பலின்விலை 1,687,000பிராங்குகாசு, அதாவது ஐம்பது லக்ஷத்து அறுபதினாயிரம் ரூபாய். அறுபது லக்ஷரூபாய் சாமானுக்கும், ஒருகோடியே இருபது லக்ஷரூபாய் சித்திரங்

கள், புஸ்தகங்கள் வகையராவுக்கும் செலவானது. இது சுமார் விலை.

நான்:—இன்னும் ஒரே ஒரு கேள்வி.

நீமோ (சிரித்துக்கொண்டு):—என்ன ?

நான்:—நீர் வெகு பணக்காரரா ?

நீமோ:—அளவில்லாத ஐச்வரியம் இருக்கிறது. கொஞ்சமும் சிரமமில்லாமல் பிரெஞ்சு தேசத்து இராஜாங்கத்துக்குள்ள கடனையெல்லாம் தீர்த்துவிட முடியும்.

நான் இந்த அசாத்தியத்தை உற்றுப்பார்த்தேன். எதையும் நம்புகிறேனென்று இப்படி "உடான்ஸ்" விடுகிறானா, அல்லது அவன் சத்தியசந்தனா? பின்னால் தெரியும்.

---

## அத்தியாயம் 14.

### கறுப்பு நதி.

இந்தப் பூமியில் ஜலமிருக்கிற பாகம் எட்டுக்கோடி ஏகரா. அதிலுள்ள ஜலத்தின் அடக்கம் இருநூற்றிருபத்தைந்து கோடியே எண்பதுலக்ஷம் க்யூபிக் மைல்கள்; அதாவது இந்த உலகத்திலுள்ள நதிகளெல்லாம் நாற்பது வருஷம் சமுத்திரத்தில் போய்விழுந்தால் எவ்வளவு ஜலம் சேருமோ அவ்வளவு.

வெகு மன்வந்தரங்களுக்கு முன்னால், ஜலம் உண்டாய், அதற்குப்பின் அக்கினிஉண்டானபோது,கொஞ்சம் கொஞ்சமாய் மலைகளின் சிகரங்கள் தோன்றின;

தீவுகளும் உண்டாயின; பிரளய சமயங்களில் மறைந்து போயின; திரும்பவும் தோன்றின; வரவர, அவைகள் ஒன்றாய்ச் சேர்ந்து கண்டங்களாயின. கடைசியாய், பூமி இப்போது இருப்பதுபோல் ஆயிற்று. இவ்விதம் தரைக்கு ஜலத்திலிருந்து புதிதாய்க் கிடைத்த ஸ்தலம் மூன்றுகோடியே எழுபது லக்ஷம் சதுரமைல்.

ஜலபாகத்தை ஐந்து சமுத்திரங்களாக பிரிப்பது சுலபமாயிருக்கிறது.

'பஸிபிக்' சமுத்திரமென்பது ஆசியாவுக்கும் அமெரிக்காவுக்கும் மத்தியிலிருக்கிறது. அதைப்போல் கொந்தளிப்பில்லாத சமுத்திரம் வேறொன்றும் இல்லை. அது அகன்று மெதுவாய் ஓடுகிறது; அலைகள் அதிகமில்லை; அங்கே பேயும் மழை அதிகம். இந்த சமுத்திரத்தில்தான் நான் இப்போது யாத்திரை செய்ய வேண்டியதாயிருந்தது.

நீமோ:—இப்போது நாமிருக்கும் இடம் இன்னதென்பதை சரியாய் அறியலாம். இப்போது மத்தியானம் பன்னிரண்டுமணி ஆகிறதற்குப் பதினைந்து நிமிஷம் இருக்கிறது. ஜலமட்டத்துக்கு இப்போது போவோம்.

இப்படி சொல்லிக்கொண்டு ஒரு இலெக்ட்ரிக் பொத்தானை மூன்றுதரம் அழுத்தினான். 'மனோமீடர்' உடைய முள்ளைப்பார்த்தால் நாங்கள் மேலே போய்க் கொண்டிருந்தோம் என்று தெரியவந்தது.

ஜலமட்டத்துக்கு வந்து விட்டோம். சமுத்திரம் வெகு அழகாயிருந்தது; மேகமே யில்லாமல் ஆகாயம்

மலகு தெளிவாயிருந்தது. கிழக்கே யிருந்து காற்று மெதுவாய் உலாவிவந்தது. எந்தப்பக்கம் சுற்றிப் பார்த்தாலும், ஒருதீவுமில்லை, மலையுமில்லை. "லிங்கன்" கப்பல் எங்கேபோனதோ பகவானுக்குத்தான் தெரியும்.

திடீரென்று நீமோ: நாம் கீழேபோகலாம், தயாராய் இரும்.

சமுத்திரத்தை ஆசையாய் இன்னமொரு தடவை பார்த்துவிட்டு கப்பலுக்குள் நான் போனேன். இப்போது ஜப்பான் கடற்கரையோரத்திலிருந்து முந்நூறு மைல் தூரத்திலிருந்தோம். இன்றைக்கு நவம்பர் மாஸம் எட்டாம்தேதி. மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு சமுத்திரத்துக்குள் சஞ்சாரம் செய்யப்போகிறோம்.

நீமோ என்னை வெகு உபசாரத்துடன் விட்டுவிட்டு தன்னறைக்குப்போனான். இந்த அபூர்வமான மனுஷ்யன் எத்தேசத்தான்? உலகம் முழுவதையும் வெறுக்கும் படியாய் இவனுக்குக்கெடுதல் செய்தவர்கள்யார்? என்னைக் கப்பலில் வெகுஉபசாரமாய் நடத்தியும், குளிர்ந்த முகத்துடன் இன்னும் என்னைப் பார்க்கவில்லை.

தரையில் எப்படி ஓடுகிற நதிகளுண்டோ, அதே விதம் கடலிலும் நதிகளுண்டு. அவைகளைச்சீதோஷ்ண ஸ்திதியாலும் நிறத்தாலும் கண்டுபிடிக்கலாம். சாஸ்திரம் அறிந்தவர்கள் சமுத்திரத்தில் ஐந்து நதிகள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். வட அட்லாண்டிக் சமுத்திரத்தில் ஒன்றும், தென் அட்லாண்டிக், வட பஸிபிக், தென் பஸிபிக், தென் இந்தியா சமுத்திரம் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருநதி யிருப்பதாகவும் சொல்லுகிறார்

கள். வட இந்தியா சமுத்திரத்திலும் முன் காலத்தில் ஒரு நதி இருந்திருக்கலாம்.

"கறுநதி" என்பது பெங்காளக் குடாக்கடலை விட்டு, வெயிலால்கொதித்து, மலாக்கா ஜலசந்தி வழியாய்ப்போய், ஆசியாகடற்கரை யோரமாய் ஓடி, அலூஷன் தீவுகளுக்குச் சமீபத்தில் வடபஸிபிக் சமுத்திரத்தில் விழுகிறது. போனவழிக்கு அடையாளமாக அந்த நதி பஸிபிக்கில் விழும்போது பெரிய கற்பூரமரங்களையும் கொண்டு சேர்க்கிறது. இந்த ஆற்றின்வழியாய்த்தான் "நாட்டிலஸ்" கப்பல் இப்போது யாத்திரைசெய்யப்போகிறது.படத்தில் இதைநான் கவனித்துக்கொண்டிருந்தபோது நெட்லண்டும் கான்ஸெலும் அறையின் கதவண்டை வந்து நின்றார்கள். அவர்கள் கப்பலின் ஆச்சரியத்தைக் கண்டு பிரமித்துப்போனார்கள்.

நெட்லண்ட்:—நாம் இப்போது எங்கே இருக்கிறோம்? குபெக் நகரத்தின் விநோத காக்ஷி கட்டடத்திலா?

கான்ஸெல்:—இது பாரிஸ் ஹோடலோ?

அவர்கள் இரண்டுபேரையும் நான் உள்ளே அழைத்து "நீங்கள் கனடாவிலும் இல்லை, பாரிஸிலுமில்லை; நாடிலஸ் கப்பலில் சமுத்ர மட்டத்துக்கு ஐம்பது கெஜம் கீழே இருக்கிறீர்கள்." என்றேன்.

கான்ஸெல்:—நீர் சொன்னால் நம்பவேண்டியதுதான். ஆனாலும், என்ன சாப்பாடு, என்ன விருந்து! எத்தனைவிதத் தீனி! என்ன மதுரமான கனி! வாசனையான அத்தர்கள், ருசியான மது, பரி

மளமுள்ள சுருட்டு, அழகான சாமான்கள்! சோடச உபசாரம்! திகட்டுகிறது, திகட்டு கிறது! திகட்டுகிறது!

நான்:—ஆச்சரியப்படுவதைக் கொஞ்சம் நிறுத்திவிட்டு இந்த விநோதங்களைப் பார். அவைகளுடைய அழகை அறிய உனக்கு சாமர்த்தியமுண்டு.

கான்ஸெல் என்னுடன் அதிக காலம் இருந்த பழக்கத்தினால் சாஸ்திரத்தைக் கூடமாயறிந்து இந்த கிளிஞ்சல்களைப் பார்த்து மகிழ்ந்தான்.

சாஸ்திரக்ஞான மில்லாத நெட்லண்ட் நீமோ தலைவனுடன் நான் பேசிக்கொண்டிருந்த விஷயத்தைப் பற்றி விசாரித்தான்.

நான்:—இவர்யார்? எந்த தேசத்தார்? எங்கே போகிறார்? எவ்வளவுஆழக்துக்கு நம்மை இழுத்துக் கொண்டு போவார்?

நான் எனக்குத் தெரிந்ததெல்லாம் சொன்னேன்; எனக்குத் தெரியாததுஏதுவானாலும் அவனறிந்தானோ வென்று விசாரித்தேன்.

நெட்:—ஒன்றும் தெரியாது; ஒருவரையும் பார்க்க வில்லை; அவர்கள் மின்னல் சக்தியினால் உண்டானவர்களோ? இந்தக் கப்பலில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள், பத்தா, இருபதா, ஐம்பதா, நூறு?

நான்:—நெட், உனக்கு எப்படிப் பதில் சொல்வதென் பது எனக்குத் தெரியவில்லை. நான் சொல்லு

கிற புத்தியைக்கேள்; இந்தக் கப்பலை சொந்தமாக்கிக்கொண்டு தப்பி ஓடிப்போகலாம் என்பதை விட்டுவிடு. இந்தக் கப்பலையொத்த ஆச்சரியம் நான் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. பேசாமலிருந்து நடக்கிறதையெல்லாம் கவனித்து சந்தோஷப்படு.

நேட்:—பார்க்கிறதற்கு இங்கே யென்ன இருக்கிறது? இந்த இரும்பு சிறைச்சாலையில் என்ன விநோதமிருக்கிறது? குருட்டாட்டமாய் எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறோம். அதுதான் எனக்குத்தெரிகிறது.

நெட் இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது திடீரென்று விளக்கெல்லாம் அணைந்துபோய்விட்டது. கொஞ்சநாழி பேசாமலும் அசையாமலும் இருந்தோம். சலசலவென்னும் சப்தம்கேட்டது, பக்கத்தில் இருக்கும் பலகைகள் அசைவதாகவும் தோன்றின.

நேட்:—உலகம் முடியப்போகிறது சந்தேகமேயில்லை, ஸ்வாமி.

முன்போல வெளிச்சம் உண்டாய், எங்களுக்கும் சமுத்திரத்துக்கும் நடுவில் கண்ணாடித்தகடுகள் மாத்திரம் இருப்பதாய்த் தெரிந்தது; அதைக்கண்டு நான் பயந்தேன். இந்தத் தகடுகள் பலமல்லவே, அவைகள் விட்டுப்போனால் என்னகதியாகும் என்று நடுங்கினேன். ஒரு மைல் தூரத்துக்கு சமுத்திரம் தெளிவாய்த் தெரிந்தது, காட்சியாவது காட்சி! அதைக்கண்ணுற இந்திரனுடைய ஆயிரங்கண்களும் இருந்தாலும்

போதா. யாரால் அதைப்பார்த்து விஸ்தரித்தெழுத முடியும்?

ஆண்டிலிஸ் தீவுகளின்சமீபத்தில் கடலில் நூற்று நாற்பத்தைந்து கெஜத்துக்குக் கீழிருக்கும் மணல் தெளிவாய்த் தெரியும். சூரியனுடைய கிரணங்கள் முந்நூறு கெஜ ஆழம் வரையில் ஊடுருவிச்செல்லு மாம். நாடிலஸ் கப்பல்போகும் வழியில் கடலின் அடி யிலே ஒரு இலெக்ட்ரிக் வெளிச்சம் உண்டாகி, அதில் வஸிக்கும் மீன்களும் நானாவித புல்பூண்டுகளும் பாசி களும் தெரிய ஆரம்பித்தன. நாங்கள் இருக்குமிடத் தில் வெளிச்சமில்லாததால் இவைகள் இன்னும் பரிஷ் காரமாய்த் தெரிந்தன. சென்னபட்டணத்தில் ப்ரெஸி டென்ஸி காலேஜ் என்னும் உயர்ந்த பாடசாலைக்கு எதிராய் மீன்கள் கண்ணாடி அலமாரிகளில் வைத்து கண்காக்ஷி காட்டுகிறார்களே, அதை லக்ஷம் மடங்காய்ப் பெருக்கிப்பார்த்தால் இதனழகு சுமாராய்த் தெரியும். கப்பல் வெகு வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தும், அசைவதாகவே எங்களுக்குத் தெரியவில்லை.

கான்ஸேல்: இங்கே பார்ப்பதற்கு ஒன்றுமில்லை. இரும்பு சிறைச்சாலை தவிர வேறொன்றுமிங் கேயில்லை என்று சொன்னாயே. இதாவது உனக்கு சந்தோஷமாயிருக்கிறதா?

நேட்:—வெகு விநோதமாய் இருக்கிறது. இந்தக் காக்ஷியைக் காண எவ்வளவு தூரத்திலிருந்து வரக்கூடாது

நான்:—இந்த அற்புதமான மனிதன்—இந்தக் கப்பல்

தலைவன்—வேணுமென்றால், ஒரு க்ஷணத்தில் உலகத்தில் எங்கும் பார்ப்பதற்கு அரிதான காக்ஷிகளைக் காண்பிக்கிறான். இவன் சொந்தமாய் ஒரு உலகத்தை சிர்ஷ்டித்துவிடுகிறான்.

ஜலத்தில் காணப்படும் மீன்களைப்பற்றி நெட்டும் கான்ஸெலும் தங்களுடைய க்ஞானத்தை ஒருவருக்கொருவர் காட்டிக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

கான்ஸெல்:—நெட் சினேகிதா, நீ மீனைக்கொல்லுகிறவன், வெகு சாமர்த்தியமான செம்படவன். கணக்கில்லாமல் ஏராளமாய் மீன்களைப் பிடித்திருக்கிறாய். ஆனால் அவைகளை ஜாதிஜாதியாகப் பிரிக்கிற வித்தை உனக்குத் தெரியாது.

நெட்:—அப்படியா ! எனக்குத் தெரியாமல் யாருக்குத்தான் தெரியும்? சாப்பிடக் கூடியமீன்கள், சாப்பிடத்தகாத மீன்கள்—

கான்ஸெல் உடனே, காலேஜில் மீன் சாஸ்திரம் கற்றுக்கொடுக்கும் சிறந்த வித்வான்மாதிரி மீனைப்பற்றி ஒரு உபந்நியாஸம் ஆரம்பித்தான். அதுவும், அழகான உபந்நியாஸம்தான். நெட்டும் சந்தோஷப்பட்டான்.

கான்ஸெல்:—இவ்வளவு தெரிந்தும், நமக்கு ஒன்றும் தெரியாது. "கல்வி கரையில, கற்பவர் நாள் சில."

நெட் கண்ணாடித் தட்டுமேல் சாய்ந்துகொண்டு: ஆ! ஆ! என்னவேடிக்கை, என்னவிநோதம்! தங்களுடைய அழகை நமக்குக் காட்டுவது போல

ஒன்றின் பின் ஒன்றாய் மீன்கள் செல்வதைப் பார். எத்தனை தினுஸு, எத்தனை ஜாதி, எத்தனை வர்ணம்!

கான்ஸெல்.—ஆம், அக்வேரியம் (மீன் காக்ஷி ஸ்தலம்) போலிருக்கிறதே.

நான்:—நீ சொல்வது சரியல்ல. அக்வேரியத்தில் மீன்கள் அடைபட்டிருக்கின்றன. இங்கே மீன்கள் ஸ்வய இச்சையாய்த் திரிந்து கொண்டிருக்கின்றன.

நெட்:—கான்ஸெல், பார்க்கப் பார்க்க விநோதமாயிருக்கிறது. மீன்கள் ஒன்றின் பின் ஒன்றாய்ப் போகின்றன; அவைகளுடைய பெயரை எனக்குச் சொல்.

கான்ஸெல்:—எனக்கு அவ்வளவு சாமர்த்தியமில்லை. என்னுடைய எஜமானனைக் கேள். ஆயிரம் ஜாதியானாலும், யோஜிக்காமல், மளமளவென்று, அவைகள் குலம், கோத்திரம், ஊர், பந்துக்கள், பழக்கம், வழக்கம் எல்லாம் சொல்லிவிடுவார்.

இரண்டு மணி நேரம் ஒரு ஏராளமான மீன் ஸைன்யம் நாடிலஸைச் சுற்றி போய்க் கொண்டிருந்தது. நாழியாகியும், நாழியாகியும், ஆச்சரியம் குறையவில்லை. அடிக்கடி சந்தோஷம் மிகுந்து கூச்சலும் போட்டோம். மீனுடைய பெயரை நெட் சொல்வான்; அதனுடைய ஜாதியை கான்ஸெல் சொல்வன்; அவைகளுடைய அழகையும் உல்லாசமான சுறுசுறுப்பையும் பார்த்து நான் மகிழ்வேன். ஆகாயத்தில் உள்ள

பக்ஷிகளைப்பார்க்கிலும் இந்த மீன்கள் ஏராளமானவை. அவைகளில் சிலவற்றைக் கூட்டில் அடைத்துப்பார்த்திருக்கிறேன்; ஆனால் அவைகளுடைய சொந்த ராஜ்யத்தில், அடக்குவார் ஆளுவார் இல்லாமல் கடல் ஜலத்தில் சிரித்துவிளையாடிக்கொண்டு உயிரோடிருப்பதைப் பார்த்ததேயில்லை. ஜப்பான்கடல், சீனக்கடல் இவைகளில் கொட்டி நிறைத்துக் கிடக்கும் மீன் ஜாதிகளைப் பார்த்து பிரமித்து நின்றேன். அவைகள் துள்ளிக்குதிப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தாலே பசி தோன்றாது. ஒரு மீன் ஆறுஅடி நீளமுள்ளதாய், பாம்பின் உருவத்தோடு இருந்தது. அதன் சிறு கண்களும், பெருத்த வாயும், வாய்நிறையப் பற்களும்—என்ன அழகு! என்ன அழகு!! எங்கேயோ தூங்கிக்கொண்டிருந்த மீன்களெல்லாம் இலெக்ட்ரிக் வெளிச்சத்தைக் கண்டு பூரித்து ஓடிவந்து விளையாடுகின்றன.

திடீரென்று அறையில் வெளிச்சம்உண்டாயிற்று; ஜன்னல்கள் சாத்திக்கொண்டன; இந்திர சபையும் மறைந்து போய்விட்டது. ஜல மட்டத்துக்கு ஐம்பது கெஜத்துக்குக் கீழே நாங்கள் இருப்பதாய் 'மனோமீடர்' தெரிவித்தது. மணி ஒன்றுக்குப் பதினைந்து மைல் போய்க் கொண்டிருப்பதாய் இலெக்ட்ரிக் தகடு காட்டியது.

நீமோ தலைவனுக்காகக் காத்துக்கொண்டிருந்தேன். அவன் வரவில்லை. மணி ஐந்து.

நெட்டும் கான்ஸெலும் தங்கள் அறைக்குப்போனார்கள்; நான் என் அறைக்குப் போனேன். சாப்பாடு

தயாராயிருந்தது. எவ்வளவு ருசி! நள பாகமாயிருந்தது! சமையல் செய்வதில் பேர்போன பிரெஞ்சுக்காரர்களில் சிரேஷ்டமான தொழிலாளியும் இவ்விதம் சமைப்பதரிது.

சாயங்காலம் முழுவதும், கொஞ்சம்வாசித்தேன், எழுதினேன், விசாரம் செய்தேன். தூக்கமும் வந்தது, புல் மெத்தையில் படுத்து அயர்ந்து நித்திரை போனேன். அதிவேகமாய் ஓடிக்கொண்டிருந்த கறுப்பு நதியைத் தாண்டி நாடிலஸ் கப்பல், ஜெய வீரனைப் குதூகலத்தோடு போய்க்கொண்டிருந்தது.

---

## அத்தியாயம் 15.

மற்று நாள் காலையில் எழுந்திருந்தபோது, பன்னிரண்டு மணிநேரம் நான் தூங்கியிருந்ததாகத் தெரிந்தது. கான்ஸெலும் எழுந்திருந்து வந்து ஏதாவது வேலையுண்டாவென்று கேட்டான். தூக்கமென்பதை முன்பின் அறியாதவன்போல் நெட் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான்.

கான்ஸெல் எதோ அலப்பிக்கொண்டேயிருந்தான்; ஒன்றுக்கும் நான் பதில் சொல்லவில்லை. நீமோ தலைவன் ஏன் வரவில்லையென்று யோஜித்துக்கொண்டிருந்தேன். சீக்கிரத்தில் நீமோ எனக்குக்கொடுத்த உடுப்புகளில் ஒன்றைஎடுத்து உடுத்திக்கொண்டு நீமோவைக் காணலாமென்று மண்டபத்துக்குப் போனேன். அங்கே ஒருவரும் இல்லை.

அங்கே இருந்த சங்குகளையும், கிளிஞ்சல்களையும் உலர்த்திவைத்திருந்த அபூர்வமான கடற்செடிகளையும், பூண்டுகளையும் பார்த்து ஆனந்தித்தேன். நாள் முழுவதும் நீமோ வரவில்லை. கப்பல் வடகிழக்கே மணிக்குப் பதினறுமைல் வேகமாகப் போய்க்கொண்டிருந்தது.

அடுத்த நாள், நவம்பர் பத்தாம் தேதி, அதே மாதிரிதான். காப்டென் நீமோ என்னிடத்தில் வரவில்லை. நாள் முழுவதும் தனியாயிருப்பது கொஞ்சம் அலுப்பாயிருந்தது. கப்பல் வேலைக்காரர்களும் என் கண்ணில் தென்படவில்லை. நெட்டும் கான்ஸெலும் நாள் முழுவதும் என் பக்கத்திலிருந்தார்கள். காப்டென் வராததைப்பற்றி அவர்களும் ஆச்சரியப்பட்டார்கள். அவருக்கு உடம்பு அசௌக்யமா? அல்லது, அவருக்கும் எங்களுக்கும் ஏற்பட்டிருந்த உறவு மாறிப்போய் விட்டதா?

எது எப்படியிருந்தாலும், எங்களுடைய சாப்பாட்டில் ஒரு வித குறைச்சலில்லை. சுயஇச்சையாய் எங்கேயும் போகலாம், எதையும் செய்யலாம். ஆகையால் நாங்கள் முறையிடுவதற்குக் காரணமில்லை. அன்றைக்கே ஒவ்வொரு நாளும் எனக்கு நேரிடும் சம்பவங்களைக் கடல்செடியிலிருந்து உண்டாக்கின கடுதாசியில் எழுதிவைக்க ஆரம்பித்தேன். அதனால்தான், பிசகொன்றுமில்லாமல், நடந்ததையெல்லாம் இந்தப்புஸ்தகத்தில் விவரமாய் எழுத முடிகிறது.

நவம்பர் மாஸம் பதினோராம்தேதி விடியற்காலத்தில் புதியகாற்று வீசவே, மேலே கிளம்பி ஜலமட்டத்

துக்கு வந்துவிட்டோமென்று தெரிந்தது. ஏணியில் ஏறி, மேல்தட்டிலுள்ள தாழ்வாரத்துக்குப்போனேன். அப்போது ஆறுமணி. ஆகாயத்தைக் கொஞ்சம் மேகம் மறைத்துக் கொண்டிருந்தது. கடலில் கொந்தளிப் பில்லை; அலையென்பதே எங்கேயும் காணும். வெகு இனிமையாயிருந்த காற்றை உட்கொண்டு உட்கார்ந் திருந்தேன். இப்போதாவது காப்டென் நீமோ வருவானா?

வர வர மஞ்சு குறைந்தது. சூரிய னுதித்து மேகங்களின் ஓரங்களெல்லாம் ஜரிகை போட்டது போல் பிரகாசித்து, கொஞ்சநேரத்துக்குள் வானவில்லி னுடைய வர்ணங்களெல்லாம் தெரிய ஆரம்பித்தன.

சூரியோதயம் வெகு அழகாயிருந்தது. அதை உற்றுப்பார்த்து சந்தோஷித்துக் கொண்டிருந்தேன். அப்படியிருக்கையில் யாரோ மேலே ஏறி வருகிற சப் தம் கேட்டது. காப்டென் நீமோ வரவில்லை; வந்தது அவனுக்கு அடுத்த உத்தியோகஸ்தன். அவன் என்னைக் கவனிக்காமல், தூரதிர்ஷ்டிக் கண்ணாடியை வைத்துக் கொண்டு, நாலு பக்கமும் சுற்றிப்பார்த்தான். பார்த்து விட்டு, மந்திரம் சொல்லுவது போல் நாலு வார்த் தைகளை உச்சரித்தான்.

"நாட்ரன் ரெஸிபாக் லார்னி வர்ச்." இதன் அர்த் தம் என்னவென்று எனக்குத்தெரியாது. ஆனால் ஒவ் வொரு நாளும் காலையில் இதேமாதிரி அந்த மனுஷ் யன் வந்து பார்த்துவிட்டு இப்படிப் பிதற்றிப்போவது வழக்கம்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன், கப்பல் யாத்திரைசெய்யப்போகிறதென்றெண்ணி, நான் திரும்ப என்னறைக்குள் போனேன்.

இந்த மாதிரி ஐந்து நாள் கழிந்தது. ஒவ்வொரு நாளும் காலையில் இதே விதம் மேல் தாழ்வாரத்துக்குப் போய் புதிய காற்றை உட்கொள்வேன். ஒவ்வொரு நாளும் அதே உத்தியோகஸ்தன் வந்து அதே வாக்கியத்தைச்சொல்லிப்போவான். காப்டென் நீமோவைமாத்திரம் கண்ணில் காணவில்லை. இனி எங்கே பார்க்கப் போகிறேனென்றும், கொஞ்சம் அதைரியப்பட்டேன்.

நவம்பர் பதினாறும் தேதி, கான்ஸெலேயும் நெட்டையும் அழைத்துக் கொண்டு, நான் என்னுடைய அறைக்குள் பிரவேசிக்கையில், என் பெயருக்கு ஒரு கடிதாசி மேஜைமேல் வைத்திருந்தது. சுறுக்காய் அதைத் திறந்து பார்த்தேன். ஒவ்வொரு எழுத்தும் தெளிவாய் நன்றாய் எழுதியிருந்தது. அந்த எழுத்து ஜர்மன் மோஸ்தராயிருந்தது.

"நாட்டிலஸ் கப்பலிலிருக்கிற

ம-ா-ா-ஸ்ரீ ஆரநாக்ஸ் அவர்களுக்கு:

1867, நவம்பர் 16

க்ரெஸ்போ தீவில் உள்ள காடுகளில், நாளைக் காலையில், காப்டென் நீமோவான நான் வேட்டையாடப்போகிறேன். தாங்களும் தயவு செய்து கூட வந்தால் சந்தோஷமாயிருக்கும். தங்களோடு இருப்பவர்களும் கூடவந்தால் அதிக திருப்தியாயிருக்கும்."

நெட்:—வேட்டையா?

கான்ஸேல்:—க்ரெஸ்போ காடாம்! தீவாம்! வேடிக்கைதான்!!

நெட்:—அப்போது இவர் தரைக்குப்போய்த்தானே ஆகவேணும்.

கடுதாசியை இன்னமொருதடவை வாசித்து விட்டு,

நான்:—அது தெளிவாய்த் தானிருக்கிறது.

நெட்:—வருகிறோமென்று சொல்லி எழுதுங்கள். தரையில் கொண்டுபோய் நம்மை விட்டுவிட்டால், பிறகு இன்னது செய்வதென்பது நமக்குத் தெரியும்; தவிர, புது மாம்ஸம் சாப்பிடவும் ஆசையாயிருக்கிறது.

உடனே வருகிறதாய் ஒப்புக்கொண்டு பதில் எழுதியனுப்பினேன்.

நான்:—இந்த க்ரெஸ்போ தீவு எங்கே யிருக்கிறதென்று பார்க்கலாம்.

படத்தில் தேடிப்பார்க்க, 1801ம் வருஷத்தில் காப்டென் க்ரெஸ்போவால் கண்டுபிடிக்கப்பட்ட தீவு என்று கண்டேன். பழைய ஸ்பேன்தேசத்தார் படத்தில் "வெள்ளி மலை" என்று அதற்குப் பெயர். ஆக, நாங்கள் புறப்பட்ட இடத்திலிருந்து 1800 மைல் வந்திருக்கிறோம்.

பஸிபிக் சமுத்திரத்தின் நடுவில் உள்ள சிறு கற்பாறையை என்னுடைய சிநேகிதர்களுக்குப் படத்தில் காட்டினேன்.

நான்:—காப்டன் நீமோ தரையில் இறங்கத் தீர்மானித்

தால், மனுஷ்ய சஞ்சாரமில்லாத தீவுகளில் வெகு சிறியதாயிருக்கும் தீவில் இறங்கப்போகிறன்.

நெட்லண்ட் பேசாமல் தலையை அசைத்தான். உடனே என்னை விட்டுவிட்டு அவர்களிரண்டுபேரும் போய்விட்டார்கள். பேசுவதென்பதேயில்லாத உக்கிராணக்காரன் சாப்பாடு கொண்டுவந்து போட, அதைச்சாப்பிட்டுவிட்டு நான் படுத்துக் கொண்டேன்.

மறுநாள் காலையில், "நாடிலஸ்" அசைவற்றிருந்தது. சீக்கிரம் உடுப்பு உடுத்திக் கொண்டு நான் மண்டபத்துக்குப் போனேன். அங்கே காப்டென் நீமோ இருந்தார்; எனக்காகக் காத்துக் கொண்டிருந்தார். நான் போனவுடன் எழுந்திருந்து "என்னேடு கூடவர சௌகர்யப்படுமோ" என்று என்னைக்கேட்க, நானும் என்னுடைய ஆள்களும் புறப்படத்தயாராயிருக்கிறேமென்று சொன்னேன்.

நான்:—ஒரு கேள்வி கேட்கட்டுமா?

நீமோ:—கேட்பதில் தடையே இல்லை; பதில் சொல்ல முடிந்தால் மாத்திரம் பதில் சொல்லுவேன்.

நான்:—தரையென்பதின் முகத்தில் விழிக்கிறதில்லையென்று பிரதிக்கினை பண்ணிவிட்டு, இப்போது அங்கேபோய் வேட்டையாடப் போகிறீரே, அதெப்படி?

நீமோ:—நான் வேட்டையாடுகிற காட்டுக்கு சூர்யனுடைய வெளிச்சமும் வேண்டாம், உஷ்ண

மும் வேண்டாம். அங்கே புலி, ஸிம்மம், காடி கிடையாது. அந்தக்காடு எனக்கு மாத்திரம் தெரியும். அதை எனக்காக மாத்திரம் பகவான் சிர்ஷ்டித்திருக்கிறார். அது தரையிலில்லை, சமுத்திரத்தின் கீழேயிருக்கிறது.

நான்:—சமுத்திரத்தின் கீழேயா?

நீமோ:—ஆம்.

நான்:—அங்கே போகிறதற்காகவா என்னை அழைக்கிறீர்?

நீமோ:—அப்படியே.

நான்:—நடந்தா?

நீமோ:—ஆம், ஜலம் படாமலே.

நான்:—சுடுகிறதா?

நீமோ:—ஆம், சுடுகிறது.

நான்:—கையில் துப்பாக்கி வைத்துக் கொண்டா?

நீமோ:—கையில் துப்பாக்கி வைத்துக் கொண்டு.

இவனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது, சந்தேகமில்லை. இந்த எட்டுநாளைக்குள் பித்துபிடித்து, இன்னும் தெளியவில்லை. ஐயோ, பாவம்! இவனுக்கு பைத்தியம் பிடிக்கக்கூடாது.

இந்த மாதிரி நான் நினைத்து வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். அந்த எண்ணங்களை என் முகத்தை கவனித்துப்பார்த்தால் எவனும் தெரிந்து கொள்ளலாம். இந்த சமயத்தில் காப்டென் நீமோ தன்னுடன் வரவேணுமென அதிக உபசாரமில்லாமல்

அழைத்தான். என்ன வந்தாலும் வரட்டும் என்று மனதை தைரியப்படுத்திக்கொண்டு நானும் கூடப் போனேன்.

இருவரும் சாப்பாட்டு அறைக்குப் போனோம்; அங்கே சாப்பாடு தயாராயிருந்தது.

நீமோ:—ஆரனாக்ஸ், சங்கோஜமில்லாமல் சாப்பிடும்; சாப்பிடும்போது பேசலாம்; காட்டில்வேட்டை யாடப் போகலாமே யொழிய அங்கே நமக்கு சாப்பாடு கிடையாது. வெகு நாழி கழித்துத் தான் திரும்பிவருவோம். ஆகையால், நன்றாய்ச் சாப்பிடும்.

சாப்பாடு வெகு சிலாக்கியமாயிருந்தது. அதை யும் சம்பூர்ணமாய் சாப்பிட்டேன். ஆரம்பத்தில் நீமோ பேசாமலே சாப்பிட்டுக் கொண்டிருந்தார். கொஞ்ச நாழிக்கப்புறம்,

நீமோ:—க்ரெஸ்போ காட்டில் வேட்டைக்குப் போக லாமென்று நான் சொன்னபோது முன் பின் சரியாய் நான் பேசவில்லையென்று உமக் குத்தோன்றினது. இந்தக் காடுகள் கடலின் கீழே இருக்கின்றன வென்று நான்சொன்ன போது, என்னைப் பைத்தியக்கார னென்றெண் ணினீர். இவ்வளவு அவசரமாய் மனுஷ்யாளை நிதானிப்பது தர்மமா?

நான்:—ஆனால், காப்டென்—

நீமோ:—அதிருக்கட்டும்; நான் சொல்வதைக் கேளும்.

நான்:—அவசியம் கேழ்க்கிறேன்.

நீமோ:—சாதாரணவாயுவை வேண்டிய அளவில் ஒரு வன் தன்னுடன் கொண்டுபோகக் கூடுமானல் அவன் ஜலத்துக்குள் இருக்கலாம் என்பது உமக்குத் தெரிந்த விஷயம். சமுத்திரத்தின் கீழ் வேலைசெய்யும்போதெல்லாம், ஜலம் உள்ளே புகாத உடுப்பு உடுத்திக்கொள்வது வழக்கம். தலைமுழுவதும் மறையும்படியாய் உலோகத்தால் செய்த தலைச்சீரா அணிந்து கொள்வதும் உமக்குத்தெரியும். பம்புகள் வைத்துக்கொண்டு தனக்கு வேண்டிய வாயுவை வரவழைத்துக் கொள்வதும் உமக்குத் தெரிந்ததுதான்.

நான்:—முத்து ஸலாபத்தில் முழுகுகிறவர்கள் போட்டுக்கொள்ளும் சொக்காய் போல அல்லவா?

நீமோ:—அதன் மாதிரிதான். ஆனல் அந்த மாதிரி நாடிலஸ் கப்பலோடு நம்மைக் கட்டிக்கொண்டால் நாம் வெகுதூரம் போக முடியாது.

நான்:—சரி. நீர் சொல்லுகிறது புரிகிறது. கப்பலுடன் சம்பந்தம் வேண்டாமென்கிறீர். சம்பந்தமில்லாமல் என்னமாயிருக்க முடியுமென்பது எனக்குத் தெரியவில்லை.

நீமோ:—உம்முடைய தேசத்தார் இருவர்கண்டுபிடித்த இயந்திரம் ஒன்றுண்டு. அதை நான் பூர்த்தி செய்திருக்கிறேன்; ஒருவித அசௌகர்யமுமில்லாமல் நீரும் அதை உபயோகிக்கலாம்.

உடனே யந்திரத்தின் பாகங்களைக் காப்டென் விவரித்துச் சொன்னர்.

நான்:—காப்டென் நீமோ, பேஷ். ஆனால், கொண்டு போகிற வாயுவு சீக்கிரத்தில் செலவழிந்து போய்விடுமே. அப்போது என்னமாய் மூச்சு விடுகிறது ?

நீமோ:—வாயுவை நெருக்கிக்கொண்டு போகலாம். அப்போது அதிக வாயுவை சிறு இடத்தில் அடைக்கலாம். நாம் சுலபமாய் கொண்டுபோகக்கூடிய வாயு சுமார் பத்து மணி நேரத்துக்குத் தாங்கும்.

நான்:—எல்லாம் நன்றாய்ப் புரிகிறது. எனக்கு ஆக்ஷேபணையேயில்லை. கடலின் அடியில் வெளிச்சம் என்னமாய் நமக்குக் கிடைக்கும்? அதைத் தெரியும்படியாய்ச் சொல்லும்.

காப்டென் நீமோ ரூம்கார் இயந்திரத்தைப் பற்றி விவரமாய்ச் சொல்லி, கடலுக்குள் மூச்சு விடுவதற்கும், பார்ப்பதற்கும் அது எவ்விதம் உபயோகமாகுமென்பதைத் தெளிவாய்ச் சொன்னான்.

நான்:—காப்டென் நீமோ, நான் கேட்ட கேள்விக்கெல்லாம் திர்ப்திகரமாய்ப் பதில் சொல்லுகிறீர். அப்படியிருக்க, எனக்குச் சந்தேகம் எவ்வித முண்டாகும் ? இந்த இயந்திரங்களை உபயோகிக்க ஒப்புக்கொண்டாலும், அந்த துப்பாக்கியைக் கொண்டுபோக நான் சம்மதிக்க மாட்டேன்.

நீமோ:—அது சாதாரண துப்பாக்கியல்ல. அதில் மருந்து உபயோகிக்கிறதில்லை.

நான்:—அப்படியானல், அது காற்றுத்துப்பாக்கியோ?

நீமோ:—அதுதான். சாமான்களில்லாமல் எவ்விதம் துப்பாக்கி மருந்து நான் செய்யமுடியும்?

நான்:—தவிர, வாயுவைப்பார்க்கிலும் 855 தடவை அடர்த்தியான இடத்தில் சுடுவ தெப்படி? அது வெகு அசாத்தியம் ஆச்சே?

நீமோ:—அது அவ்வளவு கஷ்டமல்ல. அப்பேர்ப்பட்ட பீரங்கிகள் சில இருக்கின்றன. புல்டனுடைய யோசனையை அனுசரித்து, கோல்ஸ் என்றும் பர்லி என்றும் பெயருடைய இரண்டு இங்கிலீஷ்காரர்கள் பீரங்கிகள் உண்டாக்கினார்கள்; பிரெஞ்சுக்காரனை பார்ஸி என்பவன் அதைச் சரிப்படுத்தினன்; இட்டாலியனை லாடி என்பவன் அதைப் பூர்த்தி செய்தான். ஆகையால் இந்த விஷயத்தில் ஒரு சிரமுமில்லை. துப்பாக்கிமருந்து இல்லாததனால், அதிக பாரத்தால் அழுத்தி அமுக்கிய வாயுவை உபயோகப்படுத்தவேண்டியதாயிருக்கிறது. இது நாடிலஸ் கப்பலின் பம்புகளால் ஏராளமாய் உண்டாக்க முடிகிறது. சீக்கிரத்தில் வாயு செலவழிந்து போனல், ஒரு க்ஷணத்தில் வேண்டியது உண்டாக்கலாம். ஒரு தட்டு தட்டினல் போதும். சீக்கிரத்தில் நீரே அறிந்து கொள்ளக் கூடியது ஒன்றுண்டு. அதிகமாய் வாயுவையாவது சிறு குண்டுகளையாவது செலவழிக்க வேண்டிய அவசியமிருக்காது.

நான்:—எனக்கு ஒன்று தோன்றுகிறது. பாதி இருட்டாய் இருந்துகொண்டு, சாதாரண வாயுவைக் காட்டிலும் அதிக அடர்த்தியாயிருக்கிற இடத்தில் குண்டுகள் வெகுதூரம் போகமாட்டா; போனாலும், மரணம் உண்டாக்கமுடியாது.

நீமோ:—வாஸ்தவம் நீர் சொல்வதற்கு நேர் விரோதம். இந்தத் துப்பாக்கியால் சுட்டால் மரணம் நிச்சயம். மிருகத்தை எவ்வளவு மெதுவாய் அடித்தாலும் அதற்குப் பிராணன் போய்விடுகிறது.

நான்:—ஏன்?

நீமோ:—சாதாரண குண்டுகளை நான் உபயோகிக்கிறதில்லை. ஆஸ்த்ரேலியா சாஸ்தரிகளுள் ஸீனிப்ராக் உண்டாக்கிய கண்ணாடி குண்டுகள் ஏராளமாய் வைத்திருக்கிறேன். இவைகளுக்குமேல் தகடு எஃகு; அது ஈயம் அடைத்து கனமாக்கியிருக்கிறது; கொஞ்சபாரம் அதில் பட்டாலும், அது வெடித்து, எவ்வளவு பலமான ஜீவ பிராணியையும் கொன்றுவிடுகிறது.

உடனே எழுந்திருந்து, நான்:—கேட்கிறதற்கு இனி கேழ்வியில்லை. துப்பாக்கியை எடுத்துக்கொள்ளுகிறேன், நீர் எங்கே போனாலும், நானும் வருகிறேன்.

போகிற வழியில் நெட்டையும் கான்ஸெலையும் கூட அழைத்துக்கொண்டு, நான் எஞ்சின் அறைக்கு அடுத்த அறைக்குள் போனேன். அங்கேதான் நாங்கள் பிரயாணத்துக்கு வேண்டியபடி முஸ்தீப் செய்து கொள்ளவேண்டியது.

# அத்தியாயம் 16

## கடலின் அடியில் உலாவுதல்.

அந்தச் சிறிய அறையில் பிரயாணத்துக்கு வேண்டிய உடுப்புகளும் இயந்திரங்களும் எல்லாம் இருந்தன. ஜலத்தில் முழுகுவதற்குத் தகுந்த உடுப்புகள் பத்துப் பன்னிரண்டு அங்கே தொங்கிக் கொண்டிருந்தன.

நெட்லண்ட் அந்த உடுப்பை உடுத்திக்கொள்ள மாட்டேனென்றான்.

நான்:—நெட், க்ரெஸ்போ காடு சமுத்திரத்தின் கீழே இருக்கிறது.

நெட்:—இதென்ன ஆச்சரியம்! நீரும் இந்த உடுப்புகளில் ஒன்றை உடுத்திக்கொள்ளப்போகிறீரா?

நான்:—அப்படி செய்யத்தான் வேணும்.

நெட்:—நீர் உம்முடைய மனசின்படிசெய்யும். என்னை பலவந்தப் படுத்தினாலொழிய அந்த உடுப்பை உபயோகிக்க மாட்டேன்.

நீமோ:—உன்னை ஒருவரும் இங்கே கட்டாயப்படுத்த மாட்டார்கள்.

நெட்:—கான்ஸெலும் பிராணனை விடத் தயாராயிருக்கிறானா?

கான்ஸேல்:—எஜமான் எங்கே போகிறாரோ, அங்கே போக நான் சித்தமாயிருக்கிறேன்.

காப்டென் நீமோ எதோ ஜாடை காட்ட, உடனே இரண்டு பேர் வந்து அந்த உடுப்புகளை உடுத்தி விட்டார்கள்.

காப்டென் நீமோ, அதிக பலசாலியான அவனுடைய ஆள்களிலொருவன், கான்ஸெல், நான்—ஆக நால்வரும் தயாரானோர். தலைச்சீராவைப் போட்டுக் கொள்ள வேண்டியது தான் பாக்கி. அதற்கு முன்னால் துப்பாக்கிகளைப் பார்க்கவேணுமென்று நீமோவை உத்தரவு கேட்டேன்.

ஒரு துப்பாக்கியை எடுத்து நன்றாய்க் கவனித்துப் பார்த்தேன். நீமோவுடைய சாமர்த்தியமே சாமர்த்தியம். அது எவ்வளவு சாமர்த்தாய் செய்யப் பட்டிருந்தது.

நான்:—காப்டென் நீமோ, இது சிலாக்கியமான துப்பாக்கி; வெகு சுலபமாய் உபயோகிக்கலாம்; என் சமர்த்தை அதில் காட்ட ஆசையாயிருக்கிறது. கடலுக்குள் நாம் என்னமாய்ப் போய்ச் சேருகிறது?

நீமோ:—இந்த க்ஷணத்தில் கப்பல் தரையண்டையிருக்கிறது. நாம் தூரப் போக வேண்டாம்.

நான்:—நாம் என்னமாய் வெளியில் போகிறது?

நீமோ:—கொஞ்சம் பொறுத்துக் கொள்ளும்.

காப்டென் நீமோ தலைச்சீராவை போட்டுக் கொண்டான். கான்ஸெலும் நானும் அப்படியே செய்துகொண்டோம். இடுப்பில் விளக்கும், கையில் துப்பாக்கியும் தரித்துக்கொண்டு, புறப்படத் தயாரா யிருந்தேன். கால்சோடும் கனம்; உடுப்புகளும் கனம்; ஆகவே ஒரு அடி எடுத்துவைப்பது சிரமமாயிருந்தது; இதெல்லாம் காப்டெனுக்கு முன்னாலேயே தெரியும்.

அதெற்கெல்லாம் உயர்த்தியான ஏற்பாடுகள் செய்திருந்தார்.

திடீரென்று ஒரு வில்கதவு திறந்தது; தக்ஷணமே எங்கும் இருட்டாய்ப் போய்விட்டது. சில நிமிஷத்துக்குள் பாம்பின் சீறல்மாதிரி ஒரு சப்தம் கேட்டது. உடனே எனக்குத் தலைமுதல் கால் வரையில் நடுக்கம் உண்டாயிற்று. இன்னமொரு நிமிஷத்தில் சமுத்திரத்தின் அடியில் நாங்கள் நின்றோம்.

காப்டென் நீமோ முன்னே நடந்துபோனார்; அடுத்தது அவருடைய ஆள்; அதுக்கடுத்தது நானும் கான்ஸெலும். உடுப்பும் ஜோடும் கொஞ்சமும் கனமாயில்லை; சீராவுக்குள் தலை அசைவதும் சிரமமில்லாமலிருந்தது. வெகு சுலபமாய் நான் நடக்கக்கூடியதாயிருந்தது. நூறு கெஜம் தூரத்திலுள்ள வஸ்துக்கள் வெகு தெளிவாய்த் தெரிந்தன. தரைமேலிருந்தால் எவ்விதம் நாலுபக்கமும் பார்க்கலாமோ, அவ்விதமே இங்கேயும் இருந்தது.

எப்படித் தரையில் நின்றுகொண்டு ஆகாயத்தைப் பார்க்கிறோமோ, அதேமாதிரி கீழே இருந்துகொண்டு ஜலத்தின் மேல்பாகத்தைப் பார்க்கலாம். ஆகாயத்தில் பறக்கிற பக்ஷிகளைத் தரையிலிருந்து காணுவது எவ்வளவு சுலபமோ, அதேவிதம்தானிருந்தது ஜலத்தின் கீழும்.

கால் மணி நேரம் மணலின்மேல் நடந்தோம். கிளிஞ்சல்கள் தூளாய் மணலைப்போலிருந்தன. "நாடிலஸ்" கப்பல் ஒரு சிறு மலைமாதிரி இருந்தது. வரவர அது மங்கித் தெரியாமல் போய்விட்டது. வெளிச்சம்

மாத்திரம் பிரகாசமாயிருந்தது. சாயங்காலம் திரும்பி வருவதற்கு வெகு ஒத்தாசையாயிருந்தது.

நாங்கள் நேராய்ப் போய்க் கொண்டேயிருந்தோம். மணல் நிறைந்த சமபூமிக்கு எல்லையில்லையென்றே தோன்றியது. தூரத்தில் கற்பாறைகள் வெகு அழகாயிருந்தன. இப்போது மணி பத்து. சூர்யகிரணங்கள் ஜலத்தின்மேல் சாய்ந்து விழ, அந்த வெளிச்சம் கடலுக்குள் இருந்த பூக்கள், செடிகள், கிளிஞ்சல்கள் மேல் நானுவர்ணமாய்ப் பரவ, அந்தக் காக்ஷியைக்காண பதினாயிரங்கண்ணிருந்தாலும் போதாதென்றே தோன்றியது.

இதைப்பற்றியெல்லாம் கான்ஸெலிடத்தில் பேசவேணுமென்றாசைப்பட்டேன். அது முடியவில்லை. காப்டெனும் அவருடைய ஆளும் ஜாடையில் பேசிக்கொண்டார்கள்.

எனக்கு எவ்வளவு ஆனந்தமிருந்ததோ அவ்வளவு கான்ஸெலுக்குமிருந்தது. காலால் நான் மிதித்துக்கொண்டுபோன செடிகள் வெகு அபூர்வமானவை. அவ்வித செடிகளை சேகரிப்பதற்காகவே ஒரு கண்டத்திலிருந்து இன்னமொரு கண்டத்துக்குப் பிரயாணம் போகத்தகும். அவைகளைக் காலால் மிதிப்பதில் எனக்கு எவ்வளவு துயரம் உண்டாய்க்கொண்டிருந்ததென்பதை நான் சொல்லவேண்டியதில்லை. சில சமயங்களில் சூர்யகிரணங்கள் உள்ளே பிரவேசித்து தகித்தன; அப்போது அங்கே வளர்ந்திருந்த பெரிய செடிகளின் நிழலில் நின்று இளைப்பாறினோம்.

கால் மைல் தூரத்துக்குள்ளாக இவ்வளவு விநோதங்களைப்பார்த்தோம். காப்டென் நீமோ ஜாடை செய்தழைக்க, நாங்கள் அவர் பின்னே போனோம்; போகப் போகத் தரையும் மாறியது. மணற்பாங்கு போய் கொஞ்சதூரம் களிமண் தரையாயிருந்தது. அதைத் தாண்டினவுடன் மெதுவான புல்வளர்ந்த தரை காணப்பட, அதன்மேல் நடப்பது வெகு ஸௌகமாயிருந்தது.

புல் ஜாதியைச்சேர்ந்த இந்தச் செடிகள் வெகு சிறியவையாயும் இருந்தன; அதிக பிரமாண்டமாயுமிருந்தன. ஏழெட்டு சதுர அங்குல இடத்துக்குள் ஆயிரக் கணக்காயிருந்த செடிகளையும் பார்க்கலாம்; ஒரே செடி ஆயிரமடி நீளம் வளர்ந்திருப்பதையும் காணலாம்.

இறங்கி வந்து ஒன்றரைமணி ஆயிற்று. அனேகமாய் மத்தியானமாய்விட்டது; சூர்யகிரணங்கள் நேராய் விழவே, முன்கண்ட பற்பல நிறங்கள் எல்லாம் இப்பொழுது காணமுடியாது. காலடி சப்தமும் எங்களுக்குக் காதில் கேட்டது. இவ்வளவு தெளிவாய் தரையில் சப்தம் கேட்காது.

தரை செங்குத்தாய் கீழே இறங்கினது. நூறு கெஜ தூரம் கீழே வந்தும், எங்களுக்குக் கொஞ்சமும் சிரமம் தெரியவில்லை. விரல்களில் மாத்திரம் ஏதோ வலி உண்டானது; அதுவும் சீக்கிரத்தில் போய்விட்டது. இவ்வளவுக்கெல்லாம் களைப்பென்பதேயில்லை.

காப்டென் நீமோ சற்று நின்றார். நான் அவரோடு கூடப்போய்ச் சேருகிறவரையில் அங்கேயே காத்

துக்கொண்டிருந்தார். நான் அவரண்டை போனவுடன், தூரத்தில் அடர்ந்த நிழல் நிறைந்து இருக்கும் காக்ஷியைக்காட்டினார். அதுதான் க்ரெஸ்போ காடென்று எண்ணினேன்; அது பிசகல்ல.

---

## அத்தியாயம் 17

### கடலுக்குள் ஆரண்யம்.

இந்தக் காட்டின் எல்லேயண்டைபோய்ச் சேர்ந்தோம். தடையில்லாமல் காப்டென் நீமோவுடைய இராஜ்யத்தில் இது வெகு ரமணீயமான ஸ்தலம். தானே வளர்த்ததுபோல் அவன் அதைக்கண்டு மகிழ்ந்தான். அதை சம்பாதிப்பதற்காக, அவனுடன் யார் யுத்தம் பண்ணுவார்கள்? இந்த இருண்ட செடிகளையெல்லாம் கையில் அறுவாள் வைத்துக்கொண்டு வெட்டி சிங்கரிப்பவன் வேறுயார்?

தரையில் வளர்ந்த புல்லாவது மரங்களிலுள்ள கிளேகளாவது வளேவாகவேயில்லே; எல்லாம் செங்குத்தாய் உயரமாய் வளர்ந்தன. நாணல் புல் கூட, எவ்வளவு மெலிதாயினும், இரும்புத்தடிபோல், தலே நிமிர்ந்து நின்றது. நேர் நேர், எல்லாம் இங்கே நேராயிருந்தது.

தரையில் கூர்மையான கற்கள் நிறையவிருந்தன. இது இருக்கட்டும். ஸ்வப்பனத்திலும் காணுத செடிகளும் புஷ்பங்களும் இங்கே அபரிமிதமாயிருந்தன; புஷ்பங்களின் நிறங்களேப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும். வர்ணத்துக்குள் வர்ணம்—எத்தனே வர்

ணங்கள் எவ்வளவு விசித்திரமாய் கலந்திருந்தன! ஆச்சர்யம்! ஆச்சர்யம்! ஒருமணிநேரம் ஆகவே, போகாமல் நின்று விடும்படியாய் காப்டென் நீமோ ஜாடை காட்டினார். இது எனக்குத்திருப்தி தான், கொஞ்சம் இளைப்பாறுதல் அவசியமாய் இருந்தது. எனக்கு முக்கியமாய் வேண்டியது சம்பாஷணை; ஆனால் இப்போது இங்கே பேசுவது சாத்தியமல்ல. கான்ஸெல் கிட்டப் போய்ப்பார்த்தேன். அவன் அளவற்ற ஆனந்தத்தில் அமிழ்ந்தவனைப் கோமாளி போல் கூத்தாட ஆரம்பித்தான்.

நாலு மணி ஆகியும், எனக்குப்பசியே இல்லை; என எனக்குப் பசிக்க இல்லை என்று எனக்குத் தெரியவில்லை. ஜலத்துக்குள் முழுகுகிறவர்களுக்கெல்லாம் தூக்கக் கலக்கமாயிருக்குமென்பார்கள். எனக்கும் அப்படியேதான் இருந்தது. ஒரு க்ஷணத்தில் நான் அயர்ந்து தூங்கியே போய் விட்டேன். இதற்கு முன்னேயே நீமோவும் அவருடைய ஆளும் ஜலத்தில் காலை விரித்துக்கொண்டு சயனித்து விட்டார்கள்.

எத்தனை நாழி தூங்கினேனென்று எனக்குத் தெரியாது; விழித்துக்கொண்டபோது, சூர்யாஸ்தமனம் ஆகிக்கொண்டிருந்தது போலிருந்தது. காப்டென் நீமோ எழுந்து விட்டார், நானும் சோம்பல் முறித்துக் கொண்டு எழுந்திருக்கிற சமயம். அப்போது நாலுகெஜ தூரத்தில் வெகு பெரிதான ஒரு கடல்சிலந்திப்பூச்சி என்னை உற்றுப் பார்த்தது. மூன்றடி உயரமாய் அது என்னைத் தாக்கப்புறப்பட்டது. அது கடித்தாலும் என்

உடுப்பு என்னைத்தாங்கிக் கொள்ளும்; என்றாலும் அது பயமாய்த் தானிருந்தது. கான்செலுடைய காப்டெனும் ஆளும் எழுந்திருந்தார்கள். காப்டென் அதைக்கண்டு ஆளுக்கு ஜாடைகாட்டவே, அவன் திருப்பித் திருப்பி துப்பாக்கிக் கட்டையால் அடிக்க, அது எமலோகபட்ட ணம் போய்விட்டது. ஆயினும், இறந்து போவதற்கு முன்னே, அது மாணவஸ்தையில் துடிப்பது பயங்க ரமாயிருந்தது.

இதுவரையில் கொஞ்சமும் பயமில்லாமல் இருந் தேன். இனி அப்படியல்ல. மூன்றுமணியாகவே இரண்டு செங்குத்தான சுவருக்கு மத்தியில் ஒரு பள் ளத்தாக்கில் இருந்தோம். அதன் ஆழம் சுமார் நூற் றைம்பது கெஜம் இருக்கும். சூர்யவெளிச்சம் இல்லை; அதனால்தான் ஆழம் இவ்வளவு இருக்குமென்று கண்டு பிடித்தேன்.

இருட்டு ஜாஸ்தியாயிருந்தது. கையால் தடவிக் கொண்டு மெள்ளப்போனேன். இப்படியிருக்கையில் திடீரென்று வெளிச்சம் தெரிந்தது. இது காப்டென் செய்தகாரியம் உடனே எல்லாரும் எங்களிடத்திலி ருந்த இயந்திரத்தில் ஒரு திருகைத்திருக, வேண்டிய வெளிச்சம் உண்டாகிவிட்டது. இருபத்தைந்து கெஜ தூரத்துக்கு அதிக வெளிச்சம் இருந்தது.

காப்டென் கொஞ்சமும் தாமஸிக்காமல் மேலும் மேலும் போனான். பூண்டுகளும் செடிகளும் இங்கே கொஞ்சமும் இல்லை. வெளிச்சத்தைக் கண்டு அந்தக் காட்டிலுள்ள மிருகங்கள் வெளியே புறப்படுமென்

றெண்ணினேன். அப்படி யெண்ணியதும் பிசகல்ல; அனேகந்தடவை சாப்டென் நின்று கொண்டு சுடுவ தற்காகத் துப்பாக்கியை எடுத்தான்.

கடைசியில், நாலுமணியில் பிரயாணம் முடிந்தது. எங்களுக்கு முன் வெகு உயரமான ஒரு மலை தோன் றியது. அதைத்தாண்டிப் போவது அசாத்தியம். எவ்விதமாவது அதைத்தாண்டிப் போகவேணுமென்று நான் ஆவலாயிருந்தும் நீமோ நின்று விடும்படி உத்தர விட்டான். அதைத் தாண்டிப் போவதில் அவனுக்குச் சம்மதமில்லை. கப்பலுக்குத் திரும்ப ஆரம்பித்துவிட் டோம். ஆனால் வந்த வழியாய் நாங்கள் திரும்பவில்லை. புது வழி அதிக கஷ்டமாயிருந்தது; ஆனாலும் சீக்கி ரத்தில் சமுத்திரமட்டத்துக்கு வந்து சேர்ந்தோம்.

மேல் மட்டத்துக்குப் பத்துகெஜம் கீழே இருந்த போது, அனேகவிதமான சிறு மீன்கள் சமீபத்தில் வந் தன. துப்பாக்கி எடுத்து சுடும்படியான மிருகமொன் றும் அணுகவில்லை. திடீரென்று செடிக்கு நடுவே போய்க்கொண்டிருந்த ஒரு ஜெந்துவை நோக்கி காப் டென் சுட்டான். நீமோ குறிதப்புவது உண்டோ? தக்ஷணமே அது செத்து விழுந்தது. அதன் தோலை உரித்து லண்டனில் விற்றால் வெகு ஜாஸ்தியான விலை கிடைக்கும்; மேலே கறுப்புப் பட்டாயும் கீழே வெள்ளி நிறமாயும், அது அதிக சிறந்த உடுப்பாயும், அதன் விலை சுமார் இரண்டாயிரம் பிராங்கு காசுமாகும். அதன் உருண்டைத் தலையும், சிறியகாதும், அழ கிய கண்ணும், வெள்ளை மீசையும், குஞ்சலம் கூடிய

வாலும் பார்வைக்கு வெகு விநோதமாயிருந்தன. ஆகவே இது வெகு விலையுயர்ந்த பிராணி. இதைக் கொன்று, தோலை பணக்காரர் மேல்உடுப்பாக உடுத்திக் கொள்ளுகிறார்கள்; வரவர, இதன் ஜாதியும் நசித்துப் போய்விட்டது. நீமோவின் வேலைக்காரன் அந்தப் பிராணியைத் தோளில் தூக்கிக்கொண்டு நடந்தான்.

இப்படி போய்க் கொண்டிருக்கும் போது, ஒரு பெரிய பக்ஷி, இறகுகளை விசாலமாய் விரித்துக் கொண்டு, ஜலமட்டத்துக்கு மேலே ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்தது. நீமோவினிடைய தோழன் உடனே குறிப்புப்பார்த்து அதைச் சுட்டு விட்டான். என்ன ஆச்சரியம்? இது பிராணன் போய், எவன் அதைச்சுட்டானோ அவன் காலண்டைவந்து விழுந்தது.

மணலிலும், சேற்றிலும், கற்பாறையிலும் நடந்து நடந்து, எனக்குக் கொஞ்சம் தள்ளாமை உண்டாயிற்று. அரைமைல் தூரத்தில் ஒரு மங்கலான வெளிச்சம் தெரிந்தது; அது நாட்டிலஸ் கப்பலின் லாந்தல் வெளிச்சம் என்று தெரிந்ததன்மேல் தைரியம் வந்தது; இருபது நிமிஷத்தில் அங்கே போய்ச் சேர்ந்து தாராளமாய் மூச்சுவிடலாமே. அந்த எண்ணமே எனக்குக்கொஞ்சம் உற்சாகம் உண்டாக்கினது.

இப்படி யிருக்கையில், மற்றவர்களுக்கு இருபது அடி பின்னே நான் வந்து கொண்டிருந்தேன். காப்டென் நீமோ வெகு வேகமாய்த் திரும்பி ஓடி வந்து என்னை இழுத்துக் கொண்டு போனான். அதே விதம் அவனுடைய ஆள் கான்ஸெலை இழுத்தான்; ஏன் இப்

படி எங்களை பலாத்காரமாய் இழுக்கிறார்களென்று என
க்குப் புரியவில்லை; ஆனால் நீமோ என் பக்கத்தில் உட்
கார்ந்து அசையாமலிருந்ததைப் பார்த்து எனக்கு
தைரியம் உண்டானது.

நான் தரையில் படுத்திருந்தேன்; என்னைச்சுற்றி
செடிகள் வளர்ந்திருந்தன; ஆனாலும், தலையை நிமர்ந்
துபார்த்தபோது, ஏதோ பிரமாண்டமாய் பக்கத்தில்
சப்தமில்லாமல் போவது தெரிந்தது. என் உடம்பு
நடுங்கினது, ஒரு சுறுமீன்குடும்பம் போய்க் கொண்
டிருந்தது; பளீச் என்று மின்னலை யொத்த வெளிச்
சம் வந்தது! பல்லைப் பார்த்தால் திகிலாயிருந்
தது. வாயைப்பார்த்தால் உடம்பு உதறினது. ஒரு
மனுஷ்யனை ஒரேயடியாய் விழுங்குவதற்கு அதற்கு
சிரமமேயிருக்காது; அதற்குப் பார்வை மத்தியமம்.
சமீபத்தில் நாங்கள் இருந்தும், அவைகள் எங்களைக்
கவனிக்கவில்லை. காட்டில் புலியண்டை அகப்பட்டுக்
கொண்டால் இருக்கும் அபாயத்தைப் பார்க்கினும்,
இதன் கண்ணில் தென்பட்டால் அபாயம் அதிகமாகும்.

அரை மணியான பிறகு, நாங்கள் கப்பலுக்குப்
போய்ச் சேர்ந்தோம். கடலுக்குள் போவதற்காக உடு
த்திக் கொண்ட உடுப்புகளைக் கொஞ்சம் சிரமத்துடன்
கழற்றிவிட்டு தத்தம் அறைக்குள் போனோம்.

என்ன ஆச்சரியமான பிரயாணம்! கடலின் தரை
பண்டைபோய் உலாவி வந்தேன் என்று மனுஷ்யாளி
டத்தில் சொன்னால் யாராவது நம்புவார்களா?

## அத்தியாயம் 18.

### பஸிபிக் சமுத்திரத்தில் நாலாயிரம் யோஜனை கீழே.

அடுத்தநாள் (நவம்பர் 18) சிரமம் சற்றுத் தீர்ந்து, வழக்கப்படி மேல் தட்டுக்குப் போனேன். சமுத்திரத்தில் காற்று அசையவேயில்லை. க்ரெஸ்போ தீவு மறைந்து போய்விட்டது. எங்கே கண்டாலும் நீலமாயிருந்தது. கடலின் அழகைப் பார்த்து மோகித்துக் கொண்டிருக்கையில், நீமோ வந்து, என்னைக் கவனியாமல், நாலுபக்கமும் சுற்றிப் பார்த்தான். உடனே, வெகு பலசாலியான இருபது ஆள்களும் வந்தார்கள். இராத்திரியில் போட்டிருந்த வலைகளை இழுக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் அதிகமாய்ப் பேசவில்லை; தவறி வாயைத் திறந்தால், எங்களுக்குச் சற்றேனும் புரியாத நூதன பாஷையில் அவர்கள் பேசினார்கள்.

வலைகளை இழுத்து, கப்பலின்மேல் போட்டுப் பார்த்தபோது, நானாவிதமான மீன்கள் அகப்பட்டுக் கொண்டதாகத் தெரிந்தது. இப்போது பிடிபட்ட மீன்கள் நிறை சுமார் ஆயிரம் பவுண்ட் இருக்கும். ஆகையால் கப்பலில் இருப்பவர்களுக்கு சாப்பாடு குறைச்சலேயில்லை. சில மீன்களை உடனே உபயோகித்தார்கள்; மற்றவைகளை ஊறுகாய் போட்டார்கள்.

மீன் பிடிப்பது முடிந்து, வேண்டிய வரையில் சுத்தவாயுவும் கப்பலில் நிறைந்தபடியால், இனி நாடிலஸ் சமுத்திரத்தின் கீழ் யாத்திரை போகுமென்று நான் எண்ணினேன். அப்போது நீமோ என்னிடத்தில் வந்து:

"இப்போது சமுத்திரம் எப்படியிருக்கிறதென்று உமக்குத் தெரிகிறதா? அது சிலவேளைகளில் கோபிக்கிறது; சில வேளைகளில் சாந்தமாயிருக்கிறது. அதற்கு நாடி, நரம்பு, இரத்தக்குழாய் எல்லாம் உண்டு. ஈச்வரன் அதன் சீதோஷ்ண ஸ்திதியை மாற்றினால், உடனே அதற்குக் கோபமுண்டாகிறது. கடலின் அடியிலிருந்து ஜலமட்டத்துக்கும், ஜலமட்டத்திலிருந்து அடிக்கும் ஓட்டமுண்டு; ஆகவே, இது மனிதன் சுவாசமிடுவதுபோல் தோன்றவில்லையா? இக்கடலுக்குப் பிராணன் உண்டென்பதற்குச் சந்தேகமில்லை. அதிலிருக்கிற உப்பை எல்லாம் எடுத்து பூமி முழுவதும் பரப்பினால் பத்து கெஜம் உயரம் அது ஓங்கும். பரமாத்மா சமுத்திரத்தில் உப்பை தமாஷுக்காகப் போட்டிருக்கிறாரென்று நினைக்கவேண்டாம். சாதாரணமாய் உஷ்ணம்பட்டால் ஜலம் ஆவியாய் மாறிப்போகிறதே; அதில்கொஞ்சம் உப்புப்போட்டால் அப்படிசீக்கிரத்தில் மாறாது. அதே விதம் கடலின் ஜலம் ஆவியாய் மாறிப்போகாமலிருப்பதற்காகவே ஈச்வரன் அதில் உப்பைக் கலந்திருக்கிறார். ஆவி அதிகமாய் வெளியில் வந்தால், சீதோஷ்ணம் மிதமாயிருக்கும் தேசத்தில் பரவி, மழை தாரை தாரையாய்க் கொட்டி அதை நாசம் பண்ணிவிடும்.

இன்னும் கேளும். ஒவ்வொருதுளி ஜலத்திலும் லக்ஷக்கணக்காய் சிறு ஜெந்துக்களிருக்கின்றன. அவைகள் தண்ணீரிலுள்ள கெட்டி பதார்த்தங்களை உண்டு, பவழமுதலிய சாமான்களை உண்டாக்குகின்றன. என்

னைக் கேட்டால், தரையில் உள்ள ஜீவகோடிகளைக் காட்டிலும், கடலிலுள்ள ஜீவபிராணிகள் மேலானவை. ஜலத்துக்குள் பட்டணங்களும் வீடுகளும் கட்டுவது சுலபம். நாட்டிலஸ் கப்பல் மாதிரி, அவைகள் ஒவ்வொருநாளும் காலையில் மேலே வந்து சுத்த வாயுவு உட்கொள்ளலாம். அந்த நகரங்களில் ஒருவருக்கும் உள்படாமல் சுவாதீனம் அனுபவித்துக் கொண்டிருக்கலாம். ஆனால், எவனுவது ஒரு வெகு துஷ்ட கொடுங்கோல் மன்னன்—

காப்டென் நீமோ இந்தவாக்கியத்தை முடிக்கவில்லை. அவனுடைய சொந்த அனுபோகத்தில் துஷ்ட அரசனுடைய துஷ்கார்யத்தால் மனது அதிக நொந்தவன் போல் காணப்பட்டான். தன்னுடைய மனதின் கஷ்டத்தை எனக்குத் தெரிவிக்க சம்மதமில்லாதவனைப் பேச்சைமாற்றி,

“ ஆரநாக்ஸே, சமுத்ரம் எவ்வளவு ஆழமென்பது உமக்குத் தெரியுமா ” என்று கேட்டான்.

நான்:—அனேக இடங்களில் சாஸ்திரக்ஞர்கள் கண்டுபிடித்த ஆழம் இவ்வளவென்று எனக்குத் தெரியும்.

நீமோ:—ஞாபகமிருந்தால் கொஞ்சம் சொல்லும். பிசகிருந்தால் திருத்துகிறேன்.

நான்:—வட அட்லாண்டிக் சமுத்திரத்தில் 8,200 கெஜம் சராசரி ஆழம்; மத்தியதரைக் கடலில், 2,500; தென் அட்லாண்டிக்கில், 12,000 முதல் 15,000 வரையில்; மொத்தத்தில், சமுத்திரத்

தின் தரையைச் சமப்படுத்தினால், சுமார் ஐந்தரை மைல் ஆழமிருக்கும்.

இதற்கப்புறம் நீமோ புறப்பட்டுத் தன்னறைக்குப் போய் விட்டார். கான்ஸெலும் நெட்லாண்டும் இருந்த இடத்துக்கு நான் போய்ச் சேர்ந்தேன். என்னுடன் சமுத்திரத்தின்பாதாளத்தில்தான்கண்ட அதிசயங்களையெல்லாம் கான்ஸெல் சொல்ல, நெட்லாண்டு தானும் கூடப் புறப்படவில்லையேயென்று இப்போது வருத்தப்பட்டான். சமுத்திரத்தின் கீழுள்ள காடுகளைப் போய்ப் பார்க்கச் சீக்கிரத்தில் சமயம் உண்டாகுமென்று சொல்லி நெட்லாண்டுடைய துக்கத்தை நான் ஆற்றினேன்.

நாட்டிலஸ் இப்போது சமுத்திர மேல்மட்டத்துக்கு நூற்றைப்பது கெஜம் கீழேபோய்க் கொண்டிருந்தது. ஒருநாள் இரண்டாயிரம் அடி கீழேயும் சென்றது.

நவம்பர் மாஸம் 27ம் தேதி ஸாண்ட்விச் தீவுகளண்டை பாத்திரை போனோம். வெகு பிரசித்தரான காப்டென் கூக் மரித்தது இங்கேதான்.

புறப்பட்டது முதல் 1400-மைல் நாங்கள் வந்து விட்டோம். காலையில் விழித்தெழுந்து, மேல்தட்டுக்கு வந்து பார்க்க, ஹாவாயி தீவு தெரிந்தது. அதன் கடற்கரை யோரமெல்லாம் உழுது பயிரிட்டிருந்தது. மலைவரிசைகள் வெகு அழகாய்த் தோன்றின. சமுத்திர மட்டத்திலிருந்து 5,000 அடி உயரமான எரிமலைகளும் காணப்பட்டன. வெகு விசித்திரமான பூண்டுகளும் அநேகம் அங்கே சம்பாதித்தேன்.

கப்பல் இன்னமும் தென்கிழக்காய்ப் போய்க் கொண்டிருந்தது. மார்ட்டின் தீவுக்கருகில், ஒருவிதமீன் கண்டேன்; மாம்ஸம் ஊதாவர்ணமும், வால் பொன்னிறமு மானது; அதைப்போல் அவ்வளவு ருசியான மீன் நான் சாப்பிட்டதேயில்லை; இன்னும் அநேக வித உணவுக்குத் தகுந்த மீன்களும் அங்கே அகப்பட்டன.

இந்த அழகான தீவுகளைத்தாண்டி, ஏழுநாளையில் 2,000 மைல்தூரம் போனோம். இதற்குள் இதுவரையில் பார்த்தறியாத அநேக கடல் ஜெந்துக்களைக் கண்டு மகிழ்ந்தேன்.

ஒருநாள் வெகு உற்சாகமாய் ஒரு புஸ்தகம் நான் வாசித்துக் கொண்டிருக்கும்போது, கான்ஸெல் கிட்ட வந்து, "ஒருக்ஷணம் இங்கே வரவேணும்" என்றான். உடனே வாசிப்பதை விட்டு, அவன் காட்டிய திக்கில் பார்த்தபோது, சமுத்திரத்துக்குள் நடுவில் எதோ ஒரு கறுத்த மொத்தை தொங்கிக் கொண்டிருப்பதாகத் தெரிந்தது. எவ்வளவு உற்றுப் பார்த்தும் அது இன்னதென்று தெரியவில்லை. கடைசியில் அது சமுத்திரத்தில் முழுகிப்போன கப்பலென்று தெரிந்தது. அதைப் பார்க்கப் பார்க்க எனக்கு வெகு வருத்தமாயிருந்தது. அதில் குழந்தைகளை மார்போடு அணைத்துக்கொண்டிருந்த வெகு சௌந்தர்ய ஸ்திரீகளும், கைகளைக் கூப்பிக் கொண்டு, "லோகநாதா நீரேகதி, காப்பாற்றும்" என்றர்த்த முண்டாகும்படியாய்க் கைகளை கூப்பிக்கொண்டிருக்கிற மனிதர்களும், தெரிந்தார்கள்.

இந்த துக்கமான காக்ஷியைக் கண்டவுடன் திகைத்துப் போனோம். பேச நாவெழவில்லை. எதை

விடவும் அதிக பயங்கரமான காக்ஷியென்ன வென்றால் நூற்றுக் கணக்காய் சுறாமீன்கள் வாசனையா லறிந்து அம்மனிதர்களையும், ஸ்திரீகளையும், குழந்தைகளையும் கடித்துத் தின்பதற்காக, வெகுவேகமாய்க் கப்பலை நோக்கி ஓடிவந்தன. அதைப்பார்க்க எங்களுக்கு மனது சகிக்கவில்லை. அந்த பயங்கரமான மீன்களைப் பார்த்தாலே உடம்பு நடுங்கும்; மனுஷ்யர்களைப் பக்ஷணம் செய்வதற்காக அவைகள் துரிதமாய் நீந்தி ஆவலாய் வருவதைக் கண்ணுறுவதும் எங்கள் துர்பாக்யம் தான். இது ப்ளாரிடா தீவுக்குச் சமீபத்தில் நடந்தது.

---

## அத்தியாயம் 19

### "வானிகாரோ"

இந்த துக்ககாக்ஷியைக் கண்டது முதல், அநேக விதமாய் சமுத்திரத்தில் முழுகிப்போன அனேக கப்பல்களைக் கண்டோம். சில கப்பல்கள் ஜலமட்டத்துக்குக் கொஞ்சம் கீழேயே நின்று மடித்துக்கொண்டும், துருப் பிடித்துக்கொண்டும் இருந்தன; சில வெகு கீழே போய் அதே விதம் நாசமடைந்து கொண்டிருந்தன.

டிசம்பர் மாசம் 11ம் தேதியில், பூர்வீக காலத்தில் வெகு அபாயமான ஸ்தலமென்று பேர்போன மாலுமிகளும் நடுங்கும் பாமூடாஸ் தீவுகளுக்கருகில், வந்தோம்; நூற்றுக்கணக்காய் தீவுகள் இங்கே சேர்ந்து இருக்கின்றன. இன்னமொரு யுகத்தில், நடுவில் இருக்கும் சமுத்திரம் தூர்ந்துபோய், ஒரு பெரிய கண்டம் இங்கே உண்டாகிவிடும்.

இந்த யோஜனையைக் காப்டென் நீமோ விடத்தில் சொன்னேன். என்னுடைய புத்தி சாமர்த்தியத்தை சிலாகிப்பன் என்று எண்ணியிருக்க, அவன் வெகு அசிரத்தையாய்க் கேட்டுக்கொண்டு "அவசியமாய் வேண்டியது புதுக்கண்டங்களல்ல; பழைய கண்டங்களில் புது ஜனங்கள் உற்பத்தியாகவேணும்" என்றான்.

இந்த சமுத்திரத்தில் தீவுகள் எவ்விதம் உண்டாகின்றன என்பதை வெகு நன்றாய்க் கவனித்திருந்தேன். கோடி கோடியாய் சிறு ஜெந்துக்கள் சமுத்திரத்தில் சுவர் எழுப்புகின்றன. இந்த மாதிரியே, மோரிசு தீவண்டைசமுத்திரம் வெகு ஆழமாய் இருக்கிறது. இங்கிலாந்தின் பக்கத்தில் ஆழம் கொஞ்சம்.

இந்த சுவர்களையெழுப்ப எவ்வளவு காலம் வேண்டியதாயிருக்குமென்று கேட்க, ஒரு அங்குலத்தில் எட்டிலொருபாகம் உண்டாவதற்கு சுமார் நூறு வருஷம் வேணுமென்றேன்.

கான்ஸெல்:—அப்படியானால், இந்தச் சுவர்களையெல்லாம் கட்ட—

நான்:—சுமார் நூற்றுத் தொண்ணூற்றி ரண்டாயிரம் வருஷம்—அதாவது ஏறக்குறைய இரண்டு லக்ஷம் வருஷம் வேண்டியதாயிருக்கும்.

கோடைகாலம் வந்து வெயில் தாங்கமுடியாதபடி உஷ்ணமாயிருந்தது. ஆனால், நாட்டிலஸ் கப்பல் சமுத்திரத்தின் கீழ் இருந்தபோது, இந்தத் தாபம் தெரியவில்லை. ஜலமட்டத்துக்கு முப்பது நாற்பது கெஜத்

துக்குக் கீழே சூரியனுடைய கிரணங்கள் அதிகமாய்ப் பிரவேசிக்கிறதில்லை.

டிசம்பர் பதினைந்தாம் தேதியில், பசிபிக் சமுத்திரத்தின் ராணியென்று சொல்லப்படும் டாஹிடி தீவண்டை வந்து சேர்ந்தோம். அதன் உன்னதமலைகள் வெகு கம்பீரமும் அழகாயுமிருந்தன. அதற்கு சமீபத்தில் வெகு சிலாக்கியமான மீன்களும், கடல் சர்ப்பங்களும் ஏராளமாயிருந்தன. இதுவரையில் நாட்டிலஸ் 8100 மைல் பிரயாணம் செய்துவிட்டது; இன்னம் 1,500 மைல் யாத்திரை செய்து, அநேக கப்பல்கள் அழிந்துபோன இடம் சாவதானமாய்த் தாண்டி, கடைசியில் பீஜி தீவுகளருகில் வந்தோம். அங்கேயிருந்த காட்டாள்கள் "யூனியன்" கப்பலில் வந்த மனிதர்களையெல்லாம் கொஞ்சகாலத்துக்கு முன்தான் கொன்று பக்ஷணம் பண்ணினார்கள். இங்கே சிப்பிகள் ஏராளமாய்க்கிடைக்கவே, எங்களுக்கு அதிக சந்தோஷமாயிருந்தது.

இவ்விதம் "புதிய ஹெப்ரிடீஸ்" தீவுகளெல்லாம் பார்த்துக்கொண்டு, டிசம்பர் 25-ம் தேதியில் "ஆரன்" தீவண்டை வந்தோம். அது வெகு அழகான தீவு. நடுவில் வெகு உயர்ந்த மலையும், அதைச் சுற்றி வெகு பசுமையான தோப்புகளும், எல்லாம் பார்த்து ஆனந்திக்கத் தகுந்தவை.

'கிறிஸ்த்மஸ்' நாள். நெட் தன் நாட்டில் அன்றைக்கு இல்லாமற்போனதற்காக மிகவும் வருத்தப்பட்டான். எட்டுநாளாய் நான் காப்டென் நீமோவைப் பார்க்கவில்லை. இருபத்தேழாம் தேதி, அதிகாலை

யில் அவர் என்னிடத்தில் வந்து, என் முன் இருந்த படத்தில் ஒரிடத்தில் விரலைவைத்து, "வானிகாரோ" என்றார்.

அப்படியா? இந்த இடத்திலா "லாபெரூஸ்" உடைய கப்பல்கள் நாசமாய்ப்போயின? எனக்குத் திகிலுண்டாய் இருந்த இடத்தை விட்டு எழுந்தேன்.

நான்:—வானிகாரோவுக்கா போகிறோம்?

நீமோ:—ஆம்.

நான்:—முன்னே கப்பல்கள் அழிந்துபோன இடம் ஆச்சே! அங்கே நான் அவைகளைத் தேடிப் பார்க்கலாமா?

நீமோ.—உமக்கு மனதிருந்தால் அப்படியே செய்யும்.

நான்:—எப்போது நாம் வானிகாரோவுக்குப் போய்ச் சேருவோம்?

நீமோ:—நாம் இப்போது அங்கே இருக்கிறோம்.

காப்டேனோடு போய் நான் நாலுபக்கமும் வெகு கவனமாய்ப் பார்த்தேன். வடமேற்கில் இரண்டு எரிமலைத்தீவுகள் காணப்பட்டன; அவைகளைச் சுற்றி நாற்பதுமைல் சுற்றளவுக்கு முருகைக்கல்சுவர் கிளம்பி இருந்தது; வானிகாரோ தீவில் எங்கே பார்த்தாலும் பசுமையாயிருந்தது.

காப்டேன் நீமோ கேட்க, நான் "லாபெறாஸ்" கப்பல் சேதமான விருத்தாந்தங்களை எனக்குத் தெரிந்த வரையில் சொன்னேன்.

நீமோ.—ஆகவே, வானிகாரோ தீவண்டை சேதமான கப்பலிலிருந்து தப்பின ஜனங்கள் கட்

டின மூன்ருவது கப்பலின் கதி இன்னதாயிற்
றென்று ஒருவருக்கும் தெரியாதே ?

நான்.—தெரியாது.

இதற்கு பதிலொன்றும் சொல்லாமல், எனக்கு ஜாடைகாட்டித் தன்னுடன் வரும்படியாய் அழைத்தார். அப்பொழுது நாட்டிலஸ் ஜலமட்டத்தின் கீழ் இருந்தது. பக்கங்களிலுள்ள பலகைகளைக் கீழே தள்ளிவிட, கண்ணடி வழியாய் அந்தக் கப்பலின் சாமான்களைக்கண்டு ஆச்சரியப்பட்டேன்.

பிறகு, நீமோ "லாபெரூஸ்" உடைய விர்த்தாந்தங்களை சவிஸ்தாரமாய்ச் சொன்னர்.

நான்.—இதெல்லாம் உமக்கு என்னமாய்த் தெரியும் ?

நீமோ.—கடைசிக் கப்பலண்டை நான் கண்ட சாமான்களைப் பாரும்.

இப்படிச் சொல்லி, பிரெஞ்சுக்கார ராஜாங்க முத்திரை பதித்த ஒரு தகரப் பெட்டியை அவர் என்முன் வைத்தார். அதிககாலம் உப்பு ஜலத்திலிருந்ததால், அது அதிக துருப்பிடித்துப் போயிருந்தது. அதை நான் திறந்து அதில் மஞ்சள் வர்ணமான கடுதாசிக் கட்டு ஒன்றைக் கண்டேன். அந்த தஸ்தாவேஜி வெகு முக்கியமானது. பதினறும் லூயி ராஜன் சொந்தக்கையால் எழுதிய பத்திரங்கள் அதில் இருந்தன. அவையெல்லாம் பெரூஸுக்கு இட்ட கட்டளைகள்.

நீமோ.—ஆரனாக்ஸ், லாபெரூஸ் இங்கே மரணமடைந்தது எனக்குஸந்தோஷம். நானும் என்னுடைய தோழர்களும் இவ்விதம் மரித்தால் போதும்.

இந்த முருகைக்கல் பக்கத்தில் இறந்தால் தேகத்துக்கும் ஆத்மாவுக்கும் அதிக சமாதானமுண்டாகும்.

---

## அத்தியாயம் 20

### டாறிஸ் ஜலசந்தி

டிசம்பர் மாஸம் 27-ம் தேதி இராத்திரி, நாட்டிலஸ் கப்பல் வானிகாரோவை விட்டு வெகு வேகமாய்ப் புறப்பட்டது. மூன்று நாளில் இரண்டாயிரம் மைல் பிராயணம் போனோம்.

1863-ம் வரு ஜனவரிமீ முதல் தேதி அதிகாலையில் நான் மேலதட்டில் நின்றுகொண்டிருந்தபோது கான்ஸெலும் அங்கே வந்தான்.

கான்ஸேல்.—புது வருஷத்தில் உங்களுக்கு எல்லாவித சந்தோஷமும் உண்டாகவும்.

நான்.—நீ சொல்வது வேடிக்கையாயிருக்கிறது. புது வருஷமென்ன! நமக்கு எல்லாம் ஒன்றுதானே. சாச்வதமாய் நம்முடைய கதி கைதிகளுடைய கதிதானே.

கான்ஸேல்.—இதற்குப் பதில் சொல்ல எனக்குத் தெரியவில்லை. இந்தக் கப்பலில் வெகு விநோதமான விஷயங்கள் கண்டிருக்கிறோம். இங்கே இருப்பது சிரமமாயுமில்லை; அலுப்பாயுமில்லை. இது வாஸ்தவம். தவிர, நான் நிச்சயமாய் ஒன்று சொல்வேன். எந்தவிதமாயாவது நாம் இந்தக்

கப்பலை விட்டுப் போனால் இங்கே உண்டான அனுபவங்கள் எக்காலத்திலும் கிடைக்கா.

நான்.—கான்ஸெல், அது நிஜம்தான். நெட்லாண்டைப் பார்த்து வெகுநாள் ஆயின. அவன் எப்படி இருக்கிறான்?

கான்ஸேல்.—அவனுக்கு வாரிழுதான் பிரதானம். அவன் சாப்பிடுகிற மீன் எவ்வளவு பெரியது! அதிலும் அவனுக்குத் திருப்தி உண்டாகவில்லை. அவன் இங்கிலீஷகாரனல்லவா? மாட்டின் மாமிசத்தை ஏராளமாய்ச் சாப்பிட்டு அதிகலாகிரி உண்டாக்கும் மதுக்களை மிதமிஞ்சிக் குடித்துப் பழகியிடும் ஆங்கிலேயனுக்கு இந்தத்தீனி எவ்விதம் ஒக்கும்? நான் எவ்வளவாய் இந்தக்கப்பலிலேயே இருக்க ஆசைப்படுகிறேனோ, அதற்கு நேர் விரோதமாய் நெட்லண்ட் இதிலிருந்து தப்பிஓடவேணுமென்று ஆவலுறுகிறான்.

ஜனவரி மாஸம் இரண்டாம் தேதி கணக்குப் பார்த்ததில் ஜப்பான் சமுத்திரத்தில் 11,340 மைல் நாங்கள் பிரயாணம் செய்திருப்பதாய்த் தெரிந்தது. பிரஸித்தரான கூக் யாத்திரை செய்த கப்பல் இந்த இடத்தில்தான் கற்பாறையில் மோதிற்று. சமுத்திரத்தில் முன்னூற்றறுபது மைல் தூரத்துக்கு இந்த மலை ஜலமட்டத்துக்கு மேல் தெரிகிறது. கடல் இங்கே அதிக கொந்தளிப்பாயிருக்கும். அலைகள் அந்த மலையில் மோதும்போது உண்டாகும் சப்தம் இடி முழக்கத்தை ஒத்திருக்கும். நீமோ தலைவன் இதை நன்று

யறிந்தவனுயினும் கடலுக்குள் அதிக ஆழத்தில் யாத்திரைபோனுன். நான் அதிரப்தியடைவதில் பிரயோஜனமில்லை. இங்கே வெகு விநோதமான மீன்களைக்கண்டு வலைபோட்டு அவைகளைப் பிடித்து என்னுடைய விநோத காட்சியில் சேர்த்துக் கொண்டேன்.

இன்னும் இரண்டு நாளில் பாபுவா கரையண்டை வந்து சேர்ந்தோம். இனி இந்து சமுத்திரத்தில் யாத்திரை செய்வதாய் நீமோ என்னிடத்தில் வந்து சொல்ல, அதனுல் எனக்குண்டான சந்தோஷத்துக்கு அளவில்லை.

டாறிஸ் ஜலசந்தியுள் பிரவேசித்தால், இந்து சமுத்திரம் வந்துவிடும். ஐரோப்பிய கடல்கள் கிட்ட வந்துவிட்டனவென்று நெட்லண்ட் கொம்மாளம்போட்டான்.

ஆனுல் அந்த டாறிஸ் ஜலசந்தியில்அலைகள்வெகு கொந்தளிப்பாயிருப்பது தவிர, கரையோரங்களில் வஸிக்கும் காட்டு முராண்டி ஜனங்களால் உண்டாகும் அவஸ்தையும் அதிகம். இந்தஇரண்டு அபாயங்களுக்கும் பயப்படவேண்டியதுதான். இந்தயாத்திரையில் உண்டாகும் கஷ்டம் அதிகமே. அதைப்பற்றி வெகு வருத்தத்துடன் பேசாத பிரஸித்தபிரயாணி இல்லை. அந்த வழிபோனுல் பேர்போன அந்தமான் தீவண்டையும் போகலாம்.

சமுத்திரத்தின் அபாயங்களை அலக்ஷியம்செய்யும் நாட்டிலஸ் கப்பல் இந்தப் பிரயாணத்தை யோசித்து நடுங்கியது. இந்தபயங்கரமான ஜலசந்தி சுமார் முப்பது

மைல் அகலமுள்ளது. அதன் மத்தியில் அனேக தீவு களும், பாறைகளும், மணல்மேடுகளும் உண்டு. நாட்டி லஸ் கப்பலைச்சுற்றி அலைகள் வெகுமும்முரமாய் அடித் தன; கடல் நதியும் மணி ஒன்றுக்கு இரண்டரைமைல் வீதம் வேகமாய் ஓடியது. இதெல்லாம் எங்களை பயப் படச்செய்தன.

நான்:—இதென்ன, சமுத்திரம் இங்கே வெகு பயங்கர மாயிருக்கிறதே.

நெட்:—இந்தப் பைத்தியக்காரக் கப்பல்தலைவனுக்கும் வழிநன்றாய்த் தெரிந்திருக்கவேணும்; கொஞ்ச நாழிக்குமுன்னால் ஒரு கற்பாறைமேல் நாட்டி லஸ் தாக்கிததாளாய்போய்விடுமென்று நடுங் கிக் கொண்டிருந்தேன். நல்லவேளை, நீமோ வழியை மாற்றி நம்மையெல்லாம் காப்பாற்றி விட்டான். இந்த இடத்தில் கணக்கில்லாமல் சிறந்த கப்பல்கள் மலைகளில் மோதி பொடி யாய்ப் போயிருப்பது தெரிந்திருந்தும், நீமோ ஏன் இங்கே யாத்திரைசெய்கிறான்?

அபாயம் இங்கே அதிக மென்பதற்குச் சந்தேக மில்லை. ஆனால், நாட்டிலஸ் கப்பல் கடல் கொந்தளித் துத் தாக்குகிற கற்பாரைகள் நடுவே ஏதோ மந்திர சக்தியால் அபாயமின்றி போவதுபோல் தோன்றியது.

பேர்போன மாலுமியான "ஊர்வில்" உடைய வெகு பலமாய்க் கட்டப்பட்ட கப்பல்களெல்லாம் இங்கே தான் அழிந்து போயின.

சாயங்காலம் மூன்று மணி. அலைகள் மும்முரமாய் அடித்தன. இந்த சமயத்தில் நாட்டிலஸ் இரண்டுமைல் தூரத்திலுள்ள தீவண்டை வந்தது. சடுதியில்நாட்டிலஸ் ஒரு மலையின்மேல் மோதி, அசைவற்று நின்று போயிற்று. நானும் அநேக அதிர்ச்சியால் கீழேவிழுந்தேன். கொஞ்சநேரத்துக்குப் பிறகு எனக்கு எழுந்திருக்கச் சக்தியுண்டாகி எழுந்திருந்தபோது, நீமோவும் அவனுடைய பெரிய உத்தியோகஸ்தனும் கப்பலை முழுவதும் பரிசோதித்துவிட்டுஅவர்களுடைய பாஷையில் எனக்குப் புரியாமல் பேசுவதைக்கண்டேன்.

நாட்டிலஸ் கப்பல் கரைத் தட்டிப்போய்விட்டது. ஆனால் அதற்கு ஒருவித சேதமும் உண்டாகவில்லை; மூன்றுமைல் தூரத்தில் ஒரு பெரிய தீவு தெரிந்தது.

நான்:—அபாயம் உண்டாய்விட்டதோ?

நீமோ:—அபாயம் ஒன்றுமில்லை.

நான்:—தரையில் கால்வைப்பதில்லை என்று சபதம் கூறின நீர் இப்போது என்ன செய்வீர்?

நீமோ:—நீர் சொல்வது எனக்குப் புரியவில்லை. நாட்டிலஸ் கப்பலுக்கு ஒரு கெடுதியும் உண்டாகவில்லை. வெகு சீக்கிரத்தில் திரும்பவும் சமுத்திரத்துக்கு உம்மைக் கொண்டுபோய் அதன் ஆச்சரியங்களை உமக்குக் காட்டுவேன். இப்போது தான் நாம் இருவரும் கூடி யாத்திரை செய்ய ஆரம்பித்திருக்கிறோம்; அதற்குள்ளேயே உம்மை விட்டுப்பிரிய எனக்குச் சம்மதமில்லை.

நான்:—காப்டென், நாட்டிலஸ் நடுசமுத்திரத்தில் கரை தட்டியிருக்கிறது. பஸிபிக் சமுத்திரத்தில் அலைகள் உயரமல்ல. கப்பலின் பாரத்தைக் குறைத்தாலொழிய அது எவ்விதம் இந்த இடத்தைவிட்டு அசைய முடியும்?

நீமோ:—இன்றைக்கு ஜனவரிமீ 4௳. ஐந்துநாளில், பௌர்ணமை வருகிறது. அப்போது ஜலம் மிகுந்து, அலை உயர்ந்து, கப்பல் கடலில் மிதந்து, நாம் யாத்திரை செய்வதற்கு ஒருவித கஷ்டமும் இருக்காது என்பது நிச்சயம்.

இப்படி சொல்லிவிட்டு காப்டென் தன்னறைக்குப் போனான்.

நெட் என்னண்டை வந்து: இது என்ன ஐயா! வேடிக்கையாய் இருக்கிறது.

நான்:—நாம் பொறுமையாய் 9௳ வரையில் காத்திருக்க வேணுமாம். அப்போது சந்திரன் வெகு தயவாய் கடலை எழுப்பி, நம்முடைய் பிரயாணத்துக்கு இடையூறில்லாமல் செய்வாராம்.

நெட்:—ஒருவித ஒத்தாசையுமில்லாமலேயா?

நான்:—ஆம்.

நெட் புன்னகையுடன்: காப்டெனுடைய ஜம்பம் பலிக்காது. இனி இந்தக் கப்பலின் தகடு காசுக்குப் பிரயோஜனப்படாது. சமுத்திரத்துக்கு மேலேலா, கீழோ எங்கேயும் இது அசையாது. நம்முடைய அதிர்ஷ்டம், நீமோவைவிட்டுப் பிரியும் காலம் வந்துவிட்டது.

நான்:—உன் மாதிரி எனக்கு யோஜனை தோன்றவில்லை. நாம் இங்கிலாந்து, பிரான்ஸ் தேசத்துக்குக்கிட்ட இருந்தால், ஓடிப்போவதைப்பற்றிச் சிந்திக்கலாம். பாபுவா தீவுகளின் கிட்ட இருந்து கொண்டு அப்படி யோஜனை பண்ணினால் என்ன பிரயோஜனம்? நாட்டிலஸுக்கு விமோசனமுண்டானால், நமக்கும் விமோசனமுண்டு. நமக்கு நல்ல காலம் உண்டாக வேண்டுமானால், அதற்கு ஒருவித கெடுதியும் உண்டாகக் கூடாது.

நெட்:—இதோ ஒரு தீவு இருக்கிறது. அதில் மரங்கள் தெரிகின்றன. அங்கே வேட்டையாடக் கூடிய மிருகங்களும் தெரிகின்றன. நாவில் ஜலம் ஊறுகிறது. நாம் அங்கே போகக் கூடாதா?

கான்ஸேல்:—இந்த விஷயத்தில் நெட் சொல்வது சரிதான். என் அபிப்பிராயமும் அப்படியே. காப்டனைக் கேட்டு உத்தரவு வாங்கிக்கொண்டு நாம் தரையில் போய் கொஞ்சம் நடந்து திரும்பினால், எனக்குத் திருப்தியாயிருக்கும்.

நான்:—கேட்கிறதற்கு ஆக்ஷேபணையில்லை; ஆனால் நீமோ சம்மதிக்கமாட்டார்.

நெட்:—இருந்தாலும், கேட்டுப்பாரும்; நீமோவுக்கு நல்ல மனசுண்டோ என்பது அப்போது தெளிவாகும்.

உடனே போய் நீமோவிடத்தில் உத்தரவு கேட்க அவன் முழுமனசாய் சம்மதித்தான். திரும்பி வந்து

விடவேணுமென்று ஒருவார்த்தை கூட அவன் சொல்ல வில்லை. அந்தத்தீவில் நடந்து போவது மோசமென்று எனக்குத்தெரியும்; அப்படிச் செய்ய வேண்டாமென்று நெட்டுக்கும் சொல்லியிருப்பேன். நாட்டிலஸ் கப்பலில் கைதியாயிருப்பதில் தெரிதியொன்றுமில்லை, பாபுவா தீவின் காட்டாள்கள் கையில் அகப்பட்டால் அவர்கள் நெருப்பில்போட்டு வதக்கி நம்மைத்தின்று விடுவார் களே, இது எனக்குத்தெரியாதா? ஆனால்,நான் சொல் வதை நெட் கேட்கமாட்டான்.

நீமோ வெகுதயவாய் ஒரு சிறு தோணியும் கொடுத்தார்; கூட வரும்படியாய் நான் அவரைக் கேட்க வில்லை. மறுநாள் காலையில், எட்டுமணிக்கு, கைக்கோடரிகளும் துப்பாக்கிகளும் எடுத்துக்கொண்டு நாங்கள் வெகு சந்தோஷமாயும் உல்லாஸமாயும் நாட்டிலஸ் கப்பலைவிட்டுப் புறப்பட்டோம். கடலில் கொந்தளிப்பில்லையாதலால், தோணி வெகு வேகமாய்ப் போயிற்று. இதில் நெட்டுக்கு சந்தோஷம் அதிகமாய்த்தலை தெரியாமல் குதித்தான். சிறைச்சாலையிலிருந்து தப்பி ஓடின கைதி எவ்வளவு ஆனந்திப்பனோ, அதேவிதம் நெட் பூரித்து கப்பலுக்குத் திரும்பிவருவதாய் உத்தேசிக்கவில்லை.

நெட்:—பலே பலே, கடைசியில் நமக்கு சாப்பிட மாம்ஸம் கிடைக்கப்போகிறது. ஒருவேளை ரொட்டி அகப்படாது. மீன் நல்லதல்லவென்று நான் சொல்லவில்லை; எப்போதும் அதையே சாப்பிடுவது அலுப்பாய் இருக்கிறது. மான் மாம்

ஸம் சம்பாதித்து தணலின்மேல் வாட்டி சாப்பிட்டால், எவ்வளவு ருசியாயிருக்கும்!

கான்ஸெல்:-நீசொல்வதிலேயே வாயில்ஜலம்ஊறுகிறது.

நான்:—இந்தக்காட்டில் சாப்பிடக்கூடியமாம்ஸம்கிடைக்குமோ என்பது எனக்குச் சந்தேகமாயிருக்கிறது; தவிர, வேட்டையாடவந்த நம்மையே யாராவது வேட்டையாடுவார்களோவென்று எனக்கு பயமாயிருக்கிறது.

நெட்:—அப்படியானல் புலியின் மாம்ஸத்தையும் தின்ன எனக்கு ஆக்ஷேபனை யில்லை.

கான்ஸெல்:—நெட் நம்மை மேலும்மேலும் பயமுறுத்துகிறார்.

நெட்:—வருவது வரட்டும்; இறகுகளில்லாத நாலுகால் ஜெந்து, அல்லது இறகுகளுள்ள இரண்டுகால் ஜெந்து, எது முதலில் என் கண்ணில் தென்படுகிறதோ அதை தக்ஷணமே சுட்டு எமலோகத்துக்கு அனுப்பிவிடுவேன். இது நிச்சயம்.

நான்:—நெட் வரவர புத்தியில் குறைந்தவர் என்பதாய்க் காட்டுகிறார்.

நெட்:—ஆரநாக்ஸ், பயப்படாதேயும். இருபத்தைந்து நிமிஷத்தில் உமக்கு நல்ல விருந்து நானே சமையல்பண்ணி போடாமல் போனல், என் பெயரை மாற்றி அழையும்.

எட்டரை மணிக்குத் தோணி மணலோரத்தில் போய்ச் சேர்ந்தது. "கூபோரா" தீவண்டை வந்து சேர்ந்தோம்.

# அத்தியாயம் 21

## சில நாள் தரையில்

நெட் தரையில் காலை வைத்தவுடன் தன்னுடைய ராஜ்யத்தை சுவாதீனப் படுத்திக் கொள்பவன் போல் வெகு ஜிரப்பாயிருந்தான். இரண்டுமாச காலமாய் நாங்கள் நாட்டிலஸ் கப்பலில் பிரயாணிகளாயிருந்தோம்; நிஜத்தைச் சொல்ல வேணுமானால், நீமோ தலைவனுடைய கைதிகளாய் இருந்தோம். தரையில்காடுகள் அதிகமாயிருந்தன. இருநூறடி உயரமுள்ள வெகு உன்னதமான மரங்கள் எங்கேயுமிருந்தன. கொடிகள் படர்ந்து மரங்களிலிருந்து தோரணங்கள் போல் தொங்கின. மரங்களின் தினுஸுக்கும், செடிகளின் வகைகளுக்கும் கணக்கேயில்லை. எங்கே பார்த்தாலும் கண்ணுக்கு வெகு ரமணீயமாயிருந்தது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பதில் நெட்டுக்குத் திருப்தியில்லை. தென்னமரம் ஒன்றினண்டை போய், ஒருதேங்காய் பறித்து, இளநீரைக் குடித்து, வழுக்கையை வெகு சந்தோஷமாய்ச் சாப்பிட்டோம். நாட்டிலஸ் கப்பல் விருந்துக்கும் இந்தச் சாப்பாடுக்கும் எவ்வளவு வித்தியாஸம்!

நெட்:—பேஷ். என்ன ருசி!

கான்ஸேல்:—அமிர்தம் போல் இருக்கிறது.

நெட்:—தேங்காய் நிறைய சேகரித்து நாட்டிலஸ் கப்பலில் நிறைக்கலாமென்பது நீமோவுக்குத்தெரிந்திருந்தால் அவன் ஆக்ஷேபிக்க மாட்டானென்றே நான் நினைக்கிறேன்.

நான்:—நான் அப்படி நினைக்கவில்லை. அவனுக்குத் தேங்காய் வேண்டாம்.

கான்ஸேல்:—அப்படியிருந்தால், அவன் அதிர்ஷ்டம் தரித்திர அதிர்ஷ்டம் தான்.

நெட்:—அவ்வளவுக்கும் நமக்கு நல்லதுதான். அவன் பாகமும் நமக்குக் கிடைக்கும்.

நெட் இன்னொரு மரத்திலேறும் சமயத்தில், நான்: நெட், ஒரே ஒரு வார்த்தை. தேங்காய் நல்லது தான். அதைத்தவிர இன்னும் ஏதாவது உபயோகமான பொருள்கள் இங்கே கிடைக்குமோ என்று நாம் பார்க்க வேணும். காய்கறிகள் கிடைத்தால் எவ்வளவு நல்லது!

கான்ஸேல்:—அது சரி. தோணியை மூன்றுபாகமாய்ப் பிரிக்கலாம்; ஒன்றில் பழங்கள் போட்டு நிறப்பலாம், இன்னொன்றில் காய்கறிகளும், மூன்றாவதில் மாம்ஸமும் சேர்க்கலாம்.

நெட்:—இதெல்லாம்கிடைக்கும்; அதற்குத்தடையில்லை.

நான்:—நாம் காட்டுக்குள் போகலாம். பார்த்தால் இங்கே மனித சஞ்சாரம் இல்லைபோல் தோன்றுகிறது; ஆனாலும், நர மாம்ஸ பக்ஷிணிகள் ஒருவேளை இருக்கலாம்.

நெட் ஹாஹா என்று வாயை எதையோ கடித்து விழுங்குவதுபோல் அசைத்தான்.

கான்ஸேல்:—நெட், என்ன சேதி? ஏன் அப்படி செய்கிறாய்?

நெட்:—நரமாம்ஸத்தில் ருசியுண்டென்று எனக்குத் தோன்றுகிறது.

காண்ஸேல்:—நெட், என்னசொல்லுகிறாய்? உன் சமீபத்தில் இருக்கப் பயமாய் தோன்றுகிறதே.

நெட்:—காண்ஸெல், உன்பேரில் எனக்கு ஆசைதான். ஆனால் உன்னைத்தின்னும்படியாய் அவ்வளவு ஆசை உண்டாகவில்லை.

காண்ஸேல்:—பயமாய்த்தான் இருக்கிறது. இப்பேர்ப்பட்ட சிநேகிதன் பக்கத்திலிருப்பது பெருமையல்ல. உன்பசியைத்தீர்க்க வேட்டையாடி ஏதாவது மிருகத்தைக்கொண்டு வரவேணும். இல்லாதேபோனால், என்தேகம் என்னுடையதல்ல என்று ஆய்விடும்.

காட்டுக்குள் புகுந்து எங்கேயும் தேடிப்பார்த்தோம். கடைசியில் ஈரப்பலாமரத்தண்டைவந்து, அதன் காயைப்பறித்துச் சாப்பிடவேண்டுமென்று நெட்டுக்கு அதிக ஆசை உண்டாயிற்று. இதற்கு முன் அந்தப் பழம் தின்று அதன் ருசி நெட் நன்றாய் அறிந்தவன்.

நெட்:—இந்தப்பழம் தின்றால், சாதம் வேண்டாம், ரொட்டி வேண்டாம், வயிறு நிறைந்துபோகும். இதைப்பறிக்காமலிருக்கமாட்டேன்.

நான்:—அப்புறம்சாவகாசமாய்சாப்பிடலாம். இப்போது உனக்குவேண்டியதைப் பறித்துக்கொள்.

நெட்:—ஐயா, அதைச்சமையல் செய்ய நாழி ஆகாது. தாமஸமில்லாமல், காய்ந்தகுச்சிகளை ஒன்றாய்ச் சேர்த்து, நெட் அவைகளை எரியவிட்டான். காண்ஸெலும் நானும் நல்ல பழமாய்ப்பார்த்துப் பொறுக்கினோம். காண்ஸெல் அவைகளைத்

துண்டு துண்டாய்வெட்டி நெட்டிடத்தில் கொடுக்க, அவன் நெருப்பின்மேல் வைத்து வாட்டினான். சீக்கிரத்தில் பலாக்காய் சமையலாய்விட, நாங்கள் வெகு சந்தோஷமாய் சாப்பிட்டோம்.

நான்:—இது வெகு ருசியாய் இருக்கிறது, சந்தேகமில்லை. ஆனால், அதிக காலம் வைத்திருந்தால் அது அழுகிப்போகும்; ஆகையால், அதிகமாய்ப் பறித்துச்சேர்த்து வைப்பதில் என்ன பிரயோஜனம்?

நெட்:—கான்ஸெல், அவர் என்ன சொன்னாலும் சொல்லட்டும். வேண்டிய வரையில் பறித்துச்சேர்.

மத்தியானம் ஆவதற்குள், வாழைப்பழமும் பறித்து நிறையக் குவித்துவிட்டோம். ருசியான மாம்பழமும் வேண்டியவரையில் கிடைத்து, நாழியும் ஆய்க்கொண்டிருந்தது; ஆனால் அதற்காக நாங்கள் வருத்தப்படவில்லை.

பழங்களும் காய்களும் ஏராளமாய்க்கிடைத்தும், நெட்டுக்குத் திருப்தியாகவில்லை.

நெட்:—சுவாமி, நம்முடைய வேலை இன்றைக்கு முடிந்து போய்விட்டது என்கிறீரே; இப்போது தான் ஆரம்பித்திருக்கிறது; பக்ஷியாவது, மிருகமாவது எதாவது வேட்டையாடாமல், எப்படி நாம் திரும்பலாம்?

கான்ஸெல்:—இன்றைக்கு இல்லாமற் போனால், நாளைக்கு ஆகட்டும், நாம் இப்போது திரும்பிப் போகலாம்.

நெட்:—இப்பொழுதேயா?

நான்:—இராத்திரி ஆவதற்குள் திரும்பிப்போக வேண்டாமா?

நெட்:—இப்போது எத்தனை நாழிகை?

கான்ஸேல்:—சுமார் இரண்டு மணி.

நெட்:—தரையில் எவ்வளவு சுருக்காய் பொழுது போய் விடுகிறது!

கான்ஸேல்:—நாம் திரும்பிவிடலாம்.

திரும்பிப்போகும்போது, கொஞ்சம் வள்ளிக் கிழங்கும், அவரைக்காயும் கிடைத்தது. இன்னும் கொஞ்சதூரம் போனவுடன், சவ்வரிசி மரங்களைக்கண்டு, வெகு ஆவலாய், நெட் இரண்டு மூன்று கீழே வெட்டித்தள்ளினன்; உள்ளிருக்கும் அரிசியை எடுப்பதற்கு முன், வெளியிலிருக்கிற பட்டையையும் நாரையும், நரம்பையும் எடுத்தாகவேணும்; அதுவும் வெகு கஷ்டமான வேலை. இதைப்பின்னல் செய்து கொள்ளலாமென்று, நெட் அந்தமரங்களைத் துண்டுதுண்டாக வெட்டினன்.

சாயங்காலம் ஐந்து மணி ஆகவே, இனி அங்கே இருப்பது பிசகென்று, நாங்கள் திரும்பி அரை மணிக்குள் கப்பல் வந்து சேர்ந்தோம். நான் என்னுடைய அறைக்குள் போய் தயாராய் வைத்திருந்த உணவைச் சாப்பிட்டு, படுக்கையில் படுத்துக்கொண்டேன்.

மற்று நாள் ஜனவரி மாஸம் ஆறும் தேதி. கப்பலில் விசேஷம் ஒன்றுமில்லை. அதில் மனிதர் இருப்பதாகவே தெரியவில்லை; தோணியை முதல்நாள் எங்கே

விட்டோமோ, அங்கேயே விட்டுவிட்டு தீவுக்குத்திரும்பு வதாய்த் தீர்மானம் செய்தோம்.

சூரிய உதயமானவுடன், நாங்கள் புறப்பட்டு சீக்கிரத்தில் தீவண்டை வந்து சேர்ந்தோம். நெட் வெகு வேகமாய் நடந்தான்; அவனோடு நடப்பது எங்கள் இருவருக்கும் வெகு சிரமமாயிருந்தது.

காட்டில் மீன்குத்திக்குருவிகள் நிறைய இருந்தன; நாங்கள் கிட்டப்போவதற்குள் அவைகள் ஓடிப்போய்விட்டன; அதனால் மனுஷ்ய பழக்கம் அவைகளுக்கு உண்டு என்று தெரிந்தது.

கான்ஸேல்.—இந்தப் பக்ஷிகள் சாப்பிடத்தகுந்தவையல்ல; அவைகள் கிளிகள் அல்லவா?

நெட்:—வேறொரு பறவையும் கிடைக்காத சமயத்தில் கிளியை சாப்பிடுவதில் என்ன ஆக்ஷேபனை?

நான்:—நன்றாய்ச் சமையல் செய்தால், கிளியையும் சாப்பிடலாம்.

நாழி ஆக நாழி ஆக, எங்களுக்குப் பசி ஜாஸ்தி ஆயிற்று; கான்ஸெல் சில புறாக்கள் சுட்டு, நெருப்பின் மேல் வாட்டினான்; நெட் பலாக்காயைச்சமைத்தான்; சீக்கிரத்தில் சாப்பாடு தயாராக, நாங்கள் உண்ண ஆரம்பித்தோம்; புறா ஜாதிக்காய் சாப்பிடுவதால், அதன் மாம்ஸம் வெகு ருசியும், வாசனையாயுமிருந்தது.

நான்:—நெட், திர்ப்தியா? இன்னும் என்ன வேணும்?

நெட்:—இதெல்லாம் உபகரணமே யொழிய, முக்கிய சாப்பாடு ஆகாது. நாலுகால் ஜெந்துக்கள் கிடைத்தால் தான் திர்ப்தியாகும்.

காட்டுக்குள்புகுந்து, நாலுபக்கமும் சுற்றிப்பார்த்தோம். சவ்வரிசி மரங்கள் நிறைய இருந்தன; எங்களைக்கண்டவுடன் சில பாம்புகள் பயந்து ஓடிப்போய் விட்டன.

கான்ஸெல் கொம்மாளம் போட்டுக்கொண்டு ஒரு பெரிய எருத்துவாற்குருவியைக் கையில் அணைத்துக் கொண்டுக் குதித்துக்குதித்து வந்தான்.

நான்:—சபாஷ், கான்ஸெல். உயிரோடு என்னமாய் அந்தப் பக்ஷியைப் பிடித்துவிட்டாய்?

கான்ஸெல்:—நான் அவ்வளவு ஜிரப்புப் பண்ணிக் கொள்ளக் காரணமில்லை.

நான்:—ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?

கான்ஸெல்:—ஜாதிக்காய் அதிகமாகச் சாப்பிட்டுவிட்டு மயங்கிப்போயிருந்தது; அப்போது வெகு சுலபமாய் அதைப் பிடித்துவிட்டேன். இதில் நான் ஜம்பம்பண்ணிக்கொள்ளக் காரணமில்லை.

இந்தப் பக்ஷியை ஜாக்கிரதையாய்க் காப்பாற்றி 'பாரிஸ்' பட்டணத்துக்குக் கொண்டுபோய் ம்யூஸியத்துக்கு இனமாய்க் கொடுக்க ஆசைப்பட்டேன். அது வெகு அபூர்வமான பக்ஷி. அதன் மூக்கு மஞ்சள் நிறம்; காலும் நகமும் பழுப்பு வர்ணம்; இறகுகளின் நுனி சிவப்பு; தலை மங்கலான மஞ்சள்; தொண்டை பச்சை நிறம். வாலின்மேல், இரண்டு வளைந்த பிருதுவான இறகுகள் லேசாயும், நீளமாயும், வெகு அழகாயுமிருந்தன.

நெட்:—இதைப்பார்த்து ஆச்சரியப்படுகிறீரே; அது அவ்வளவு அபூர்வமான பக்ஷியா?

நான்:—ஆம், சாதாரணமாய் இந்தப் பக்ஷி கிடைக்கிறதில்லை. ஐரோப்பாவுக்கு அனுப்பப்படும் தினுசுகள் நிஜமானவை அல்ல. வேறொரு பக்ஷியைப் பிடித்து, சாயம்பூசி, இறகுகள் சொருகி மோசம்பண்ணிவிடுகிறார்கள்.

மத்தியானம் நெட் ஒரு பெரிய காட்டுப்பன்றி சுட்டான். கங்காரு மிருகங்கள் மந்தைமந்தையாய்ப் போய்க் கொண்டிருந்தன. வழக்கமாய், அவைகள் வெகு வேகமாய் ஓடக்கூடியவைகள். ஆனால் மின்னல் சக்தியால் வெளிப்பட்ட துப்பாக்கிக்குண்டுகளுடைய வேகம் அதிகமானதால், அவைகள் ஒவ்வொன்றாய் இறந்து கீழேவிழுந்தன. நெட்டுக்கு மந்தை முழுவதையும் கொன்று தீர்த்துவிடவேணுமென்ற பைத்தியம் பிடித்தது. ஆனாலும் மறுநாள் பார்த்துக்கொள்ளலாமென்று இன்றைக்கு அதை விட்டுவிட்டான்.

மற்றநாள் வந்து கங்காரு வம்சம் முழுவதையும் அழித்துவிடுவதாய் நெட் தீர்மானித்தான். சாயங்காலம் ஆறுமணிக்கு நாங்கள் கரையண்டை வந்து சேர்ந்தோம். தோணி விட்டயிடத்திலேயே நின்று கொண்டிருந்தது; இரண்டுமைல் தூரத்தில் நாட்டிலஸ் ஒரு பெரிய மலைபோல் கிளம்பிநின்றது. கரையிலே சமயல்வேலை ஆரம்பித்து, வெகு சிலாக்கியமான சாப்பாடு தயாராய்விட்டது. எத்தனை மாம்ஸத்துண்டு! கங்காரு மாம்ஸம், புறா மாம்ஸம், சவ்வரிசிப்புட்டு,

பலாக்காய் கறி, மாம்பழம், வாழைப்பழம், தேங்காய்ப் பால்—இதைவிட உயர்த்தியான விருந்து எங்கேதான் கிடைக்கும்?

கான்ஸேல்:—நாட்டிலஸ் கப்பலுக்கு இன்றை இராத் திரி போகாமலிருந்தாலென்ன?

நெட்:—எப்போதுமே, நாட்டிலஸ் கப்பல் வேண்டா மென்றுலோ?

இப்படிப் பைத்தியக்காரப் பேச்சுகள் அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது, ஒரு பெரிய கல் எங்கே யிருந்தோ எங்கள் காலண்டை வந்து விழுந்தது.

## அத்தியாயம் 22

இருந்த இடத்தைவிட்டு எழுந்திராமல், காட்டின் பக்கமாய்த் திரும்பினேம். இந்த சமயத்தில் கான் ஸெல் கையின்மேல் ஒரு கல் வந்து விழுந்து, அவன் வைத்துக்கொண்டிருந்த மாம்ஸத்துண்டு கீழே விழுந் தது. நாங்கள் எல்லாரும் துப்பாக்கிகளைத் தோளில் சாய்த்துக்கொண்டு, எவரையும் எதிர்க்கத் தயாரா யிருந்தோம்.

நெட்:—அவைகள் குரங்குகளா?

கான்ஸேல்:—இன்னும் கிட்டமான பந்துக்கள். மனி தரைக் கொன்றுதின்னும் வனவாசிகள்.

கடற்கரையை நோக்கி ஓடிக்கொண்டு, "நாம் தோணியண்டை போய்விடலாம்" என்று கத்தினேன். நூறடி தூரத்துக்குள் இருபது சுதேசிகள் மரங்களின்

மறைவில் வில் அம்புடன் எங்களைத் தாக்கத் தயாரா யிருந்தார்கள்.

எங்களுடைய தோணி அறுபது கெஜம் தூரத்தி லிருந்தது.

காட்டாள்கள் எங்கள்மேல் அம்புகளையும் கல்களையும் எறிந்தார்கள். அபாயம் எவ்வளவாய் இருந்தாலும், நெட்டுக்குத் தன்னிடத்திலிருந்த பன்றியை யாவது கங்காருவையாவது எறிந்துவிட சம்மதமில்லை.

இரண்டு நிமிஷத்தில் நாங்கள் கரையண்டை போய்ச்சேர்ந்தோம். ஒரு க்ஷணத்தில் தோணியில் ஏறிக்கொண்டு தண்டுவலிக்க ஆரம்பித்தோம். நூறு காட்டாள்கள் கைகளையும் கால்களையும் வீசிக்கொண்டு, வெகு பயங்கரமாய் கூச்சலிட்டு, கடலில் இறங்கி எங்களைப் பின்தொடரத் துடங்கினார்கள். நாட்டிலஸ் கப்பல் மேல்தட்டில் யாராவது இருந்தார்களோ என்று பார்த்தேன். எங்கும் பாழாய்க்கிடந்தது.

இருபது நிமிஷத்தில் கப்பலுக்கு வந்துசேர்ந்து தோணியை உயர இழுத்துக்கொண்டோம்.

காப்டென் நீமோ இருக்கும் மண்டபத்துக்குள் போய்ப்பார்க்க, அங்கே காதுக்கினிமையான சங்கீதம் கேட்டது. நீமோவே வாத்தியம் வாசித்துக்கொண்டிருந்தார்.

நான்:—காப்டென் நீமோ.

நான் கூப்பிட்டது அவருக்குக் காதுகேட்கவில்லை. அவர் தோளைத் தொட்டுத் திரும்பவும் கூப்பிட்டேன். திடுக்கிட்டு, அவர் நாலுபக்கமும் சுற்றிப்பார்த்தார்.

காப்டேன்:—நீரா, ஆரநாக்ஸா? நன்ருய் வேட்டை யாடினீரா? தாவர வர்க்கங்கள் புதிதாய் ஏதாவது கண்டீரா?

நான்:—எல்லாம் சந்தோஷமாய் இருந்தது; ஆனல் சில இரண்டு கால் ஜெந்துக்கள் சமீபத்திலிருக்கின்றன. அதுதான் மனசுக்குக் கவலையாயிருக்கிறது.

காப்டேன்:—எந்தவிதமான இரண்டுகால் ஜெந்துக்கள்?

நான்:—காட்டாள்கள்.

காப்டேன்:—இதற்குத்தாஞ இவ்வளவு பயம்? அவர்கள் எங்கேயில்லை? பட்டணங்களில் இருப்பவர்களைப்பார்க்கிலும் அவர்கள் துஷ்டர்களா?

நான்:—வெகு சீக்கிரத்தில் அவர்கள் இந்தக்கப்பலண்டை வந்து ஏறிக்கொள்வார்கள். அவர்களைத்தடுக்க வேணுமானுல், நீர் ஏதாவது பந்தோபஸ்து செய்துகொள்ள வேணும்.

காப்டேன்:—நீர் கவலைப் படவேண்டாம். பயப்படவேண்டியதற்குக்காரணமே இல்லை.

நான்:—ஒருவன் இரண்டுபேராயிருந்தால் நீர் சொல்வது சரிதான்; இவர்கள் ஏராளமாயிருக்கிருர்களே.

காப்டேன்:—சுமார் எத்தனைபேர் இருப்பார்கள்?

•நான்:—குறைந்தது நாறுபேர்.

காப்டேன்:—நீமோ வாத்தியம் வாசிக்க ஆரம்பித்துக்கொண்டு இந்தத் தீவிலுள்ள காட்டாள்களெல்

லாம் இங்கே வந்து கூடினலும் நாம் கொஞ்சமும் பயப்படக்காரணமில்லை.

இப்படி சொல்லிக்கொண்டே அவன் வாத்தியம் வாசிப்பதில் மயங்கிப்போனான்.

பேசத்துணையில்லாமல், நான் தனியாய் இருந்துகொண்டு, சற்றுநேரம் காட்டாள்களைப்பற்றி நினைத்துக்கொண்டும், சற்றுநேரம் நாலுபக்கமும் சுற்றிப்பார்த்து அழகைக்கண்டு ஆநந்தித்தும், காலம் கழித்தேன்.

இப்படியே யிருந்து பாதிராத்திரியில் தூங்கிப்போனேன். கப்பல் கரைதட்டிப்போயிருந்தும், காட்டாள்கள் கப்பலண்டை வரப்பயந்தார்கள்.

பொழுது விடிந்தது. மேல்தட்டுக்குப் போய்ப்பார்க்க, ஐந்நூறு அறுநூறு சுதேசிகள் சமீபத்திலிருந்தார்கள். நெட்டை, வஸ்தாதுகளுடைய தேகம், உயர்ந்தநெற்றி, பெரியமூக்கு, வெள்ளைப்பல், சிவப்புசாயம் தோய்த்த நீண்டதலைமயிர், கறுத்த பளபளப்பான தோல்– இவ்வித ஸ்வரூபமுடையவர்களாய் எலும்பால் செய்த ஆபரணங்களைக் காதுகளில் தொங்கவிட்டுக்கொண்டு அவர்கள் நின்றார்கள். அநேகமாய் அவர்கள் நிர்வாணமாயிருந்தார்கள். ஸ்திரீகள் மாத்திரம் இடுப்பில் அகலமான மரப்பட்டைகளைக் கட்டிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குள் உயர்ந்த அந்தஸ்த்துள்ளவர்கள் கழுத்தில் வெளுப்பும் சிவப்புமான மணிகள் கோர்த்தமாலைகள் இருந்தன. கல்கள்நிறைந்த வலைகளைத்தோளில்தொங்கவிட்டுக்கொண்டு, வில்லும் அம்பும்

கேடகமும்கையில் தரித்துக்கொண்டு, பயமென்பதே முகத்தில்தெரியாமல், அவர்கள் பார்க்க கம்பீரமாயிருந்தார்கள்.

இந்த நாகரீகமற்ற மனிதர்களின் தலைவர்களில் ஒருவன் நாட்டிலஸ் கப்பலுக்குச் சமீபத்தில் வந்து அதை உற்றுக்கவனித்தான். வேணுமானால், அவனை ஒரு க்ஷணத்தில் நான் சுட்டிருக்கலாம்; ஆனால், அவர்கள்தான் யுத்தம் ஆரம்பிக்கட்டுமேயென்று கொஞ்சம் பொறுத்திருந்தேன்.

ஜலம் குறைச்சலாயிருந்தபோது, காட்டாள்கள் கப்பலைச்சுற்றிப் பதுங்கி நின்றார்கள்; என்னைக்கரைக்கு வரும்படியாயும் அவர்கள் ஜாடை காட்டினார்கள்; ஆனால், நான் அதற்குச் சம்மதிக்கவில்லை. தண்ணீர் அதிகரித்தவுடன், அவர்கள் கரைக்குப்போய்ச் சேர்ந்தார்கள். மென்மேலும் அவர்கள்கூட்டம் அதிகரித்தது.

அடுத்தநாள் கப்பல் பிரயாணம் செய்யலாமென்று நீமோ உறுதியாய்ச் சொல்ல, நான் விநோதமாயுள்ள சில மீன்களையும், பூண்டுகளையும் சேகரிக்க ஆரம்பித்தேன்.

**கான்ஸேல்:**—இந்த மனிதர்கள் வெகு துஷ்டர்களோ?

**நான்:**—அவர்கள் நர மாம்ஸ பக்ஷிணிகள் என்பதற்குச் சந்தேகமில்லை.

**கான்ஸேல்:**—அப்படியும் இருந்து தைரிய சாலிகளாய் இருக்கலா மல்லவா?

நான்:—இவர்கள் யோக்கியர்களா யிருக்கலாம்; அதைப் பற்றி எனக் கென்ன? என்னைத் தின்கிறவன் யோக்கியனா யிருந்தாலென்ன, அயோக்கியனா யிருந்தாலென்ன, எல்லாம் ஒன்றுதான். நீமோ தலைவன் ஒரு விதத்திலும் ஜாக்கிரதையாயி ருக்கவில்லை. நாமாவது பந்தோபஸ்து செய்து கொள்ள வேணும்.

இரண்டு மணிநேரம் கான்ஸெலும் நானும் மீன் பிடித்தோம். அதிசயமான மீன் ஒன்றும் கிடைக்க வில்லை. கிடைத்ததைப் பரிசாரகனிடத்தில் சமையல் செய்யக் கொடுத்துவிட்டோம். விநோதமான ஒரு மீனைக்கண்டு, உடனே வலையை விரித்து, அதை மேலே யிழுத்து, அதற்குள் கையை விட்டவுடன் நான், உரக்க கூச்சலிட்டேன்.

கான்ஸேல்:—என்ன விசேஷம்? எதாவது கடித்து விட்டதோ?

நான்:—இல்லை; ஆனாலும் என் கைவிரல் போய்விட் டது. ஆச்சரியமான விஷயமொன்று கண்டு பிடித்ததற்கு இது கூலி.

கான்ஸேல்:—என்ன கண்டு பிடித்தீர்கள்?

நான்:—இந்தக் கிளிஞ்சலைப்பார். எப்போதும் வலது பக்கத்திலிருந்து இடது பக்கத்திற்கல்லவா வளையும்; இது நேர் விரோதமாய் வளைந்திருக் கிறது.

இரண்டு பேரும் அதைப் பார்த்துச் சந்தோஷப் பட்டுக்கொண்டிருக்கையில், தூரத்திலிருந்த ஒரு காட்

டாள் நன்றாய்க் குறிப்புப்பார்த்து ஒரு கல்லை எறிய, அது கான்ஸெல் கையிலிருந்த கிளிஞ்சலில் பட்டு அதைத் துண்டு துண்டாக்கி விட்டது.

எனக்குச் சந்தேகம் மேலிட்டது. கான்ஸெல் என் கையிலிருந்த துப்பாக்கியைப் பிடுங்கி, பத்துப் பன்னிரண்டு கஜம் தூரத்தில், கையில் ஒருகவண் வைத்துக் கொண்டு எறியப்பார்க்கிறவனை நோக்கிச் சுட்டான். அவன் கையைப் பிடித்து நிறுத்தப்பார்த் தேன். அதற்குள் அவன் சுட்டு விட்டான். காட்டா ளுடைய மார்பில் பட்டது.

நான்:—கான்ஸெல், கான்ஸெல்.

கான்ஸெல்:—அவன்தானே ஆரம்பித்தான்.

நான்:—ஒரு கிளிஞ்சலுக்காக மனிதன் ஒருவனைக் கொன்று விடுகிறதா?

கான்ஸெல்:—அந்தப்பாவி எதைச்செய்திருந்தாலும் சகித்திருந்திருப்பேன். கிளிஞ்சலை உடைத்தது பொறுக்க முடியவில்லை.

இப்படி நாங்கள் பேசிக்கொண்டிருக்கும்போது கப்பலைச் சுற்றி இருபது தோணிகள் சூழ்ந்துகொண் டன. கொஞ்சநேரம் தூரத்தில் இருந்து, நாட்டிலஸ் அசைவற்று நிற்பதைப் பார்த்து தைரியங் கொண்டு, சமீபத்தில் வந்தார்கள்.

இனி அவர்களுக்கு நாம் இன்னொன்று தெரி விக்க வேண்டியது அவசியம். எங்களுடைய துப்பாக்கி களைச் சுட்டால் சப்தம் உண்டாகிறதில்லை; ஆகையால் அந்த ஜனங்கள் அவைகளுக்குப் பயப்படவில்லை. இடி

முழக்கமில்லாமல் மின்னல்மாத்திரம் மின்னினால், சிலர் பயப்படுகிறதில்லை. வாஸ்தவமாய் பயப்பட வேண்டியது மின்னலைக் கண்டுதானே.

தோணிகள் நாட்டிலஸ் கிட்டவந்து, காட்டாள்கள் அம்புகளை சரமாரியாய் அதன்மேல் எய்தார்கள்.

கான்ஸேல்:—இந்த அம்புகளில் விஷமும் தோய்த்திருந்தால் நம்முடைய கதி என்னமாகுமோ

நான்:—நாமினி பேசாமலிருக்கக் கூடாது. உடனே காப்டெனுக்குத் தெரிவிக்கவேண்டும்.

உடனே காப்டென் இருக்குமிடத்துக்குப் போனேன். அவர் பீஜகணிதத்தில் கணக்குப்போட்டுக் கொண்டிருந்தார்.

நான் மரியாதையாய்: சிரமப் படுத்துகிறேன்.

நீமோ:—ஆம், அது நிஜம்தான்; நான் காரியமாயிருக்கிற சமயம்தான். நீர் இப்போது வருவதற்குக் காரணம்?

நான்:—நம்மைச்சுற்றி காட்டாள்களுடைய தோணிகள் சூழ்ந்துவிட்டன. சிறிது நேரத்திற்குள் கணக்கிடமுடியாத மனிதர்கள் நம்மைத் தாக்குவார்கள்.

நீமோ:—அப்படியா? தோணியில் வர அவர்களுக்குத் தைரியம் வந்துவிட்டதா?

நான்:—ஆம்.

நீமோ:—அப்படியானால், நாட்டிலஸ் கப்பலின் வெளித் தட்டுகளைச் சாத்திவிடவேணும்.

நான்:—அதுதான் சொல்ல வந்தேன்.

உடனே தட்டுகளெல்லாம் சாத்தியாய்விட்டது.

நீமோ:—உம்முடைய கப்பலிலிருந்து சுட்ட குண்டுகள் இந்த நாட்டிலஸை அசைக்க முடியவில்லையே; இவர்களுடைய அம்பு துளைத்து விடுமென்று நீர் பயப்படுகிறீரா?

நான்:—அந்த பயமில்லை; என்றாலும், அபாயமுண்டு.

நீமோ:—எவ்வித அபாயமுண்டு?

நான்:—நாளைக்கு புதிய காற்றுக்காக தட்டுகளைத் திறக்கும்போது அவர்கள் உள்ளே வந்துவிடமாட்டார்களா?

நீமோ:—கப்பலுக்குள் அவர்கள் வந்துவிடுவார்களென்று உமக்குத் தோன்றுகிறதா?

நான்:—எனக்கு நிச்சயந்தான்.

நீமோ:—மனசிருந்தால் அவர்கள் அப்படியே செய்யட்டும். அவர்கள் ஏழைகள். அவர்கள் தீவுக்கு நான் வருவதால் அவர்களில் ஒருவன்கூட இறந்துபோகக் கூடாது.

பிறகு காப்டன் என்னைத் தன்பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு, தீவில் நடந்த விஷயங்களைப்பற்றி விசாரித்தான்.

நான்:—இதேயிடத்தில்தான் 'உருவில்' என்னும் பேர்போன மாலுமியின் கப்பல் அநேகமாய் அழிந்துபோயிற்று.

நீமோ:—"உருவில்" வெகுசிறந்த மாலுமிதான்; இங்கிலீஷ்காரருக்குள் கூட எப்படியோ, பிரெஞ்சுக்

காரருக்குள் அப்படியே உருவில் வெகு துர் அதிர்ஷ்டசாலி! தக்ஷிண துருவத்திலுள்ள உறைநீர் பாறைகளிலெல்லாம் தப்பிக்கொண்டு முருகைக் கல்பாறைகளிலும் அபாயமில்லாமல் சமாளித்துக்கொண்டு, பஸிபிக் சமுத்திரத்திலுள்ள நரமாமிஸ பக்ஷிணிகள் கையிலும் அகப்படாமல், கேவலம் ரெயில்வண்டியில் கஷ்டப்பட்டு இறந்த துர்பாக்கியனல்லவா? இந்தப் பெரிய மனுஷ்யன் செய்திருக்கிற அற்புதமான காரியம் உமக்குத்தெரியுமா? எத்தனை தீவுகள் கண்டுபிடித்திருக்கிறான்! ஆச்சரியமான விஷயங்களை உலகத்துக்குத் தெரியப்படுத்தியிருக்கிறான்! உருவில் மானுமி ஜலமட்டத்தில் எது செய்திருக்கிறானோ, அந்த விஷயம் இன்னும் பூர்த்தியாய் நான் ஜலத்துக்குள் செய்திருக்கிறேன்.

நான்:—ஒருவிஷயத்தில் உருவில் மானுமியின் கப்பலான ஆஸ்த்ரலேபும் நாட்டிலஸ் கப்பலும் ஒத்திருக்கின்றன. இரண்டும் இந்த இடத்தில் தரைதட்டிப்போய்விட்டன.

நீமோ:—நாட்டிலஸ் தரைதட்டவில்லை; அது உல்லாசமாய் ஊஞ்சலாடிக்கொண்டிருக்கிறது. தன்னுடைய கப்பலைத் தரையிலிருந்து ஆழசமுத்திரத்தண்டை கொண்டுபோவது உருவிலுக்கு வெகு சிரமமாயிருந்தது. நமக்கு அந்த விஷயத்தில் சிரமமேயில்லை. நாளைக்கு, நான் முன்னேயே

சொல்லியிருந்த மணிநேரத்தில், ஒரு நிமிஷம் பிசகாமல் பிரயாணம் ஆரம்பித்து விடுவேன்.

நான்:—காப்டென், நீர் சொல்லுவதில் எனக்கு முழு நம்பிக்கைதான்.

நீமோ:—(எழுந்திருந்து) நாளை மத்தியானம் மூன்றடிக்க இருபது நிமிஷமிருக்கும்போது நாட்டிலஸ் கப்பல் டாரிஸ் ஜலசந்தியைவிட்டு ஒரு வித சேதமுமில்லாமல் புறப்படும்.

இதன்மேல் நான் நீமோவை விட்டு, கான்ஸெல் இருந்த இடத்திற்குப்போனேன்.

நான்:—கான்ஸெல், இந்தக்காட்டாள்களைப்பற்றி வெகு பயத்துடன் நான் பேச, அவன் பதில் அவர்களைப்பற்றி அலக்ஷியமாய்ப் பேசுகிறான். ஒன்று நிச்சயம். பாரத்தையெல்லாம் அவன் மேல் போட்டு விட்டு, தூங்கப்போ; உனக்கு ஒருவித கஷ்டமும் உண்டாகாது.

நான்:—நெட் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறான்?

கான்ஸெல்:—காங்காருவின் மாம்ஸத்தால் ஒரு பக்ஷணம் பண்ணிக்கொண்டிருக்கிறான். அது வெகு நேர்த்தியாயிருக்கும்.

என்னுடைய படுக்கை அறைக்குள் போய்ப்படுத்துக்கொண்டு தூங்கப் பார்த்தேன். தூக்கம் நன்றாய் வரவில்லை. காட்டாள்கள் மேல் தட்டில் கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார்கள். இராத்திரி முழுவதும் இப்படியே பொழுது போனது. கப்பலிலிருப்பவர்கள் இதைக் கவனிக்கவேயில்லை.

மறுநாள், தட்டுகளைத் திறக்காமலே, வாயுவை சுத்தப்படுத்தி விட்டாயிற்று. மத்தியானம் வரையில் நான் என்னுடைய அறையில் வேலை செய்து கொண்டிருந்தேன். கப்பல் புறப்படுவதற்கு யாதொரு பிரயத்தனமும் காணப்படவில்லை.

மணி இரண்டரை; இன்னும் பத்து நிமிஷத்தில் ஜலம் மிகுந்து, கப்பல் புறப்பட்டு விடும்.

கப்பல் புறப்பட இன்னும் ஐந்து நிமிஷம் இருக்கிறது. காப்டென் நீமோ வெளியில் வந்தார்.

நான்:—என்ன செய்தி?

நீமோ:—தட்டுகளைத் திறந்து விடும்படி உத்திர விட்டிருக்கிறேன்.

நான்:—காட்டாள்கள் உள்ளே வந்து விடமாட்டார்களா?

நீமோ:—தட்டுகள் திறந்திருந்தாலும் அவர்கள் வர மாட்டார்கள். நான் சொல்லுவது உமக்குப் புரியவில்லைபோல் தோன்றுகிறது.

நான்:—கொஞ்சமும் புரியவில்லை.

நீமோ:—அப்படியானால், நீரேவந்து நேரில் பாரும்.

வெளியில் கத்தலும் கூச்சலுமாயிருக்க, நாட்டிலஸ் வேலைக்காரர்கள் கப்பல்களின் தட்டுகளைத்திறந்துவிடுவதைப்பார்த்து, கான்ஸெலும் நெட்டும் திகைத்து நின்றார்கள்.

ஜன்னல்களையும் தட்டுகளையும் திறந்தவுடன் இருபது பயங்கரமான மனிதர்கள் வெளியில் நிற்பது தெரிந்தது. அவர்களில் முன் நின்றவன் உள்ளே இறங்கி

வருவதற்காக படிகளின் கைப்பிடிச்சட்டத்தைத் தொட்டவுடன், ஏதோ சக்தியால் பின்னே சாய்ந்து, கெட்டேன் பிழைத்தேன் என்று சொல்லிக்கொண்டு, பயத்தினால் கூச்சல் போட்டுக்கொண்டு, திரும்பி ஓடினான்.

அவனுடைய தோழர்கள் பத்துப்பேர் அதே விதம் வந்து பயந்து ஓடினார்கள்.

இதையெல்லாம் பார்த்துக் கான்ஸெல் ஆனந்தப் பட்டான். எதனால் இப்படி நடக்கிறதென்று அறிவதற்காக நெட் படிக்கட்டில் ஏறி சட்டத்தைத் தொட்டவுடன், அவனுடம்பெல்லாம் நடுங்கி: "ஐயோ, இதென்ன! மின்னல் சக்தி என் உடம்பில் பாய்ந்துவிட்டதே" என்று சொல்லிக்கதறினான். நாங்களெல்லாம் சிரித்து நெட்டின் உடம்பைத் தடவிக்கொடுக்க, கொஞ்சம் கொஞ்சமாய் அவனுக்கு சௌக்கியமாய்விட்டது.

நாட்டிலஸ் கப்பலும் பிரயாணம் புறப்பட்டது.

---

## 23-வது அத்தியாயம்

### [மாயாத்தூக்கம்]

மறுநாள் ஜனவரி மாசம் பத்தாந்தேதி. நாட்டிலஸ் கப்பல் கடலின் கீழ் வெகு வேகமாய் பிரயாணம் ஆரம்பித்தது. அதன் வேகம் மணியொன்றுக்கு முப்பத்தைந்து மைல் இருக்கும். இந்தக் கப்பலைப் பார்க்கப் பார்க்க எனக்கு ஆச்சரியமாயிருந்தது. அதன் மின்னல் சக்தியால் வெளிச்சமும் உஷ்ணமும் கிடைக்கிறது. கப்பல் போவது அதன் பலத்தால்; எதிரிகள் தாக்காமல் அது காப்பாற்றுகிறது. எவனாவது திருட்

டுத்தனமாய் கப்பலுக்குள் புகத்தொடங்கினால், அவனுக்கு அதனால் மரணம். இவ்விதக் கப்பல் செய்தவனுடைய பெருமையே பெருமை.

நேர் மேற்கேபோய், ஜனவரி மாசம் 11-ம் தேதி "கார்பென்றேறியா" குடாக்கடலுடைய கீழ்பாகம் போய்ச் சேர்ந்தோம். ஒரு பக்கத்தில் கற்பாறைகளும், மற்றொரு பக்கத்தில் கொந்தளிப்பான அலைகளும் பய முறுத்தின. நாட்டிலஸ் கப்பல் இதற்கெல்லாம் பயந்ததல்ல. அலக்ஷியமாய் அவைகளை யெல்லாம் கடந்து, பதின்மூன்றாம்தேதி "டைமார்" தீவுபோய்ச் சேர்ந்தோம். இந்தத் தீவின் அதிபதிகள் "முதலையின் புத்திரர்கள்" என்று தங்களுக்குப் பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அங்குள்ள நதிகளில் முதலைகள் அதிகம். அந்த முதலைகளுக்கு அதிக உபசாரம் செய்து, விருந்துகள் போட்டு, அவைகளை வணங்குவது அந்தத் தீவின் வழக்கம். எந்த அன்னியனாவது ஒரு முதலையைத் தொட்டால் அவனுக்கு நாசகாலம் உடனே வந்துவிடும்.

மத்தியானத்தில் இந்தத் தீவைப் பார்த்தோம் அங்கே நாங்கள் தங்கவுமில்லை, முதலையின் கிட்டப் போகவுமில்லை. இந்த சமயத்தில் "ராட்டி" என்னும் தீவை தூர இருந்து பார்த்தோம். அந்தத் தீவிலுள்ள ஸ்திரீகள் அழகுக்குப் பேர் போனவர்கள்.

நாட்டிலஸ் இதன் மேற்காய்ப்போய் இந்தியா சமுத்திரத்தினருகே வந்து கொண்டிருந்தது. நீமோ

எங்களை எங்கே கொண்டுபோகிறான்? ஆசியா கண்டத்தின் கடலோரமாய்ப் போய் ஐரோப்பாவுக்குச் செல்லுகிறானா? அதில் எனக்கு நம்பிக்கையில்லை. மனிதர்களை வெறுக்கிற சுபாவமுள்ள நீமோ, மனிதர்கள் ஏராளமாயிருக்கிற கண்டங்களின் கிட்டப்போவானா? போகமாட்டான்.

அல்லது, தெற்கேபோய் "நல் நம்பிக்கை முனை" யைச்சுற்றி தக்ஷிண சமுத்திரத்துக்குப் போவது உத்தேசமோ? அல்லது பஸிபிக் சமுத்திரத்துக்குத் திரும்பி சிரமம் இல்லாமல் யாத்திரை செய்ய யோஜிக்கிறானோ? இதெல்லாம் காலக்கிரமத்தில் தெரியும்.

ஜனவரி 14-ம் தேதி, கடலுக்குள் நுழைந்தோம். நாட்டிலஸ் வேகம் குறைந்து, ஒரு ஒழுங்குமில்லாமல் யாத்திரை செய்தது. சில சமயங்களில் காரணமில்லாமலே ஜலத்துக்குள் போகும்; சில வேளைகளில் ஜல மட்டத்துக்குமேலே யாத்திரை செய்யும்.

ஜலத்துக்குள் வெவ்வேறு ஆழங்களில் சீதோஷ்ண ஸ்திதி எப்படியிருக்குமென்பதை நீமோ இப்போதுவிசாரித்தான். 3,000, 4,000, 5,000, 7,000, 9000, 10,000 கெஜம் கீழே போய் உஷ்ணமளக்கும் கருவியை வைத்துப் பார்க்க, எவ்விடத்திலும் ஆயிர கெஜம் ஆழத்துக்கு நாலரை டிக்ரி என்றறிந்தான்.

இதெல்லாம் நீமோ வெகு ஆசையாய்ச் செய்தான்? எதற்காக இதெல்லாம் கண்டு பிடிக்கிறானென்பது மாத்திரம் எனக்குப் புரியவில்லை. மனிதர்களுடைய அபிவிர்த்திக்காக அல்ல; ஏனென்றால், மனிதர்களை

அவன் பார்ப்பதுமில்லை; அவர்களுடன் சகவாஸம் செய்வதுமில்லை. அவனுடைய ஞானமெல்லாம் அவனுடனே அழிந்து போகவேண்டியதுதானே. எனக்காக இதெல்லாம் செய்கிறனென்று நினைப்பதற்கும் காரணமில்லை.

ஜனவரி 15-ம்தேதி காலையில், நீமோவும் நானும் மேல்தட்டில் உலாவிக்கொண்டிருந்தோம்.

நீமோ:—கடல் ஜலம், வெவ்வேறு ஆழங்களில், எவ்வளவு நெருக்கமாயிருக்கும் என்பது உமக்குத் தெரியுமா?

நான்:—தெரியாது; இதுவரையில் அதை ஒருவரும் சரியாய்க் கண்டுபிடிக்கவில்லை.

நீமோ:—நான் அறிந்திருக்கிறேன். என்னுடைய குறிப்புகளில் பிசகேயில்லை. என்னுடைய கப்பலில் நான் அறிந்திருக்கிற விஷயங்கள் உலகத்தில் ஒருவருக்கும் தெரியாது. சனி, பிரகஸ்பதி என்னும் கிரகங்களில் நடப்பது எவ்விதம் உலகத்தில் எவருக்கும் தெரியாதோ, அவ்விதமே இந்தக் கப்பலில் நான் கண்டுபிடிப்பது ஒருவருக்கும் தெரியாது. வேணுமென்றால் சொல்லுகிறேன், கேளும்.

உப்புஜலம் நல்லஜலத்தைவிட அதிக நெருக்கமானது. நல்ல ஜலத்தின் நெருக்கம் 1 என்றால், அட்லாண்டிக் சமுத்திரத்தின் ஜலத்தின் நெருக்கம் $1\frac{28}{1000}$; பஸிபிக் கடலின் நெருக்கம் $1\frac{26}{1000}$; மத்தியதரைக்கடலின் நெருக்கம் $1\frac{30}{1000}$.

நான்:—இவர் மத்தியதரைக் கடலிலும் யாத்திரை செய்திருக்கிறார்.

நீமோ:—அயோனியன் கடலில் $1\frac{18}{1000}$; எட்ரியாடிக் கடலில் $1\frac{29}{1000}$.

இவர் இப்படி சொன்னவுடன், நாட்டிலஸ் கப்பல் ஐரோப்பாவை ஒழித்துவிட்டுப் போகவில்லை என்று அறிந்தேன். இந்த விஷயம் நெட்டுக்குத் தெரிந்தால் அவனுக்கு அதிக சந்தோஷமாயிருக்கும்.

ஜனவரி 16-ம் தேதி நாட்டிலஸ் கப்பல் கடலுக்குள் தூங்கிக்கொண்டிருந்தது. பக்கத்திலுள்ள தட்டுகள் திறந்திருந்தன. விளக்குகளில் வெளிச்சம் இல்லாததால், ஜலத்தில் எங்கும் ஒரே இருட்டாயிருந்தது. தண்ணீர் மட்டத்துக்குக் கொஞ்சம் கீழேதான் இருந்தும், கொஞ்சம் கூட வெளிச்சம் தெரியவில்லை.

இப்படியிருக்கையில் திடீரென்று பிரகாசம் காணப்பட்டது. நாலு பக்கமும் கடலில் ஒரே வெளிச்சமாயிருந்தது. நாட்டிலஸ் கப்பலின் மின்னல்சக்தியாலுண்டான ஜோதியென்று நான் எண்ணினேன். அது பிசகு. வாஸ்தவமென்னவென்றால்: லக்ஷக்கணக்கான சிறுஜீவபிராணிகள் மினுமினுப்பூச்சிகள் போல கடலிலிருக்க, அவைகளின் நடுவில் நாட்டிலஸ் மிதந்ததனால், இந்தப் பிரகாசம் உண்டானது. இந்த ஜோதிக்கு நடுவில் தீபங்களை யொத்த அதிக வெளிச்சமான இடங்கள் காணப்பட்டன. பிரகாசத்தின் மத்தியில் இருட்டாகவு மிருக்கும். இதெல்லாம், வழக்கத்துக்கு விரோதமாய் ஒரு

வீரியமும் அசைவும் தெரிந்தது. இந்தப் பிரகாசத்துக்கு ஜீவனுண்டென்றே தோன்றிற்று.

இந்தக்காக்ஷியைப் பார்க்கப்பார்க்கப் பரவசமாயிற்று. வெளியில் புயல் அடித்துக் கொண்டிருக்கிறதோ? அதனால் தான் வெளிச்சம் அதிகரிக்கிறதோ?

இதேவிதம், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புதிய ஆச்சரியத்தைக் கண்டு மோகித்தோம். நாள் கணக்குப் பண்ணுவதை நான் விட்டுவிட்டேன். வழக்கப்படி நெட் சாப்பிடுகிறதற்கு ஏதாவது தேடிக் கண்டுபிடித்துக் கொண்டேயிருந்தான்.

ஜனவரி 18-ம் தேதியில், கடல் கொந்தளிப்பாயிருந்தது. காற்று கிழக்கேயிருந்து வெகு மும்மரமாய் வீசிற்று. சீக்கிரத்தில் புயல் வீசுமென்று வாயுமானி கொஞ்சநாளாய் அறிவித்தது. மேல்தட்டில்நான் இருந்து கொண்டிருந்தேன். கப்பல் உத்தியோகஸ்தன் வழக்கப்படி தன் மந்திரத்தை உச்சரித்து விட்டுப் போவானென்றெண்ணினேன். ஆனால் இன்றைக்குக் கொஞ்சம் புரியாத, எப்போதும் கேட்காத, சில வாக்கியங்கள் அவன் சொன்னான். நீமோ உடனே ஓடிவந்து தூரதிர்ஷ்டிக் கண்ணாடியை வைத்துக்கொண்டு சுற்றிப்பார்த்தான்.

சற்றுநேரம், காப்டென் அசையாமல் நின்றான்; கண்ணாடியைக் கண்ணிலிருந்து எடுக்கவும் இல்லை, பிறகு உத்தியோகஸ்தனோடு கொஞ்சம் பேசினான். அவனுக்கு மனோசலனம் அதிகமாயிருந்ததென்பது தெளிவாய்த் தெரிந்தது; ஆனாலும் வெகு சாந்தமாயி

ருந்தான். அவனும் உத்தியோகஸ்தனும் ஏதோ வெகு முக்கியமான விஷயத்தைப்பற்றித் தர்க்கித்துக்கொண்டு நின்றார்கள். அவர்கள் பார்த்துப் பார்த்துப் பேசின திக்கில் நானும் உற்றுப்பார்த்தேன். எனக்கு ஒன்றும் தெரியவில்லை, எதுவும் புரியவில்லை.

என்னைக் கொஞ்சமும் கவனியாமல், நீமோ முன்னும் பின்னும் தட்டின்மேல் நடந்துகொண்டிருந்தான். சற்று நிற்பான், மார்பில் கைகளைக் கட்டிக்கொள்வான். சமுத்திரத்தை உற்றுப் பார்ப்பான். இதன் அர்த்தம் என்ன? தரையென்பது கிட்டவேயில்லை.

உத்தியோகஸ்தன் நாலு பக்கமும் பார்த்து முகத்தைச் சிணுக்கிக்கொண்டு, காலைத் தரையில் உதைத்துக்கொண்டு, வெகு படபடப்பாயிருந்தான்.

என்ன விசேஷம் என்று தெரியவில்லை. ஆனாலும், சீக்கிரத்தில் இரகஸ்யம் வெளியாய் விடும். நீமோ உத்தரவின்படி, கப்பல் வெகு வேகமாய் யாத்திரைசெய்ய ஆரம்பித்தது. உத்தியோகஸ்தன் திரும்பவும் தூரத்தில் எதையோ நீமோவுக்குக் காட்டினான். காப்டெனும் மூக்கில் நீரதிர்ஷ்டிக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு உற்றுப் பார்த்தான். எனக்கும் மனசு கலங்கி, கீழேபோய் என்னுடைய வெகு உயர்த்தியான கண்ணாடியை எடுத்துக்கொண்டு நானும் மேலே வந்தேன். நீமோ எனக்கெதிரில் நின்றான்; என் கண்ணாடியைப் பிடுங்கிக்கொண்டான். அவனை எனக்கு அடையாளம் தெரியவில்லை. அவன் முகம் முழுவதும் மாறிப்போய்விட்டது; வெகு கோபமாய் என்னைப்

பார்த்தான். அவன் வாய் பாதி திறந்து, தேகம் திமிர்த்து, கைவிரல்கள் மடங்கி, தலை தோள்களின் நடுவே குனிந்து, சற்றும் அசையாமல் ஸ்தம்பம் மாதிரி இருந்தான். என்னுடைய கண்ணாடியும் அவன் கையிலிருந்து கீழே விழுந்தது.

அவனுக்குக் கோபமுண்டாகும்படியாய் நான் என்ன செய்தேன்? எனக்குத் தெரியக்கூடாத இரகஸ்யங்களை நான் கண்டு பிடித்துவிட்டேன் என்று அவன் எண்ணினனோ?

அப்படியல்ல. என்னைக்கண்டு அவன் கோபிக்கிறவனல்ல, ஏதோ ஒருதிக்கை வெகு கவனமாய்ப் பார்த்துக்கொண்டு நின்றான்.

கொஞ்சநேரத்துக்குப் பிறகு, சாந்தமாய், முன்போலவே, என்னிடத்தில் வெகுமரியாதையாய் இருந்தான். உத்தியோகஸ்தனிடத்தில் சில வார்த்தைகள் பேசிவிட்டு,

நீமோ (என்னை நோக்கி):—ஆரநாக்ஸ், ஆரம்பத்திலே நீர் சில நிபந்தனைக் குள்படவேணு மென்றேனே; அது ஞாபகமிருக்கிறதா?

நான்:—ஆம்; எந்த நிபந்தனையைப்பற்றி இப்போது பேசுகிறீர்?

நீமோ——உங்களை எப்போது விடுதலை செய்வதென்பது என்மனசு. அதுவரையில் நான் உங்களை அடைத்துவைக்க நீங்கள் சம்மதிக்கவேணும்.

நான்:—நீர் இங்கே எஜமானன். அதற்குச் சந்தேகமில்லை; ஆனாலும், ஒருகேள்வி கேட்கட்டுமா?

நீமோ:—உம்முடைய கேள்வியைக் காதில் போட்டுக் கொள்ள மாட்டேன்.

இந்த விஷயத்தில் தர்க்கம் செய்வதில் என்ன உபயோகம்? அவன் சொன்னபடி நான் கேட்கவேண்டியது தான்; அவனை எதிர்ப்பது சாத்தியமல்ல.

கான்ஸெலும் நெட்டும் இருந்த அறைக்குள் போய், கப்பல் தலைவனுடைய தீர்மானத்தைப்பற்றி அவர்களிடத்தில் சொன்னேன். நான் பேசிமுடிப்பதற்குள், நாலு வெகு பலசாலியான ஆள்கள் வந்து, முதல் நாள் இராத்திரி நாட்டிலஸ் கப்பலில் நாங்கள் தூங்கின அறைக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். நெட் நியாயம் பேசத்துடங்கினான்; அதைக்காதில் போட்டுக்கொள்ளாமல் அந்த ஆள்கள் கதவை அறைந்து சாத்திவிட்டுப்போனார்கள்.

கான்ஸெல்:—இதெல்லாம் எதற்காக உங்களுக்குத் தெரியுமோ?

நடந்ததையெல்லாம் நான் சொன்னேன்; அவர்கள் வெகு ஆச்சரியப்பட்டார்கள்; ஆனால் அவர்களுக்கும் விஷயம் ஒன்றும் புரியவில்லை.

நெட்:—வழக்கப்படி சாப்பாடும் வந்து விட்டதே. ஆனால், இது மட்டச் சாப்பாடு.

நான்:—இப்படிப் பேசுவதில் என்ன பிரயோஜனம்? சாப்பாடே வராதிருந்தால் என்ன செய்திருப்பாய்?

நாங்கள் மூன்றுபேரும் ஒருவார்த்தையும் பேசாமல் சாப்பிட்டு முடித்தோம். எனக்கு சாதம் இறங்க

வில்லை. கான்ஸெல் கஷ்டப்பட்டு கொஞ்சம் சாப்பிட்டான். நெட் சாப்பாட்டில் பாக்கிவைக்க வில்லை. இதற்குப் பிறகு மேஜை மேலேயே சாய்ந்து கொண்டு நாங்கள் இளைப்பாறினோம். திடீரென்று விளக்குகளும் அணைந்துபோய் விட்டன. எங்கும் இருட்டாயிருந்தது. நெட் உடனே தூங்கிப் போனான். கான்ஸெலும் மயங்கி விழுந்தான். எனக்கும் ஒருவித மயக்கம் உண்டாயிற்று: தூங்கவேண்டாமென்று எவ்வளவு பார்த்தும், என் கண் மூட ஆரம்பித்தது. சாப்பாட்டில் எதோ தூக்கம் உண்டாகும்படியான லாஹிரி சாமான் சேர்க்கும்படியாய் நீமோ உத்தர விட்டிருக்கவேணும். ஆகையால், எங்களை அடைத்துப் போட்டால் போதாது; எங்களை மயக்கித் தூங்கவைக்க வேண்டியதும் அவசிய மென்று நீமோ நினைத்திருக்க வேணும்.

வெளி ஜென்னல்களை சாத்திவிட்டார்கள். பக்கங்களில் ஜலம் மோதவில்லை. நாட்டிலஸ் தண்ணீர் மட்டத்தை விட்டு உள்ளே போய் விட்டதென்பது தெளிவாய்த் தெரிந்தது.

தூங்காம லிருக்கப் பார்த்தேன்; அது சாத்தியமாயில்லை. வழக்கப்படி நான் மூச்சுவிட முடியவில்லை. தேகமுழுவதும் எனக்கு ஜன்னிபிறந்தது போல் தோன்றிற்று. கண்ணிமைகளைத் தூக்கமுடிய வில்லை. கஞ்சாக்குடிக்கும் பைராவிகள் போல் ஆனேன். தேக ஸ்வாதீனம் எனக்குக் கொஞ்சமுமில்லை. தலைமயக்கமாய் பைத்தியக்கார ஸ்வப்பனங்கள் கண்டு கொண்டிருந்தேன்.

# 24-வது அத்தியாயம்.

## பவழ நாடு.

அடுத்த நாள் நான் தூங்கி எழுந்திருந்த போது, எனக்கு ஒருவிதமான மயக்கமுமில்லை. என்னுடைய சொந்த அறையிலே நான் இருந்ததைக் கண்டவுடன் எனக்கு ஆச்சரியமாயிருந்தது. என்னுடைய தோழர்களும் அவர்களுடைய அறையிலே இருந்தார்கள். இராத்திரி நடந்த விஷயங்களெல்லாம் ஒன்றும் புரியவில்லை. இப்போது நான் சுயஇச்சையாய்த் திரியலாமோ, முன்போலக் கைதிதானோ? கைதியல்ல; அது நிச்சயம். நான் கதவைத் திறந்து, நடுப்படிக்கட்டண்டை போனேன். கான்செலும் நெட்டும் அங்கே என்னருகில் வந்தார்கள். இராத்திரியில் அவர்கள் தூங்கின தூக்கத்தில் அப்போது நடந்தது அவர்களுக்கு ஒன்றும் ஞாபகமில்லை.

நாட்டிலஸ் ஜலமட்டத்தின் மேல் போய்க்கொண்டிருந்தது. அதில் ஒன்றும் மாறவில்லை. நெட் சமுத்திரத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். அது பாழாயிருந்தது; தரையாவது, பாய்மரமாவது, கற்பாறையாவது கிட்டத்திலும், தூரத்திலும், எங்கேயும் காணப்படவில்லை. மேல்காற்று மும்முரமாய் வீசிக்கொண்டிருந்தது.

வழக்கப்படி, பொழுது விடிந்தவுடன், மேலே வந்து கப்பல் முழுவதிலும் புதிய வாயுவை உட்கொண்டோம். சீக்கிரத்தில் மேலே திரும்பி வருவதற்கு இடையூறில்லாம லிருக்கும்படியாய், கொஞ்சம் ஆழக்

துக்குள் கப்பல் போனது. வழக்கத்துக்கு விரோத மாய், அடிக்கடி நாட்டிலஸ் மேலே வந்து, சற்று நேரம் இருந்து, உடனே கீழே போய்க்கொண்டிருந்தது. கப்பல்தலைவன் ...க்கியோகஸ்தன், மேலே வந்த போதெல்லாம், சுற்றிப்பார்த்து விட்டு: “நாட்ரன் ரெஸ்பாக் லார்னி வர்ச்” என்று சொல்லிச் சொல்லிப் போவான்.

நீமோ வரவேயில்லை. கப்பல் ஆள்கள் ஒருவனும் வெளியில் வரவில்லை. உக்கிராணக்காரன் மாத்திரம் சரியான வேளைகளில் வந்து, ஒரு பேச்சும் பேசாமல், எனக்கு வேண்டிய காரியங்களைச் செய்வான்.

மத்தியானம் இரண்டு மணிக்கு என்னுடைய பிரயாண தினசரிக் குறிப்புகளையெல்லாம் தேதிக் கிரமமாக அடுக்கிவைத்துக் கொண்டிருந்தேன். அப்போது கப்பல்தலைவன் என் பக்கத்தில் வர, நான் சலாம்செய்தேன். வெகு அலக்ஷியமாய் பதில் செய்துவிட்டுப் பேசாமல் நின்றான். அவனை நன்றாய்க் கவனித்துப் பார்த்தேன். அதிக களைப்படைந்தவன் போல் தோன்றினான். அவன் தூங்கினதாகவே தெரியவில்லை. முகம்வாடி அதிக விசனப்பட்டவனாகக் காணப்பட்டான். சற்று நடப்பான், சற்று உட்கார்வான், எழுந்திருப்பான், கையில் அகப்பட்ட புஸ்தகத்தை எடுத்து வாசிக்க ஆரம்பிப்பான், உடனே அதை எறிந்துவிடுவான். கடைசியில் என்கிட்ட வந்து:

நீமோ:—ஆரநாக்ஸ், உமக்கு வைத்தியம் தெரியுமா?

நான்:—எனக்குத் தெரியும். வெகுகாலம் வைத்தியம் செய்தே காலக்ஷேபம் செய்தேன்.

நீமோ:—நல்லது. என்னுடைய ஆள்களில் ஒருவனு க்கு வைத்தியம் செய்வீரா?

நான்:—அப்படியானால், கப்பலில் இருப்பவர்களில் ஒரு வனுக்கு உடம்பு அசௌக்யமா?

நீமோ:—ஆம்

நான்:—நான் தயாராயிருக்கிறேன்.

நீமோ:—என்னுடன் வாரும்.

ஒரு அறையில் நாற்பது வயதுள்ள ஆள், இங்கி லீஷ்காரன், படுக்கையில் படுத்திருந்தான். வெகு தீர் மானமாய் நடப்பவன் என்று அவன் முகத்திலே தெரிந்தது.

அவன் பக்கத்தில் போய் உட்கார்ந்தேன். அவ னுக்கு உடம்பு அசௌக்யம் தவிர, தேகத்தில் காய மும் இருந்தது.

இரத்தக்கறைபட்ட துணி அவன் தலையில் கட்டி யிருந்தது. சக்தியற்று சோர்ந்து அவன் படுத்துக் கொண்டிருந்தான். அவனுடைய தலைக்கட்டை அவிழ் த்துக் காயத்தைப் பார்த்தேன். பாபம்! எவ்வளவு ஆழமான காயம்! மழுங்கலான ஆயுதத்தால் அடி பட்டு, தலை பிளந்துபோயிருந்தது; மூளையும் வெளி யில் தெரிந்தது. வெகு சிரமப்பட்டு அவன் மூச்சு விட்டான். என்னை உற்றுப் பார்த்தானே யொழிய, வாயை அசைக்கக்கூட அவனுக்கு சக்தியில்லை. அவன் கையைப் பிடித்து நாதுவைப் பார்த்தேன். நாடியெல் லாம் தளர்ந்திருந்தது; ஜன்னி மேலிட்டுப் போய்விட் டது. சீக்கிரத்தில் அவன் இறந்துபோவது நிச்சயம்.

நான் என்ன செய்தாலும் அவன் பிழைத்திருப்பது சாத்தியமல்ல. இதை யறிந்ததன்மேல், காயத்தை ஜாக்கிரதையாய்க் கழுவி, கட்டுகட்டிவிட்டு, நீமோவின் பக்கமாய்த் திரும்பினேன்.

நான்:—இந்தக் காயம் இந்த மனிதனுக்கு எவ்விதம் உண்டானது?

நீமோ:—எதனால் உண்டானால் என்ன? அவன் பிழைப்பானா? அதைச் சொல்லும்.

நான் பேசத் தயங்கினேன்.

நீமோ:—நீர் பேச யோஜிக்கவேண்டாம். அவனுக்கு பிரெஞ்சு பாஷை தெரியாது.

இதன்மேல் காயப்பட்டவனைக் கவனித்துப்பார்த்து,

நான்:—இன்னும் இரண்டுமணி நேரத்துக்குமேல் பிராணன் இருக்காது.

நீமோ:—ஒரு விதத்திலும் அவனைப் பிழைக்கவைக்க முடியாதா?

நான்:—முடியாது.

உடனே நீமோவுக்கு துக்கம்மேலிட்டு, அழுகை யென்பது இன்னதென்றறியாத அவனுடைய கண்களில் நீர் ததும்பி, பரிதாபப்படத்தக்க விதமாய் அவனுடைய முகமிருந்தது.

வியாதியஸ்தனுக்கு மூச்சு அடங்கிக்கொண்டிருந்தது.

நீமோ:—ஆரனாக்ஸ், நீர் உம்முடைய அறைக்குப் போகலாம்.

வெகு துக்கத்துடன் நான் திரும்பினேன்.

நாள் முழுவதும் ஏதோ கெடுதல் இனி சம்பவிக்குமென்று எனக்குத் தோன்றிக்கொண்டிருந்தது. அன்றை இராத்திரி எனக்குத் தூக்கம் வரவில்லை. தூரத்தில் யாரோ பெருமூச்சுவிடுவதுபோலும், பிரேத மந்திரம் யாரோ சொல்லுவதுபோலும் தோன்றிற்று.

மறுநாள் காலையில் வழக்கப்படி நான் மேல்தட்டிக்குப் போனேன். எனக்குமுன்னாலேயே, நீமோ அங்கே வந்திருந்தார்; என்னைக்கண்டவுடன், அவர் கிட்ட வந்து,

"இன்றைக்கு சமுத்திரத்தின் கீழே நடக்கப்போய் வரலாமென்று யோசிக்கிறேன். உமக்கு வரச்சௌகரியப்படுமோ?

நான்:—என்னுடைய சிநேகிதர்களுடன் வரலாமோ?

நீமோ:—அவர்களுக்கு இஷ்டமிருந்தால் வரட்டும்.

நான்:—காப்டென், நாங்கள் உம்முடைய உத்தரவின்படி நடக்கத்தயாராயிருக்கிறோம்.

நீமோ:—புறப்படுவதற்கு வேண்டிய உடுப்பு முதலானவைகளைப் போட்டுக்கொள்ளும்.

காப்டென் சொன்னதை கான்ஸெலுக்கும் நெட்டுக்கும் சொல்ல, அவர்கள் இருவரும் என்னுடன் போக ஆவலாயிருந்தார்கள்.

இப்போது எட்டுமணி; இன்னும் அரைமணிக்குள் புறப்பட நாங்கள் தயாரானோம். காப்டென் நீமோவுடன் பன்னிரண்டு ஆள்கள் புறப்பட்டார்கள். நாட்டிலஸ் கப்பலை விட்டு வெளியில் சுமார் பத்து கெஜம் கீழேபோனவுடன் தரை தெரிந்தது.

பஸிபிக் சமுத்திரத்தில் இருந்ததுபோல் இங்கே தரையில் மணலுமில்லை, காடுகளுமில்லை. இது பவழ இராஜ்யம் என்று எனக்கு உடனே தெரிந்தது.

பவழம் என்றால், அது எந்தவர்க்கத்தில் சேரும்?

அது ஜீவபிராணியா, தாதுவர்க்கமா, தாவரவர்க்கமா? சாஸ்திரிகள் அதைப்பற்றி பலவிதமாயும் சொல்வார்கள். பூர்வீககாலத்தில் மனிதர்கள் அதை வெகு சிறந்த ஔஷதமாய்க்கொண்டாடினார்கள். தற்காலத்தில் அதை ஆபரணமாகச் செலாகிக்கிறார்கள். 1694ம்வருஷம் "பைஸொனெல்" என்ற சாஸ்திரி முதல் முதல் அதை ஜீவபிராணி என்று வகுத்தார். சமுத்திரத்தின் அடியில் சுதாவாய் கல்ரூபமாய் மாறிய இந்தக் காடுகளைப் பார்க்க எனக்குக்கிடைத்த அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். சில இடங்களில் பவழக்குன்றுகள் உண்டாகிக்கொண்டிருந்தன. இன்னும் கொஞ்சகாலத்தில் அவைகள் உயர்ந்து கப்பல் யாத்திரைக்கு இந்தியா சமுத்திரத்தில் இடையூறாகிவிடும். நாங்கள் கொண்டுபோயிருந்த இலெக்ட்ரிக் வெளிச்சம் சிவந்த பவழங்கள் மேல்வீச, உடனே தோன்றிய வர்ணங்களின் அழகை நாவால் சொல்லி முடியாது.

வெகு அழகாயிருந்த சில பவழங்களை எடுத்து நான் பையில் போட்டுக்கொண்டேன். இவைகளை விலைக்கு விற்றால் ஒருவன் வெகு பணக்காரனாய் விடலாம்.

இதுவரையிலும் பவழம் செடிசெடியாயிருந்தது. திடீரென்று வெகு விநோதமான வளைவுகள் காணப்

பட்டன. இவைகளைப் பார்க்கப்பார்க்க எனக்கு வெகு ஆச்சரியமாயிருந்தது.

இரண்டு மணிநேரம் இவ்விதம் நடந்துபோய் முன்னூறு கெஜம் ஆழம் கீழே போனேம். இந்த எல்லைக்குக்கீழ் பவழம் உண்டாவதில்லை. இங்கே வந்தவுடன் பவழம் சிறிய செடிகளாய்க் காணப்படவில்லை; வெகு உன்னத விருக்ஷங்களாய் உயர்ந்திருந்தது. தலைக்குமேல் வாயால் சொல்லமுடியாத அழகுள்ள மரங்களும், தரையில் ஜமக்காளம் விரித்தது போல் வெகு சிங்காரமாய்ப் படர்ந்திருந்த புல் ஜாதிகளும் எல்லாம் சேர்ந்து என்னை வெகு உற்சாகப் படுத்தியது.

ஏதோ காரணத்தால் நீமோ திடீரென்று நின்றுவிட்டார். நாங்களும் அதேவிதம் செய்தோம். அவருடைய மனிதர்கள் அவரைச்சுற்றி அர்த்தசந்திர பாணம்போல் நின்றார்கள்.

கவனித்துப்பார்த்தபோது, அவர்களில் நால்வர் தோளில் எதையோ தூக்கிக்கொண்டிருப்பதாகத் தெரிந்தது. நெட்டும் கான்ஸெலும் என் பக்கத்திலிருந்தார்கள். தரையைச் சோதித்துப்பார்த்தபோது, இங்கும் அங்கும் மண் குவியல்கள் இருந்தன. அந்தக் குவியல்களெல்லாம் மனிதனுலே செய்திருக்கவேணுமெனத் தோன்றியது. கொஞ்சதூரத்தில் ஒரு பெரிய பவழச்சிலுவையும் காணப்பட்டது. நீமோ உத்தரவின் பேரில், ஒரு ஆள் அந்தச்சிலுவையண்டை போய் ஒரு குழி வெட்ட ஆரம்பித்தான்.

இரகஸ்யம் இப்போது புரிந்தது. முந்தின நாள் இராத்திரி இறந்துபோனவன் பிணத்தைக் குழியில் புதைப்பதற்காகத்தான், நீமோ எங்களை இங்கே அழைத்துவந்தார். குழி ஆழமாய்த் தோண்டப்பட்டது. மீன்கள் இங்கும் அங்குமோடின. குழி வேண்டிய அளவுக்குப் பெரிதாய் வெட்டப்பட்டவுடன், பிணத்தைத் தூக்கிக் கொண்டிருந்த நால்வரும் அதைக்கீழே இறக்கிக் குழியில் வைத்தார்கள். எல்லோரும் உடனே முழங்கால்படியிட்டோம். சீக்கிரத்தில் ஆள்கள் குழியில் மண்போட்டு மூடிவிட்டார்கள்.

இந்தக் கிரியை முடிந்தவுடன், நாங்கள் எல்லோரும் நாட்டிலஸ் கப்பலுக்குத் திரும்பினோம். சுமார் மத்தியானம் ஒரு மணிக்கு கப்பலுக்குத் திரும்பிவந்து சேர்ந்தோம்.

என்னுடைய அறைக்குப் போய், உடுப்பை மாற்றிவிட்டு, மேல் தட்டுக்குப் போனேன். நீமோவும் அங்கே வந்தார்.

நான்:—நான் சொன்னபடியே அந்த மனிதன் இராத்திரியே இறந்துபோனானே?

நீமோ:—அப்படியே தான் நடந்தது, ஆரநாக்ஸ்.

நான்:—பவழத்தின் நடுவில் இருந்துகொண்டு அவன் ஜீவாத்மா இப்போது சிரமப் படாமலிருக்கும்

நீமோ:—எல்லோரும் அவனைமறந்து விடுவார்கள். நாங்கள் மாத்திரம் மறக்கமாட்டோம். பாபம்! அவனைப்புதைத்துவிட்டோம். குழியின்மேல் போட்டு மூடின சாமான் "ஸிமெண்ட்" மாதிரியான

தால், பிரேதத்தை ஒரு ஜீவபிராணியும் தொட முடியாது. இப்படிச்சொல்லிவிட்டு, காப்டென் தன் கைகளால் முகத்தை மூடிக்கொண்டார். கண்ணிலிருந்து ஜலமும் வந்தது. அதை ஒளிக்க அவரால் முடியவில்லை.

ஆரான்:—காப்டென், உம்முடைய தோழர்கள் இறந்து போனபோது, அவர்களைப் புதைக்கத் தகுந்த இடம் கண்டுபிடித்திருக்கிறீர். கொடிய பற்களுடைய சுறாமீன்கள் அவர்கள் கிட்டப்போக முடியாது. அவர்கள் பிரேதத்துக்கு சாந்தி உண்டாகும் என்பதற்குச் சந்தேகமேயில்லை.

நீமோ:—ஆமாங்காணும், நீர் இவ்வளவு யோசித்துச் சொல்வது எனக்கு வெகு ஆறுதலாயிருக்கிறது. நிஜந்தான். இந்த ஸ்தலத்தில் அந்த மீன்களும் அணுக முடியாது, மனிதர்களும் ஹிம்சிக்க மாட்டார்கள்.

(முதல் பாகம் முற்றிற்று.)